R & C PROPERTY LAWYERS LLP
& NOTARY PUBLIC
10a Upper Tooting Road, London SW17 7PG
Telephone: 02087724920
Conveyancing Services:
Residential, Commercial Conveyancing,
Notarial Services:
Notarisation & Legalisation of Documents
Power of Attorneys,
SENTHURAN THAVARAJA LLB (Hons) Solicitor & Notary Public
Consultant : RAJA THAVARAJA LLB Solicitor

A Freely Circulated Monthly

# புதினம்

PUTHINAM
DECEMBER 2017
மலர் 21
இதழ் 11

LINGA & CO
LEGAL ADVISORS AND IMMIGRATION SPECIALISTS
V.P.Lingajothy
LLB (Hons), MSc, Dip Fms, Acilex
Principal, Immigration Specialist
46 HIGH STREET COLLIERS WOOD
LONDON SW19 2BY
TEL: (020) 8544 9285 FAX: (020) 8542 9530
EMAIL : LJLEGALADVISORS@YAHOO.CO.UK
OISC

லண்டனில் முதலாவது தமிழர் நகை மாளிகை
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்
WESTERN Jewellers
Tooting Branch:
230 Upper Tooting Road, London Sw17 7EW
Tel : 02087673445
Wembley Branch:
5, Plaza Parade, 29-33 Ealing Road, Wembley, MiddX HAO 4YA
Tel : 02089030909

THARANI JEWELLERY
அதி குறைந்த வட்டி வீதத்தில்
அடைவு பிடிக்கும் நகை மாளிகை
54 Ealing Road, Wembley, Middlesex HA0 4TQ.
Tel: 020 8902 7111, 020 8902 6777

# மீண்டும் இந்தியா..!

கூட்டமைப்பில் குழப்பம்.

அதைவிடப் பெருங்குழப்பம் மக்களுக்கு.

ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் விடுவிக்கப்படவில்லை.

அரசியல் கைதிகள் கொழும்புச் சிறைக்குள்....!

உள்ளூராட்சி தேர்தல் வேறு வரப்போகிறது.

யாருக்கு வாக்களிப்பது?.

கூட்டமைப்பிலிருந்து சுரேஷ் வெளியேறிவிட்டார்.

அவர் கட்சியிலிருந்து போட்டியிட்டு வெற்றிபெற்ற சிலர், தமிழரசுக்கட்சிக்குத் தாவிவிட்டார்கள்.

தமிழரசுக் கட்சியில் ' சீட்' கிடைக்காவிட்டால், சுரேசுடன் இணைவது. பின் வெற்றிபெற்றவுடன் ஏதோவொரு காரணத்தைச் சொல்லி தமிழரசுக் கட்சியோடு சங்கமமாவது என்று தமிழ்நாட்டு அரசியலில் கற்றுக் கொண்டதை இங்கு பிரயோகித்துப் பார்க்கிறார்கள்.

சும்மா போனாலும் பரவாயில்லை, ' தேசியத்தலைவர் பிரபாகரன் உருவாக்கியதே இந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு. அவர் காட்டியதே அந்த வீட்டுச் சின்னம்' என்று தங்களை நியாயப்படுத்த எல்லாப் பொய்களையும் அவிழ்த்துவிடுகிறார்கள்.

இந்த ஆண்டின் பெரிய நகைச்சுவை பேச்சாக இந்த வீட்டுச் சின்னக் கதை இருக்குமென்று நம்பலாம்.

கூட்டமைப்பு உருவானபோது, தமிழரசுக் கட்சி அந்த கூட்டுக்குள் இல்லை என்ற உண்மைகூட இவர்களுக்குத் தெரியவில்லை.

'சனங்கள் இதனை மறந்திருப்பார்கள்' என்று நினைக்கிறார்கள். அதுதான் தங்களது அரசியல் மூலதனம் என்று நம்புகிறார்கள்.

வடமாகாணசபை உறுப்பினர்களையும் சபை நிர்வாகிகளையும் டெல்லிக்கு அழைத்து, பிராந்திய அரசியல் வகுப்பினை இந்திய வெளியுறவுக் கொள்கை வகுப்பாளர்கள் எடுத்தபின்னரே இத்தகைய உடைவு வேலைகள் ஆரம்பமாகியுள்ளது போல் தெரிகிறது.

என்னமோ...வல்லரசுகளின் மோதலுக்குள், தாயக

- தொடர்ச்சி 25ம் பக்கத்தில்

சனிபெயர்ச்சி உங்களுக்கு எப்படி? 16ம் பக்கம்

HYPERTECH,
Refrigeration/Shop Fitters
14, Whytecliffe Road, Purley, CR82AU. Ph: 079 1010 1022
Refrigeration and Air-condition Installations
Service & Preventative maintenance
Total Shop Fitting
Three and single phase wiring
20 years of experience in commercial refrigeration
used and refurbished remote chillers available from £2,500.00
Deal any noise issues with local councils
walk in Cold/freezer rooms are on sale at 20% discount

செல்வராஜா கோல்டு ஹவுஸ்
Tooting Broadway
16வது ஆண்டு நிறைவை முன்னிட்டு
நகைகள் அனைத்தும் செய்கூலியுடன்
£309 பவுண்கள் மட்டுமே
162 B, MITCHAM ROAD, LONDON SW17 9NJ
TEL: 020 87673795

LycaFly
call us 24X7
0207 132 32 32
Colombo பயணமா?
எங்குமில்லாத சிறப்பு சலுகை.
PLUS
FREE LYCAMOBILE TOP-UP
*T&Cs Apply - Top-up offer excludes on selected airlines

தரமான தங்கத்திற்கு லண்டனில் சிறந்த இடம்
LAKSHMIS JEWELLERS
276, High Street North, London E12 6SA,
Tel: 020 8470 5600 FAX: 020 8470 3448

Lyca TV

உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்

ஒருவருட
இணைப்புச் சந்தா
£69

புதுப்பித்தல்
£49
14 மாதங்கள்

SET TOP BOX
INCLUDED



LycaTV App ஐ
Download செய்து
பார்வையிடலாம்

ஒரு மாதச் சந்தா
£4.99
மட்டுமே

Google play · App Store · tv · Roku · AirPlay · chromecast · Samsung SMART TV · LG Smart TV · androidtv · amazon fireTV · kindle fire · XBOX

50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்

விஜய் · ZEE தமிழ்

7000க்கும் அதிகமான TAMIL & HINDI திரைப்படங்கள்



SUBSCRIBE NOW!

0207 132 2727

FULL TERMS AND CONDITIONS ARE AVAILABLE AT WWW.LYCATV.TV. LYCATV IS A TRADEMARK AND SERVICE MARK BELONGING TO LYCAMEDIA LTD. ANY PRODUCT OR SERVICE OR TRADE NAME OTHER THAN THOSE OWNED BY LYCAMEDIA LTD, THAT IDENTIFY A THIRD PARTY AS THE SOURCE, THEREOF MAY (EVEN IF NOT SO INDICATED) BE THE SERVICE OR TRADEMARK OF THAT RESPECTIVE ENTITY OR INDIVIDUAL. ANY UNAUTHORIZED USE OF THE LYCATV MARK IS STRICTLY PROHIBITED.

www.lycatv.tv

# ‘ஒருமித்த’ நாட்டில் ஒற்றையாட்சியா? சமஷ்டியா? இணைப்பாட்சியா?

இராணுவத்தால் சிதைத்தழிக்கப்பட்ட மாவீரர் துயிலுமில்லங்கள், மக்களால் புனரமைக்கப்படுகின்றன.

இதுவரைகாலமும், இறந்தவர்களை நினைவுகூரும் அடிப்படை மனித உரிமைகூட இலங்கையில் மறுக்கப்பட்டுவந்தன.

இப்போது இது அனுமதிக்கப்படுவதால், நல்லிணக்கத்தை உருவாக்க ஆட்சியாளர்கள் ஆரம்பித்துவிட்டார்கள் என்று ஒரேயடியாக பாராட்டிவிட முடியாது.

காணாமல் போகடிக்கப்பட்டவர்களின் குடும்பங்களும், நிலத்தை இராணுவத்திடம் இழந்த மக்களும் இன்னமும் போராடிக்கொண்டுதானிருக்கிறார்கள்.

நீண்டகாலச் சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் நிலைகுறித்து, இந்த நல்லாட்சி (?) அரசு வேண்டாவெறுப்புடனே நடந்து கொள்கிறது.

‘ஏதோ சட்டச் சிக்கல் இருக்கிறது, சட்டமா அதிபர் திணைக்களம் பதில் சொல்ல வேண்டும், ரணிலோடு பேசுகிறோம், மைத்திரியோடு தனிப்பட்ட சந்திப்புக்களை மேற்கொள்கிறோம்’ என்றவாறு தமிழ் அரசியல் தலைவர்கள் கடந்துசெல்கிறார்கள்.

சிறைக்கைதிகளை சனாதிபதி விடுதலை செய்யும் நிகழ்வுகள் ஒவ்வொரு வருடமும் அரங்கேறுகிறது.

இந்த விவகாரத்தில் மட்டும் நல்லாட்சி அதிகாரவாசிகளுக்கு என்ன பிரச்சினை?.

எதுவித நிபந்தனையுமின்றி, மேற்குலக- இந்திய பிராந்திய நலனிற்கு இசைவாக, தமிழ் மக்களின்



> **’புரட்சி வெடிக்கும்’ என்கிறார் இன்னுமொரு பழந்தலைவர். கார்த்திகை மார்கழி மாதமானால், தையில் ’போராட்டம் வெடிக்கும்’ என்பார். மாவீரர் தினம் முடிந்தவுடன், மீண்டும் யாப்புச் செங்கோல் கையிலெடுக்கப்படும்.**

வாக்குகளை பெற்று ஆட்சிமாற்றத்திற்கு உதவிய தமிழ் அரசியல் தலைமைகளால், அரசியல் கைதிகளைவிடுவிக்கமுடியவில்லை என்பது பெருங்கொடுமை.

கூட்டமைப்பிற்குள் இருக்கும் உள்முரண்பாடுகளை தீர்ப்பதில், கோஷ்டி பிரிப்பதில் செலவிடும் பெரும்பகுதி நேரத்தை, மக்கள் முகங்கொள்ளும் பிரச்சினைகளுக்கு ஒதுக்கினால் என்ன என்பதுதான் வெகுமக்களின் கேள்வி.

அடிப்படைப் பிரச்சினைகளிலிருந்து மக்களை மடைமாற்றம் செய்வதற்கு உள்கட்சி விவகாரம் மற்றும் இடைக்கால அரசியல் யாப்பு முன்மொழிவு என்பன பூதாகரமாக்கப்படுகின்றன.

ஆட்சிமாற்றம் என்பது யுத்தவடுக்களை சுமந்துநிற்கும் மக்களின் வாழ்வில் புதிய மாற்றங்களை ஏற்படுத்தவில்லை.

பிணைமுறி விவகார திரைக்குள் , எகிறிவரும் வாழ்க்கைச் செலவுகள் குறித்த உண்மைகள் மறைக்கப்படுகின்றன.

இது பற்றியதான ஆழமான பார்வையை, சரியான புள்ளிவிபரங்களோடு அடுத்த பதிவுகளில் முன்வைப்போம்.

தற்போது உத்தேச அரசியல் யாப்பு குறித்தே சமூகவலைத்தளங்களிலும், அச்சு ஊடககங்களிலும் பரவலாகப்பேசப்படுகிறது.


‘அது வரும் ஆனா வராது’ என்பதுபோல்தான் தமிழ் தலைவர்களும் தற்காப்பு நிலையெடுத்துப் பேசுகிறார்கள்.

‘புரட்சி வெடிக்கும்’ என்கிறார் இன்னுமொரு பழந்தலைவர். கார்த்திகை மார்கழி மாதமானால், தையில் ’போராட்டம் வெடிக்கும்’ என்பார்.

உள்ளூராட்சி தேர்தல் வருவதால், மாவீரர் புகழ்பாடும் புரட்சி கீதங்களும், மாவீரர்தின அழைப்புகளும் அவரிடமிருந்தே வருகின்றன.

மாவீரர் தினம் முடிந்தவுடன், மீண்டும் யாப்புச் செங்கோல் கையிலெடுக்கப்படும்.

ஒரே கூட்டு பல குரல்களில் பேசும்.



சமஸ்டி இல்லாவிட்டால் புரட்சி வெடிக்கும் என்பார் ஒருவர்.

வந்தாலும் வரலாம் என்பார் இன்னொருவர்.

எக்கிய ராஜ்யவிற்குள் எல்லாமே ( சமஸ்டி) அடங்கும் என்பார் அரசியல் துறைப் பொறுப்பாளர்.

இந்த ஆரவாரம் தணியும் போது, ’எக்கிய ராஜ்ய என்றால் ஒருமித்த நாடு, அது ஒற்றையாட்சி என்று அர்த்தப்படாது’என்று பூகோள அரசியல் புது விளக்கம் கொடுக்க ஆரம்பிப்பார்கள்.

72, 78 இல் கொண்டுவரப்பட்ட குடியரசு அரசியல் யாப்பில், *Unitary State* , எக்கிய ராஜ்ய, ஒற்றையாட்சி என்றேமும் மொழிகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்போது தமிழில், ஒற்றையாட்சியை ’ஒருமித்தநாடு’ என்று தன்னிலை விளக்கம் அளிக்கின்றனர் கூட்டமைப்பினர்.

ஆனால், சிங்களச் சொல்லில் எந்த மாற்றமும் இல்லையே..!.

சட்டச் சிக்கல் ஏற்படும்போது, எந்த மொழிச் சொல்லை நீதிமன்றம் அதிகாரபூர்வமாக ஏற்றுக் கொள்ளும்??.

’எக்கிய ராஜ்ய’ என்கிற சொல்லாடல் ஒருமித்த நாடா? இல்லையா? என்பதற்கு அப்பால், அந்த ஒருமித்த நாட்டில் ஒற்றையாட்சியா? என்பதுதான் இங்கு விவாதத்திற்குரிய விவகாரமாக இருக்கிறது.

அரசியலமைப்பானது எந்த அரசியல் யாப்புக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்படுகிறது என்பதுதான் இங்குள்ள பிரச்சினை.

சகல சட்டமியற்றும் அதிகாரங்களும், நாடாளுமன்றத்திடம் குவிந்திருக்கும் ஒற்றையாட்சியா?, அல்லது இரு தேசங்களின் இறைமையை ஏற்றுக் கொண்ட கூட்டு ஆட்சியா ( *confederation*) ? அல்லது 2009 ஆகஸ்டில் தமிழ்தலைமையால் முன்வைக்கப்பட்ட பிராந்தியங்களின் ஒன்றியமா? என்பதனை முதலில் தெளிவுபடுத்த வேண்டும்.

இன்னும் இலகுவாகச் சொல்லப்போனால், ஒருமித்த நாட்டிற்குள் இருக்கும் ஆட்சி முறைமை என்ன?.

தீர்வினை நோக்கிய நேர்மையான உரையாடலில், ‘எக்கிய - ஒருமித்த’ போன்ற திசைதிருப்பல் வாதங்கள் தேவையற்றது.

ஆட்சி முறைமை என்ன?.

இதற்கு விடை சொன்னால் போதும். ■

# புதினம்
PUTHINAM

லண்டன் தமிழர்களின்
அபிமான இலவச இதழ்

ஆசிரியர்:
ஈ.கே.ராஜகோபால்
E.K.Rajagopal

வடிவமைப்பு
சத்யன் லே-அவுட்
9551395516

அலுவலக முகவரி:
PUTHINAM
38 MOFFAT ROAD
LONDON SW 17 7EZ
TEL: 020 8767 8004
MOB: 077 353 46890
EMAIL:
editor@londonputhinam.co.uk

'ஈழகேசரி' வெளியீட்டு
நிறுவனத்துக்காக
21 ஆண்டுகளாக வெளிவரும் இலவச
இதழ். தபாலில் பெற விரும்புவோர்
முத்திரைச் செலவான
£25 பவுண்களை மட்டும்
Puthinam என்ற பெயருக்கு
காசோலையாக
அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.


## முக்கிய அறிவிப்பு

### 'புதினம்' விடுமுறை

**ஜனவரி - 2018**
**இதழ் மட்டும் வெளிவராது**

'புதினம்' அலுவலகத்துக்கு டிசம்பர் 15ம் திகதி முதல் ஒரு மாத காலத்துக்கு விடுமுறை ஆதலால், ஜனவரி 2018 இதழ் மட்டும் வெளிவரமாட்டாது. வழமைபோல் பிப்ரவரி 2018 தொடர்ந்து வெளிவரும் என்பதை வாசகர்கள், விளம்பரதாரர்களுக்கு அறியத்தருகிறோம்.

அனைவருக்கும் 'புதினம்' தனது இதயபூர்வமான புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

**BEFORE THE PRINCIPAL**
**JUDGE FAMILY COURT, CHENNAI, INDIA**
**H.M.O.P.No.1516 of 2017**

**K.Ravichandran,**
S/o. R.Krishnasamy,
No.11/6, Guru Appa Garden,
Tondaiarpet,
Chennai, India - 600 021.
... Petitioner


-Vs-

**C.Dhatchayani,**
D/o. Chitrambalam,
50 Ethelbert Gardens,
Ilford, London - IG2 6UN
... Respondent

That the above H.M.O.P.No.1516 of 2017 filed by the petitioner was filed against the respondent before the Hon'ble Principal Judge Family Court, Chennai, was pleased to order paper publication for appearance of the respondent namely, C.Dhatchayani, D/o.Chitrambalam. You are required to appear in the above case H.M.O.P.No.1516 of 2017 before the Hon'ble Principal Judge Family Court, Chennai, on 14-12-2017 at 10.15 am by your selves, failing which the case will be decided in your absence.

By
**K.RAVICHANDRAN,**
**Petitioner**


## இது போன்ற நூல் இதுவரை வந்ததே இல்லை!




'நிர்வாணம்' நூல் நான் ஒரு இந்து என்று என்னை பெருமைப்பட வைத்திருக்கிறது சபாஷ் டாக்டர் ஸ்ரீதரன்! இவரது முன்னைய படைப்பான 'சிதம்பர சக்கரம்' பற்றிச் சொன்னதையே மீண்டும் சொல்கிறேன். இது போன்ற நூல் இதுவரை வந்ததே இல்லை. **- வழக்கறிஞர். முன்னிலை ஊடகவியலாளர் விமல் சொக்கநாதன்**

அற்புதமான கருத்துக்களை சொற் சித்திரமாக்கி - பொற்புதமாகப் புனைந்திருக்கிறார் டாக்டர் ஸ்ரீதரன். இவை தோரணங்கள் போலத் தொங்கத் தக்கவை. அகத்தின் அழுக்குகள் கழுவப்பட்டால் பிணியில்லை என்று கூறுவது - ஆண்டு பலவாக நரையில் வாடுதல் என்ற புறநானூற்றுப் பாடலை நினைவில் கொண்டு வருகிறது. புலம்பெயர் நாட்டில் தமிழ் மக்களின் போலி வேடங்களை தொட்டுக் காட்டிப் பரம்பரை நோய்களின் வேர்களுக்கு மருந்து துளிகள் விடுகிறார்.

**- புலவர்மணி இளவாலை அமுது**

**'புதினம்' வெளியீடாக வெளிவந்துள்ள டாக்டர் ஸ்ரீதரனின் 'நிர்வாணம்' நூலை பெற விரும்புகிறவர்கள் Puthinam என்ற பெயருக்கு காசோலை அல்லது போஸ்ட் ஓடரோ தபால் செலவு உட்பட £5.00 பவுண்கள் அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.**

Puthinam, 38 Moffat Road, London SW17 7EZ





நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

## ஆதிவாசி இயற்கை மூலிகை வைத்தியம்

### S.L.சகாதேவராஜு (கண்ணா)

ஆதிவாசி இயற்கை மூலிகை வைத்தியசாலையில்,
கைநாடி பார்த்து உங்கள் சகலவிதமான நோய்களுக்கும்,
இயற்கை மூலிகை வைத்தியப்படி தீர்த்து வைக்கப்படும்.

தலைமுறை தலைமுறையாய் செய்யும் வைத்தியம், இப்பொழுது லண்டனில்



- ஆஸ்த்மா
- தும்மல்
- புற்றுநோய்
- நீரிழிவு
- எக்சிமா
- மாதவிடாய் பிரச்சனை
- ஆண்மை குறைவு
- தோல்வியாதி (கடி)
- முடி உதிர்தல்
- இரத்த அலர்ஜி
- தலைவலி
- பக்கவாதம்
- குடற்புண்
- மூட்டுநோய்
- இடுப்புவலி
- பயம்

மற்றும் எந்தவிதமான நோய்கள் உடம்பில் இருந்தாலும்
இயற்கை மூலிகை வைத்தியப்படி,
பக்க விளைவுகள் எதுவுமின்றி குணப்படுத்த முடியும்.

**Unit-12 Chandani Bazar**
29/33 , Ealing Road, Wembley, Middlesex, London, HA0 4YA
**Tel:- 07448 55 48 48**
Contact in India: 0091 809 609 1166 & 0091 809 609 6633
Email: andhraguruji@gmail.com


## உயர்வாசற்குன்று முருகன் கோவில்
## HIGHGATEHILL MURUGAN TEMPLE

200A, Archway Road, London N6 5BA Tel: 020 8348 9835 Fax: 020 8482 6508

### திருவிழாக்களும் விசேட பூசைகளும்
### Aupicious Days, Special Poojahs & Festivals - 2017

**December- 2017 நடைபெறும் நிகழ்வுகள்**

| | | | |
|---|---|---|---|
| 01 | Friday | Pirathosha Viratham | பிரதோச விரதம் |
| 05 | Saturday | Thirukkarthigai Viratham, Kumaralaya Theepam* | திருக்கார்த்திகை, குமாரலய தீபம்* |
| 03 | Sunday | Sarvalaya Theepam*, Full Moon | சர்வாலய தீபம்*, பூரணை |
| 04 | Monday | Vinayagar Viratham Starts | விநாயக விரதம் ஆரம்பம் |
| 06 | Wednesday | Sankadakara Chathurthi* | சங்கடகர சதுர்த்தி விரதம்* |
| 09 | Saturday | Thiruvasaga Vizha Children Contest | திருவாசக விழா போட்டி நிகழ்ச்சி |
| 13 | Wednesday | Ekathasi Viratham | ஏகாதசி விரதம் |
| 15 | Friday | Pirathosha Viratham | பிரதோச விரதம் |
| 16 | Saturday | Thiruvasaga Vizha | திருவாசக விழா |
| 17 | Sunday | Amavasai Viratham | அமாவாசை விரதம் |
| 22 | Friday | Chathurthi Viratham* | சதுர்த்தி விரதம்* |
| 23 | Saturday | Thiruvembavai Starts | திருவெம்பாவை ஆரம்பம் |
| 24 | Sunday | Vinayaga Sasti Viratham ends | விநாயக சஷ்டி விரதம்* |
| | | Ev: 108 Shangabisham | மாலை 108 சங்காபிசேகம் |
| 29 | Friday | Vaikunda Ekathasi Viratham | வைகுண்ட ஏகாதசி விரதம், |
| 30 | Saturday | Sani Pirathosam, Karthigai Viratham* | சனிப்பிரதோசம் கார்த்திகை விரதம்* |
| 31 | Sunday | Nadesar Abishegam | நடேசர் அபிசேகம் |
| 01 | Mon 2018 | Aruthira Tharsanam* | ஆருத்திரா தரிசனம்* |



# விமலின் பக்கம்

அமெரிக்காவின் தென் கிழக்குப் பகுதியில் கால்களை நீட்டியபடி காணப்படும் விசித்திரமான மாநிலம் *Florida*. பெருமழையுடன் கூடிய பேய்க்காற்று சூறாவளி அனர்த்தம் அடிக்கடி நிகழும். இந்த மாநிலத்தில்தான் என் மனைவியின் மூத்த சகோதரியின் புதல்வி குடும்ப நல மருத்துவராகப் பணியாற்றி வருகிறார். அவரது மகள் விஜி - கல்லூரி மாணவி. *Florida*-வில் வீசவிருக்கும் சூறாவளி பற்றி எனக்கு அவ்வப்போது 'வானிலை அறிக்கை' அனுப்புவாள்.

"அடுத்த வாரம் 'ஜேன்' வருவாள் என்று அஞ்சுகிறோம். சில சமயங்களில் அவள் இங்கு வராமல் வேறு திசையில் போய் விடுவாள். கடந்த வருடம் 'கற்றினா' வரப்போவதாக அச்சுறுத்திவிட்டு வரவேயில்லை! என்று தொலைபேசியில் அல்லது மின்அஞ்சலில் எனக்கு வானிலை அறிக்கை வாசிப்பாள்!

அமெரிக்காவில் வீசும் பேய்ச் சூறாவளிகள் அத்லாந்திக் மாகடலைத் தாண்டி இங்கு பிரிட்டனை ஒருபோதும் தாக்குவதே கிடையாது!

கடந்த ஆகஸ்ட் 26-ம் திகதி அமெரிக்காவின் ரெக்சாசை உருக்குலைத்த ஹார்வி என்ற சூறாவளி, அக்டோபர் 5-ம் திகதி அமெரிக்காவின் ஹொலிவூட் திரையுலகத்தைப் புரட்டிப் போட்டு அக்டோபர் 31-ம் திகதி பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தையே அதிரவைத்தது.

ரெக்சாஸ் மாநிலத்தில் ஆகஸ்ட் மாதக் கடைசியில் ஹார்வி என்ற பேய்ச் சூறாவளி அனர்த்தங்களை விளைவித்தது உண்மைதான். ஆனால், நான் இங்கு குறிப்பிடுவது அதே ஹார்வி என்ற பெயர் கொண்ட மிக மிக உயர் பொறுப்பில் உள்ள அமெரிக்க சினிமாத் தயாரிப்பாளர் ஹார்வி பற்றியே!

திரு. ஹார்வி வைன்ஸ்டீன் பற்றி 'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகை ஒரு நீண்ட கட்டுரை எழுதி அவரது பாலியல் சல்லாபங்களை அம்பலப்படுத்தியதும் அமெரிக்கத் திரை உலகம் ஆட்டம் காணத் தொடங்கியது.



ஹார்வி வைன்ஸ் டீன்

காரணம் தமிழர்கள் மத்தியில் ஏவிஎம் ஸ்ரூடியோ அதிபர் ஏ.வி.மெய்யப்பன் எப்படியோ, ஜெமினி ஸ்ரூடியோ அதிபர் எஸ். எஸ் வாசன் எப்படியோ அதை விட மதிப்பிலும் செல்வச் செழிப்பிலும் பல மடங்கு உயர்ந்தவர் ஹார்வி வைன்ஸ்டீன்! அவரது படத்தில் ஒரு சில்லறை நடிகை நடிக்க வந்துவிட்டால் அவள் ஹொலிவூட்டின் முதல் தர நட்சத்திரமாகி விடுகிறாள். காரணம் அவரது படங்கள் எப்போதுமே வருடாந்த ஆஸ்கார் விருதை தட்டிக் கொண்டு போவது வழக்கம்.

எனவே ஹார்வியை எங்கள் கடவுள் - எங்கள் ஆண்டவர் என்றே சினிமா நடிகைகள் வர்ணிக்கிறார்கள்!

இந்த ஆண்டவனின் கடைக்கண் பார்வை பெற அருட்கடாட்சம்; கிடைக்கத் தாம் சாமிக்கு வழங்கிய நைவேத்தியம் என்ன என்பதை எந்த நடிகையும் கூற முன்வரவில்லை. தமிழக கோடம்பாக்கம் நடிகையர் போலவே ஹொலிவூட் நடிகைகளும் மௌனம் காத்தார்கள். ஆனால், அக்டோபர் 8-ம்திகதி 'நியூயோர்க் டைம்ஸ்' ரகசியங்களை பிய்த்து பிய்த்து எழுதியதும் நடிகைகளும் வாய் திறந்து பேசத் தொடங்கினார்கள்.

திரையுலக ஜாம்பவான் ஹார்வி தங்களிடம் கேட்டுப் பெற்றதென்ன? கேளாமலே எடுத்தது என்ன? இப்படி அக்கு வேறு ஆணி வேறாக 'கடவுள்' ஹார்வியின் படுக்கையறை ஆதிமூல அந்தரங்கங்களை அன்றைய புதுமுக நடிகைகள் (இன்றையஉச்சநிலை நட்சத்திரங்கள்) சந்திக்கு கொண்டு வந்து கொட்டினார்கள்.

விளைவாக ஹார்வியின் சினிமா நிறுவனமே அவரைப் பதவியில் இருந்து வெளியேற்றியது.



கெவின் ஸ்பெசி

இதேநேரத்தில் இன்னோர் அமெரிக்க நடிகர் கெவின் ஸ்பேசி என்பவர் - 36 வருடங்களாக (1980 முதல் 2016) வரை) நடத்தி வந்த 'இளைஞர் தேடுதல் வேட்டை' அம்பலமாகியது. சினிமாவில் சேர விழையும் இளைஞர்களை ஓரினப் புணர்ச்சிக்கு உட்படுத்துதல் இவரது தனிக் கலையாக இருந்து வந்தது.




மீ டூ (நானும் ) பாதிக்கப்பட்ட பெண்கள் இயக்கம்

இலண்டனின் ஷேக்ஸ்பியர் நாடகங்கள் நடத்தப்படும் ஓல்ட்விக் தியேட்டரில் பயிற்சியாளராகப் பணியாற்றி வந்த இந்த முன்னாள் ஹொலிவூட் நடிகர் பற்றி லண்டனின் ஒரு மதுபானக் கடையின் வெயிட்டர் காவல் துறையிடம் முறையிட்டார்.

ஹொலிவூட் தொலைக்காட்சியில் புகழ்பெற்ற ஒரு செய்தி அறிவிப்பாளர் ஹெதர் என்ற பெண், தனது 18 வயது மகனுக்கு கெவின் மது வாங்கிக் கொடுத்து தனது பாலியல் ஓரினப் புணர்ச்சிக்கு மகனைப் பயன்படுத்தியதாக பத்திரிகைகளிடம் குறிப்பிட்டார்.



அமைச்சர் ஃபாலன்

பிரிட்டிஷ் காவல் துறையினர் பிரிட்டனில் ஹொலிவூட் ஸ்பேசி வேறு 20 இளைஞர்கள் மீது இழைத்த பாலியல் குற்றங்கள் பற்றி தீவிர புலன்விசாரணையில் இறங்கினார்கள்.

அக்டோபர் 5 முதல் அக்டோபர் முடிவு வரை 26 நாட்களுக்கு பிரிட்டிஷ் பத்திரிகைகளுக்கு ஒரே கொண்டாட்டம்! ஹொலிவூட் பாலியல் சமாச்சாரங்கள் ஓரினச் சேர்க்கைக் குற்றங்கள் சூடுபிடித்தன.

இந்த நேரத்தில் ஏன்தான் வந்தானோ அந்தச் சேவகன் இழவுச் சேதி கொண்டு!

உலக நாடாளுமன்றங்களுக்கெல்லாம் 'தாய்' என்று கருதப்படும் *British* நாடாளுமன்றத்தில் பணியாற்றும் இளம் பெண் ஊழியர்கள். ஊடகத் துறை யுவதிகள் ஆகியோருக்கு *British* எம்பிக்களாலும் அமைச்சர்களாலும் பாலியல் தொல்லைகொடுக்கப்படுவதாக *British* பத்திரிகை ஒன்று கிசுகிசுத்தது.

தங்களிடம் வாலாட்ட முனையும் எம்பிக்கள், அமைச்சர்கள் பற்றி இந்தப் பெண் ஊழியர்கள் தங்களுக்குள் ஒரு வாட்ஸ்-அப் இணையத்தளம் ஒன்றை நடத்தி ரகசியமாகச் செய்திகளைப் பகிர்வதாகவும் எதிர்க் கட்சித் தலைவர் குற்றஞ்சாட்டினார்.

இதற்குள் பிரிட்டிஷ் பத்திரிகை ஒன்று முந்திக் கொண்டு ஓடிவந்து ஒருசில எம்பிக்கள் - அமைச்சர்களின் பெயர்களை வெளியிட்டு வைத்தது. இவர்களுள் பெரும்பாலானோர் பிரதமர் திரேசாவின் ஆளும் கொன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

இந்த அவமானத்தை - தர்மசங்கடத்தை எப்படி சமாளிப்பது என்று பிரதமர் ஆராயும்போது மிகப் பெரும் குண்டு ஒன்று அவரது முகத்தில் வெடித்தது!

பிரதமருக்கு மிக வேண்டியவரான முக்கியமான பாதுகாப்பு அமைச்சர் பதவியில் இருக்கும் சேர் மைக்கல் ஃபாலன் தமது பதவியை ராஜினாமாச் செய்து வெளியேறினார்.

'பெண்கள் விடயத்தில் கடைப்பிடிக்க வேண்டிய பண்புகளை தாம் மீறியிருக்கக் கூடும்!' என்று அவர் விளக்கினார். எந்தப் பெண்ணுடன் தாம் எப்படி நடத்தை தவறினார் என்ற விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

உணவு விடுதி ஒன்றில் ஒரு பெண் நிருபரின் தொடையில் அமைச்சர் கைவைத்தார் என்று பின்னர் விளக்கம் தரப்பட்டது. இப்படியாக பெண் ஊழியர்கள் விஷயத்தில் முழங்காலை ஸ்பரிசிப்பது, விரசமான குறுந்தகவல்கள் (எஸ்எம்எஸ்) அனுப்புவது,கணனியில் ஆபாசப் படங்களை சேகரித்து வைப்பது போன்ற பல குற்றச்சாட்டுக்கள் பல எம்பிக்கள், அமைச்சர்கள் மீது வெளியிடப்பட்டன.

பிரிட்டனின் மிகப் பொறுப்பான அமைச்சர் ஒருவர் விலைமகள் ஒருத்தியுடன் உறவு வைக்கப்போய் அவரது பதவி மட்டுமல்ல பிரதமர் மக்மிலனின் ஆளும் கன்சர்வேடிவ் கட்சி அரசாங்கமே கவிழும் நிலை 1961-ல் ஏற்பட்டது.

1961 ஜூலை மாதம் 8-ம் திகதி சம்மர் எனப்படும் பிரிட்டிஷ் வசந்த காலம் - மனோரம்மியமான அந்த மாலை வேளையில் பிரபு ஒருவர் வீட்டில் விருந்து வைபவம் நடந்தது. அமைச்சர்கள், பிரபுக்கள், வெளிநாட்டு ராஜதந்திரிகள், அழகியவிலைமாதர்கள் - இப்படிப் பல வகையானோரும் உண்டு களித்து இன்புற்றிருந்த நேரம். ஒரு அழகிய யுவதி நிர்வாணமாக நீச்சல் தடாகத்திலிருந்து எழுந்து நடந்து போய் டவலை துவாயை எடுத்துக் கட்டிக் கொண்டாள்.



கிறிஸ்ட்டின் கீலர்

பிரிட்டிஷ் அரசின் அப்போதைய போர்த் துறை அமைச்சர் 46 வயதான புறோபூமோவின் கண்களும் அந்த யுவதியின் கண்களும் சந்தித்தன தமக்குள் காவியங்களைப் பேசிப் பரிமாறின.

இந்தக் கண நேர கண்கள் சந்திப்பு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் எதிர்காலத்தையே புரட்டிப் போட்டது. அமைச்சர் புறோபுமோ ஏற்கனவே திருமணமானவர். மனைவி வலரி ஒரு சினிமா நடிகை. நீச்சல் தடாகத்தில் இருந்து நிர்வாணமாக வெளியேறியபெண் கிறிஸ்டீன் கீலர் - வயது 19.

அன்று மாலை விருந்து வைபவத்தில் சோவியத் ஒற்றன் ஜவனோவும் கலந்து கொண்டான். கிறிஸ்டீன் கீலர் என்ற விலைமகளுடன் பிரிட்டிஷ் அமைச்சர் புறோபூமோ மட்டுமல்ல, சோவியத் ஒற்றன் ஜவனோவும் பாலியல் உறவு கொண்டிருந்தமைதெரிய வந்தது.



பிரதமர் மக்மிலன்



பிரிட்டிஷ் அமைச்சர் ப்ரோபியுமோ

போர்த் துறை அமைச்சரான புறோபூமோ பிரிட்டிஷ் ஒற்றாடல் துறையான *M.I. 5* -க்குப் பொறுப்பானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது பற்றி நாடாளுமன்றத்தில் கேட்கப்பட்டபோது கிறிஸ்டீனுடனான உறவுகளை அமைச்சர் மறுத்தார். ஆனால் நாடாளுமன்றத்தில் அவர் பொய் பேசினார் என்பது நிரூபிக்கப்பட்டதும் புறோபூமோ அமைச்சர் பதவியில் இருந்து வெளியேறினார்.புறோபூமோ விவகாரத்தை பிரதமர் சரியாகக் கையாளவில்லை என்று குற்றம் சாட்டி பிரதமர் மக்மிலனும் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்டார். கன்னியரின் கடைக்கண் பார்வைக்கு இளைஞர்கள் மட்டுமல்ல, பிரிட்டிஷ் அமைச்சர்களும் விதிவிலக்கல்ல என்பதை இது நிரூபித்தது.●

# SkyWings Ltd.

*Your Travel Is Our Passion...*

23 YEARS

## Talk to our Specialist in TAMIL

## 0208 672 9111

## COLOMBO SPECIALS




**SECURE YOUR BOOKING BY PAYING A £150 DEPOSIT**

## Worldwide Specials

| | | | |
|---|---|---|---|
| MELBOURNE | fr £598 | CHENNAI | fr £387 |
| AUKLAND | fr £607 | TRICHY | fr £427 |
| NEW YORK | fr £324 | DELHI | fr £397 |
| SYNDEY | fr £590 | KUALA LUMPUR | fr £412 |
| TORONTO | fr £312 | SINGAPORE | fr £419 |

119, Tooting High Street London, SW17 0SY | T: +44 (0) 20 8672 9111

** Above fares are subject to availablility. T&Cs Apply.*

IATA

ATOL PROTECTED

# நம்பிக்கைத் துரோகிகள்





வேதா இல்லம். ஜெயலலிதாவின் அம்மா சந்தியா கட்டிய மாளிகை. அதன் திறப்பு விழாவுக்கு முன்னால் சந்தியா இறந்துபோனார். யாரும் நுழையாக் கற்கோட்டையான அதனுள் வாழ்ந்துவந்தார் ஜெயலலிதா. அதன் திறப்புவிழா அன்று பத்திரிகையாளர்கள் அனைவரையும் அழைத்துச் சென்று ஒவ்வொரு அறையாகக் காட்டினார் ஜெயலலிதா. இந்த மாளிகையின் ஒவ்வொரு செங்கல்லும் அணு அணுவாகப் பார்த்துக் கட்டியவர் என் அம்மா. இப்போது அவர் இல்லை" என்று சொல்லிக் கண்கலங்கினார். சமையலறை, படுக்கையறை, பூஜையறை, வரவேற்பு அறை, குளியல் அறை என்று மட்டுமல்ல, படிப்பு அறை, உடையலங்கார அறை, அலங்கார அறை, நகையலங்கார அறை என்று தனித்தனியாக வேதா இல்லம் கட்டப்பட்டிருந்ததாக அன்றைய பத்திரிகையாளர்கள் எழுதியிருக்கிறார்கள்.

"மாளிகையைப் போல் வீட்டைக் கட்டியிருக்கும் நீங்கள், அதில் தனியாக வசிப்பது போரடிக்கவில்லையா?" என்று 'நடிகை'யாக இருந்த காலத்தில் ஜெயலலிதாவிடம் கேட்கப்பட்டது. நான் தனியாக இல்லையே! என்னுடன் என் சித்தி, சித்தப்பா, மற்றொரு சித்தியின் மகள், என் ஏழு குழந்தைகள் (அதாவது என் பிரிய நாய்கள்), பனிரெண்டு வேலைக்காரர்கள்... இத்தனை பேரும் மொத்தமாக இருக்கிறோம்" என்று பதில் தந்தார். இந்தக் காட்சிகள் எல்லாம் சினிமாக் காலத்தில் மட்டும்தான். அரசியலுக்குள் நுழைந்தார். சசிகலா, வீட்டுக்குள்ளே நுழைந்தார். ஒவ்வொருவராக வெளியேறினார்கள். அந்தப் பிரியமான நாய்கள் உட்பட!

ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு வீடே யாரு மற்றுக் கிடக்கிறது. அந்த வீட்டுக்கு யார் யாரோ சொந்தம் கொண்டாடிக் கொண்டு வருகிறார்கள். சசிகலாவின் சொந்தங்கள் தொடர்புடைய இடங்கள் என்று 187 இடங்களில் வருமானவரித்துறையினர் சோதனை போட்ட சில நாள்களில் ஜெயலலிதாவுக்கும் சோதனை. அவர் ஆசையாய்க் கட்டி, வாழ்ந்த போயஸ்கார்டன் வேதா இல்லத்துக்குள்ளும் வருமானவரித்துறை நுழைந்தது.

1996-ம் ஆண்டு ஜெயலலிதா சிறைச்சாலையில் இருந்தபோது தமிழக லஞ்ச ஒழிப்பு போலீஸார் போயஸ் இல்லத்துக்குள் நுழைந்து சோதனை நடத்தினார்கள். இப்போது ஜெயலலிதா கல்லறைக்குள் இருக்கும்போது மத்திய வருமானவரித்துறை உள்ளே நுழைந்துள்ளது. அன்று ஜெயலலிதாவின் 'எதிரி'யான கருணாநிதி ஆட்சி நடத்தினார். இன்று ஜெயலலிதாவின் காலில் விழுந்து விழுந்து எழுந்தவர்கள் ஆட்சியில் இருக்கிறார்கள்.

''ஜெயலலிதா வீட்டில் ரெய்டு நடந்தது வருத்தத்துக்குரியதான்" என்று சொல்லிவிட்டு, சசிகலா குடும்பத்தினர்மீது பாய்ந்துள்ளார் முதல்வர் எடப்பாடி பழனிசாமி அவரால் ஜெயலலிதா பற்றி அதற்குமேல் சொல்ல முடியவில்லை. சசிகலா ஏதோ வானத்திலிருந்து வந்து, சொத்துகளைக் குவித்ததாக எடப்பாடி நினைக்கிறார். சசிகலாவை இவர்கள் ஏன் மதித்தார்கள் என்றால், ஜெயலலிதாவுக்குப் பக்கத்தில் அவர் இருந்ததால்தான். சசிகலாவிடம் நல்ல பெயர் வாங்கினால்தான், ஜெயலலிதாவின் அனுகிரகம் கிடைக்கும் என்று எடப்பாடிகளும் பன்னீர்களும் நினைத்தார்கள். அம்மா, சின்னம்மா என்ற வார்த்தையைப் பிரபலப்படுத்தியவர்கள் சசிகலா குடும்பத்தினர் அல்ல. எடப்பாடி, பன்னீர் வகையறாக்கள்தான். ஜெயலலிதாவுக்கு இவையெல்லாம் இப்போது தெரிய வாய்ப்பு இல்லை என்பதால் பேட்டிகளில் கொந்தளிக்கிறார் முதலமைச்சர் ஜெயலலிதா ஏன் இவர்களைத் தட்டி வைத்திருந்தார் என்று இப்போது தெரிகிறதா?

"தங்களுக்கு இழைக்கப்பட்ட மிகப்பெரிய நம்பிக்கைத் துரோகம் என்று எதைக் கருதுகிறீர்கள்?'' என்று ஜெயலலிதாவிடம் ஒரு முறை கேட்கப்பட்டது. "ஒன்றா இரண்டா அதை வார்த்தைகளில் சொல்ல" என்று பதில் அளித்தார். அப்படிப்பட்ட நம்பிக்கைத் துரோகங்களில் ஒன்றுதான், அ.தி.மு.க ஆளும் கட்சியாக இருக்கும்போது, ஜெயலலிதாவின் போயஸ்கார்டன் வீட்டில் வருமானவரித்துறை ரெய்டு நடத்துவதும், அதற்குப் பாதுகாப்பாக அ.தி.மு.க ஆட்சியின் காவல் துறையினர் காவல் காப்பதும், அது பற்றிய கூச்சமே இல்லாமல் ஆட்சியாளர்கள் இருப்பதும்.



"இது என் அத்தை வீடு" என்று பாத்தியதை கொண்டாடி வருகிறார் தீபா. ஜெயலலிதாவின் அண்ணன் மகள். ஜெயலலிதா உயிருடன் இருக்கும் வரை அந்த வீட்டுக்குள் அதிகம் நுழைய முடியாதவர். 'இந்த வீட்டுக்குள்தான் சசிகலாவும் வாழ்ந்து வந்தார்' என்று சொல்லி நுழைய முயல்கிறார் விவேக். பெங்களூரு சிறையில் இருக்கும் இளவரசியின் மகன். இன்று ஜெயலலிதாவுக்காகப் பதறும் விவேக் திருமணத்துக்கே ஜெயலலிதா போகவில்லை. இவர்கள்தான் ஜெயலலிதாவுக்காகக் கண்ணீர் வடிக்கிறார்கள். இவர்கள் கண்ணுக்கு ஜெயலலிதாவைவிட அவருடைய சொத்துகள்தான் கண்ணுக்குப் பெரிதாகத் தெரிந்திருக்கும்.

"கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பார்க்கிறேன், எனக்கு எதிரியே இல்லை" என்று 2014 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு ஜெயலலிதா சொன்னார். அவரது கண்ணுக்கு எதிரே எதிரிகள் இல்லை. முதுகுக்குப் பின்னால் துரோகிகள்தான் நிறைந்து இருந்துள்ளார்கள். ஆத்தா வளர்த்தது நாய்களை அல்ல, நஞ்சுகளை மட்டும்தான் என்பது புரிந்துவிட்டது.

இன்று இவர்களுக்கு அ.தி.மு.க ஆட்சியில் இருப்பதால் கட்சியைப் பற்றிக் கவலையே தவிர, எதிர்க்கட்சியாக இருந்தாலோ, நாளை எதிர்க்கட்சியாக ஆனாலோ கவலையே படமாட்டார்கள். ஜெயலலிதா காப்பாற்றி வைத்திருந்த இரட்டை இலை இன்னமும் மீட்கப்படவில்லை. ஜெயலலிதா அங்கீகாரம் வாங்கித் தந்த அ.தி.மு.க என்ற கட்சியின் பெயர் இன்னமும் கிடைக்கவில்லை. 135 உறுப்பினர் ஆதரவுடன் பெரும்பான்மை பலத்துடன் இருந்த ஆட்சி, இன்று பலவீனம் அடைந்து பெரும்பான்மை இருக்கிறதா, இல்லையா என்பதே தெரியாமல் ஆட்டம் எடுத்துக் கொண்டிருக்கிறது. கட்சிக்குப் பத்திரிகை இல்லை.

கட்சிக்கு டி.வி. இல்லை உள்ளாட்சித் தேர்தலை எதிர்கொள்ளும் துணிச்சல் இல்லை. நாடாளுமன்றத் தேர்தல் வந்தால், எங்களுக்கு 25 தொகுதிகள் வேண்டும் என்று பாரதிய ஜனதா இப்போதே பேரம் பேசுவதாகச் சொல்லப்படுகிறது. சட்டமன்றத் தேர்தலிலும் இப்படிப் பாதிக்கும் மேல் கேட்க மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? இப்படிப்பட்ட சூழ்நிலையில் முதலமைச்சர் நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் எடப்பாடி பழனிசாமிக்கு, கவர்னர் பன்வாரிலால் புரோஹித் கோவைக்கு சென்று விசாரணை நடத்தினால் என்ன, கோட்டைக்கு வந்து விசாரணை நடத்தினால் என்ன? தன்னுடைய நாற்காலி மூழ்கும் வரைக்கும் வெள்ளம் வராமல் இருந்தால் போதும் என்று நினைக்கிறார் பழனிசாமி. அதனால்தான் ஜெயலலிதா வீட்டைக் கோயிலாகச் சொன்னாலும், கோயிலுக்குள் என்ன நடந்தாலும் கவலை இல்லை; கோட்டையில் நடந்தாலும் கவலையில்லை.

ஒரு மனுஷி போனால் வீடுகளை இழக்கும். அதிகாரம் பொருந்திய வீடுகளை இழந்தால் கட்சியும்களை இழக்கும். ●

## எடப்பாடி - பன்னீருக்கு இரட்டை இலை!

இரட்டை இலை சின்னம் எடப்பாடி பழனிசாமி அணிக்கே என்று தேர்தல் ஆணையம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

அ.தி.மு.க.வின் அதிகாரபூர்வ சின்னமான இரட்டை இலைக்கு சசிகலா மற்றும் ஓ. பன்னீர்செல்வம் தரப்பினர் உரிமை கோரியதால், அதை முடக்கி கடந்த மார்ச் 22ல் தலைமைத் தேர்தல் ஆணையம் இடைக்கால உத்தரவு பிறப்பித்தது. இதற்கிடையில், ஓ. பன்னீர்செல்வம் மற்றும் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அணிகள் இணைந்தன. அதன் பின்னர் இரு அணிகள் இணைந்து பிரமாணப் பத்திரங்கள் தாக்கல் செய்தன. சசிகலா தரப்பிலும் பிரமாணப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த வழக்கை தேர்தல் ஆணையம் விசாரித்து வந்தது. விசாரணை முடிந்த நிலையில் கடந்த 23ம் திகதி தீர்ப்பு வழங்கப்பட்டது. ஏற்கெனவே எதிர்பார்க்கப்பட்டது போல எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க அணிக்கு இரட்டை இலைச் சின்னத்தை ஒதுக்கீடு செய்து தேர்தல் ஆணையம் அதிகாரபூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

மதுசூதனன் தலைமையிலான அ.தி.மு.கவுக்கு இரட்டை இலைச்சின்னம் வழங்கப்பட்டதாக தேர்தல் ஆணையம் தன் உத்தரவில் குறிப்பிட்டுள்ளது. ஏனெனில், அ.தி.மு.க சசிகலா அணி, ஓ. பன்னீர்செல்வம் அணி என இரு பிரிவாக பிரிந்தபோது, பன்னீர்செல்வம் தரப்பில் அவைத்தலைவர் மதுசூதனன் பேரில்தான் இரட்டை இலைச்சின்னம் கோரி தேர்தல் ஆணையத்தில் முறையீடு செய்யப்பட்டது. பழனிசாமி, பன்னீர்செல்வம் அணிகள் இணைந்த பின்னர், அவரின் பெயரில்தான் வழக்கு நீடித்தது. தேர்தல் ஆணையத்தின் இந்த உத்தரவின் மூலம் பழனிசாமி அணி இனி அ.தி.மு.க என்ற பெயரைப் பயன்படுத்த முடியும். முன்னர் இந்தப் பெயரைப் பயன்படுத்துவதற்கும் தேர்தல் ஆணையம் தடை விதித்திருந்தது. அ.தி.மு.க அம்மா, புரட்சித்தலைவி அம்மா என்ற பெயரிலேயே அ.தி.மு.க அணிகள் வழங்கப்பட்டு வந்தன. இரட்டை இலைச்சின்னம் வழங்கப்பட்ட அணிக்கு மக்களவையில் 34 உறுப்பினர்களும்,

# Sainica Travels வழங்கும்

## வியட்நாம்,தாய்லாந்து மற்றும் கம்போடியாவிற்கான இரண்டு வார சுற்றுலா





விசேட விலைக்கழிவுடன் கூடிய
மிக்ககுறைந்த கட்டணம்

~~2499~~ **1890** விமானச்சீட்டு, **Cruise** உட்பட

(* December 20க்கு முதல் பதிவு செய்பவர்களுக்கு மட்டுமே
இந்த சலுகைத் தொகை, அதன்பின்னர் £1990)

- **பயணத்திகதி: 12.02.2018 முதல் 01.03.2018 வரை (16 நாட்கள்)**
- தரமான தங்குமிட வசதிகள் மற்றும் தொலைக்காட்சி பொருத்திய குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனம்.
- மூன்று நேர உணவு(சைவ மற்றும் அசைவ உணவு) Full Board Veg and Non-Veg
- இரண்டு பகல்கள் ஒரு இரவு அடங்கலான **Luxury Cruise** பயணம்.
- முதியவர்களுக்கும், பிரயாணத்தில் உதவி தேவைப் படுபவர்களுக்கும் உரிய வசதிகள் செய்து தரப்படும்.
- உங்கள் தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்ய எமது நிறுவன முகவர் ஒருவர் UK இல் இருந்தே முழு சுற்றுலாவிலும் உங்களுடன் பயணிப்பார் அத்தோடு அனுபவம் வாய்ந்த வழிகாட்டிகளும் (Tour Guide) துணைவருவார்கள்.
- விசா பெற சிரமப்படுபவர்களுக்கு விசா வசதிககள் செய்து தரப்படும்.

**Vietnam / வியட்நாம்:**



- ஸ்ரீ மாரியம்மன் கோவில் - Ho chi minh city
- Cu chi Tunnels/ கு சி சுரங்க பாதைகள்
- Ho chi minh city Sightseeing
- Ho Chi Minh Mausoleum/ ஹோ சி மின் மொசோலியம்
- Ho chi minh Presidential palace/ ஹோ சி மின் ப்ரெசிடென்சியல் பலஸ்
- Hanoi Sightseeing/ ஹனோய்
- Ha long Bay/ ஹா லோங் பே - **Day & Night Cruise with meals on board.**

**Cambodia / கம்போடியா**

- Angkor Wat / அங்கோர் வற் - சோழ மன்னர்களால் கட்டப்பட்ட கோவில்.
- Bayon Temple / பயோன் கோவில்.
- Apsara Dance – Cambodian Cultural show.
- Floating Village - மிதக்கும் மீன்பிடி கிராமம்





**Thailand / தாய்லாந்து:**

- Bangkok Sightseeing/ பாங்கொக்
- The Grand Palace**/** தி கிராண்ட் பலஸ்
- Pattaya Beach/ பட்டாயா கடற்கரை.
- Nong Nooch Garden -World Famous Artificial Animals Garden.
- Wat Traimit/ வற் ட்ரைமிட்
- Wat Pho/ வற் போ
- Floating Market/ மிதக்கும் சந்தை
- Siam Niramit/ சியாம் நிரமிட்
- Indra Market/ MBK Market


தொடர்புகளுக்கு: **Sainica Travels**
தொலைபேசி: **07957597024/ 07342150501**
e-mail: info@sainicatravels.com
www.sainicatravels.com

# Central Bank Approved Money Transfer to Sri Lanka

FAST CASH
Since 1999

## Why send with us?

- Central Bank approved official Exchange Rates
- Fast, Safe and Secure - *Same Day Bank Credits**
- Your money sent from the UK and not credited locally
- Established in 1999 & UK FCA Authorised



Special Offer

**Free**
Money Transfer!
for New Customers - Register Today..

WISHING ALL OUR LOYAL CUSTOMERS A HAPPY CHRISTMAS AND PROSPEROUS 2018!

020 8886 4488 / 020 34371208

www.efastcash.co.uk | 1114-116, Station Road, Edgware HA8 7AA | Open 7 Days

* T/C Apply

FASTCASH IS A FCA & HM CUSTOMS AND EXCISE / REGISTERED BUSINESS. MSB 12112819 / FCA -PI 540536

HNB · BOC · PEOPLE'S BANK · NSB · SampathBank · SEYLAN · NDB bank · Nations TrustBank · HSBC · UNION BANK · PAN ASIA · Standard Chartered · DFCC Vardhana Bank · Amāna Bank

---

## MODERN FAMILY APARTMENTS IN MT. LAVINIA, SRI LANKA

- DOUBLE ROOMS & 1,2,3 BED APARTMENTS
- FULLY FURNISHED WITH AIR CON, LIFT & PARKING

UK BOOKINGS **MIKE** ON **07733 261 999**

VISIT OUR WEBSITE **www.stayatmount.com**

FROM **£25** PER DAY*



---

Now is the time to book your Flights or Holidays with us!

## CHECK OUR FARES FIRST, BEFORE YOU BOOK ELSEWHERE!

Hotline; 07534 433111

**Last MinuteX mas Flight SALE**

Fly to Colombo
Srilankan Airlines – fr £465
Emirates - fr £475

Worldwide fares from £275

*Inclusive taxes / Seats are subject to availability

## Holiday Offer

**Koggala Beach Hotel**
Koggala, Sri Lanka



£680pp Inc Flights

*7 nights on all Inclusive
*London Heathrow

**Why book with Holiday Air ?**

- Price match guarantee*
- ATOL protected / IATA accredited
- Exclusive deals for hundreds of destinations
- No hidden Fees
- Popular Holiday Deals
- Best Exchange rates for Holiday Money
- Save your time and we will search for you



Flights, Tailor-made Holidays & Travel Deals

SriLankan · Emirates · QATAR AIRWAYS · KUWAIT AIRWAYS · ETIHAD · OMAN AIR · GULF AIR · JET AIRWAYS

IATA · ATOL PROTECTED

HolidayAir
A Travel Experience to Remember
Since 2006

020 8440 0770

www.holidayair.com / 130 High Street, Barnet EN5 5XQ

*All advertised fares are of real time itineraries during the issue of publication. Fares include taxes & are subjected to availability and may change without any prior notice. T/ C conditions apply.

சிவ தியாகராஜா

# பூதத்தம்பி கோட்டை

## அத்தியாயம் 17

## இன்பமழை

கரத்தைப் பற்றிய காரிகை அவனைத் தனது சயன அறைக்கு இழுத்துச் சென்ற போது காதல் போதையில் மயங்கியிருந்த ஜோதிநாதன் மந்திரத்தால் கட்டுண்ட மரப்பாச்சி மனிதன் போல அவளைப் பின் தொடர்ந்தான்.

சயன அறையில் தொங்கிக் கொண்டிருந்த அன்ன விளக்குகளிலிருந்து சுடர்விட்ட நெருப்பின் நாக்குகள் கக்கிய அகிற்புகை அறையெங்கும் பரவி ஒரு வகையான லாகிரி மயக்கத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது. மென்மையான நீலநிறப் பட்டுத்துணியால் விரிக்கப்பட்டிருந்த மெத்தென்றிருந்த கட்டில் மெத்தையில் அவனை அமரச் செய்துவிட்டு அருகிலே அமர்ந்தாள் அவள்.

நீண்டநாட் பிரிவின் பின்னர், இனிமேல் அவளைத் தனது கண்களினால் காண்பேனோ மாட்டேனோ என்று ஐயுற்று அங்கலாய்த்துக் கொண்டிருந்த அவனால், அவளை முழுமையாகப் பார்த்து தனது கண்களில் பதிய வைக்க முடியவில்லை, இரு கண்கள் போதவில்லை.

அவனது முகத்தையாவது முழுமையாகப் பார்த்தானோ என்றால், அதுதான் இல்லை!

தூண்டா விளக்கின் ஒளியில் வானவில்லின் வர்ணங்களை உமிழ்ந்து கொண்டிருந்த, முன்னுச்சி வகிட்டில் தொங்கிய வைரச்சுட்டியைப் பார்த்தான்.

தந்தவர்ணமாக ஜொலித்த நெற்றியையும், அதன் மத்தியில் துலங்கிய திலகத்தையும் பார்த்தான்.

வில்லென நீண்டு வளைந்த கரிய புருவங்களையும், இரு விழிகளைக் காத்து நின்ற கண்ணிமைகளையும் பார்த்தான்.

வியப்பினால் விரிந்து, குறும்பினால் குறுகுறுத்து, சிருங்காரத்தினால் சிரிக்கும் அவளுடைய கண்களைப் பார்த்தான்.

குங்குமச் சிவப்பாகச் சிவந்த, குழி விழுந்த கன்னங்களைப் பார்த்தான்.

தேன் பிலிற்றும் செம்பவள இதழ்களைப் பார்த்தான்.

வெண்சங்கை நிகர்த்த வழுவழுப்பான கழுத்தைப் பார்த்தான்.

மார்புக் கச்சையால் முற்றாக மறைக்க முடியாமல் புடைத்து நிற்கும் தனங்களைப் பார்த்தான்.

மார்புக் கச்சைக்கும் இடுப்பு உடைக்குமிடையே பரவிக்கிடந்த பொன்வண்ண மேனிப் பிரதேசத்தை அவன் கண்கள் அளந்த போது அவள் அவனை இழுத்து தன்னோடு இறுக அணைத்துக் கொண்டாள்.

அச்சமயம் பார்த்து வெளியே வானம் வெடித்து சுக்கு நூறாகச் சிதறுவது போலப் பேரிடி முழங்கியது!

இடியும் மின்னலும் இடித்து மோதி, வெடித்துச் சிதறி, வெட்டி முழங்கின. 'ஊ ஊ' என்ற பேரிரைச்சலோடு சூறைக்காற்று சுழன்றடித்தது. 'சட சட'வென்ற சத்தத்தோடு வானம் பொத்துக் கொண்டு பெருமழையாக பொழிந்து கொண்டிருந்தது.

"வந்ததுதான் வந்தீர்கள், வருண தேவனையும் கையோடு அழைத்து வந்துவிட்டீர்கள் போலிருக்கிறதே" என்றாள் சந்திரவல்லி.

"நானே வருணன், அடக்க முடியாத ஆவல் மழையோடு வந்திருக்கிறேன்" என்றான் அவன்.

கருமேகநாதன் அனந்தகோடி ஜலக் கரங்களால் நிலக்கன்னியை இறுகத் தழுவி மேலே தூக்க முயல்வது போலப் பயங்கரப் பெருமழை இடைவிடாமல் பெய்து கொண்டேயிருந்தது.

நிலக்கன்னியை மேகநாதன் ஜலக்கைகளால் அணைப்பதைப் போல அருகிலிருந்த நிஜக்கன்னியை ஜோதிநாதன் தன் இரு கரங்களாலும் அணைத்துக் கொண்டான். இனிமேல் அடக்க முடியாத நிலையில் ஜலக்கருக் கட்டிய வான்மேகம் வெடித்துச் சிதறி, பொத்துக் கொண்டு பெய்வதைப் போல, அடக்க முடியாத ஆசை வெள்ளம் அணைகளைப் பிளந்து, சம்பிரதாயங்களைத் தகர்த்து, அவர்களை ஒன்றிணைத்தது.

அன்றிரவு முழுவதும் ஓயாத பெருமழை ஓங்கார சுருதியுடன் தொடர்ந்து கொட்டிக் கொண்டேயிருந்தது. கோபமுற்ற சூறைக்காற்று பெரிய பெரிய மரங்கள் மீதும், பெரிய பெரிய வீடுகள் மீதும், சிறிய சிறிய குடிசைகள் மீதும் பேயாட்டம் போட்டுக் கொண்டிருந்தது.

ஒன்றரையாண்டுக் காலம் மழையின்றி வரண்டு, வெய்யிலில் வெந்து சீரழிந்து கிடந்த வன்னி நாடு இந்த ஒரே இரவில் எங்களை வளமாக்கி விடுமோ? அல்லது இந்தப் பெருங்கோரப் பேய் மழை தொடர்ந்து தொடர்ந்து, பெரு வெள்ளம் கண்டு, நாடே அழிந்து, வாழ்வே சூன்யமாகிவிடுமோ? என நாட்டு மக்கள் பயந்து கொண்டிருந்தார்கள்.

இரவின் கருமை இடைவிடாத மழையால் கரைந்து கரைந்து வெளுப்பது மாதிரி காலைப் பொழுது மெல்ல மெல்லப் புலர்ந்தது. கதிரவன் கண்காட்டாத போதிலும் அவனது கதிர்க் கற்றைகளால் காலை துலங்கத் துலங்க, மழையின் வேகமும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைய ஆரம்பித்தது.

அச்சமயம்

அறைக் கதவைத் திறந்து கொண்டு நிலா முற்றத்திற்கு வந்த ஜோதிநாதன் அடுத்த கணத்தில் தெப்பமாக நனைந்துவிட்டிருந்தான்.

கொட்டும் மழையில் கிழக்குத் திசையைப் பார்த்தவாறு அவன் முழங்கால்களில் நின்றான்.

அவனைத் தொடர்ந்து வெளியே வந்த சந்திரவல்லி அவனுக்குப் பின்னால் தானும் நனைந்த வண்ணம் முழங்கால்களில் நின்றாள்.

அவனோ தனது இருகரங்களையும் விண்ணை நோக்கி உயர்த்திப் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தான்.

அவளது கரங்களோ அவனது கழுத்தைச் சுற்றி மாலையாக விழுந்தன.

"இறைவா


ஏகப்பட்ட இளமைக் கனவுகளுடன் வாழ்ந்த நான் எதிர்பாராத விதமாக எனது பெற்றோரை இழந்தேன். பாதாளச் சிறையில் உறவினர் ஒருவரது கண்களிலும் படாமல் இறந்துவிடுவேனோ என்று ஏங்கிக் கிடந்த நேரத்தில் என்னை வெளியே கொண்டு வந்தாய்!

என்னையே உயிராக எண்ணியிருக்கும் ஒரு பெண்ணைத் தந்து, அந்த உறவில் இன்பம் துய்க்கும் வழியைக் காட்டினாய்!

பயங்கரப் பஞ்சம் தலைவிரித்தாடும் இந்நேரத்தில் இப்பெருமழையைத் தந்து கோடிக்கணக்கான ஜீவன்களை உய்ய வைத்திருக்கிறாய்!

எத்தனை கோடி இன்பம் தந்தாய் இறைவா!"

இச்சம்பவம் நடந்து மூன்று மாதங்களின்



பின்னர் ஒரு நாள், ஜோதிநாதனிடம் சந்திரவல்லி கூறிக் கொண்டிருந்தாள்.

"ஒவ்வொரு ஆண்டும் விசாகத் திருவிழாவுக்காக நமது அரச குடும்பம் முல்லைத் தீவுக்குப் போய்வருவது வழக்கம். சென்ற ஆண்டில் கொடிய பஞ்சத்தினால் இத்திருவிழா நடைபெறவில்லை. இந்த ஆண்டில் தொடர்ச்சியாகப் பெய்த மழையினால் நாட்டில் நல்ல விளைச்சல். அதைத் தொடர்ந்து இந்த வருடம் மீண்டும் திருவிழா நடைபெறுகிறது. இன்னும் இரண்டு நாட்களில் புறப்பட இருக்கிறோம். நீங்களும் எங்களோடு வருகிறீர்களா? வினாவினாள்.

"அது என்ன விசாகத் திருவிழா?"

"வைகாசி விசாக நாளில் வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவிலில் நடைபெறும் திருவிழாக் கொண்டாட்டம். மக்கள் நூற்றுக் கணக்கில் கூடி வெகு விமரிசையாகக் கொண்டாடுவார்கள்."

"பயண ஏற்பாடுகள் என்ன மாதிரி?"

"நாங்கள் பெண்கள் குதிரை வண்டியில் பயணம் செய்வோம். ஆண்கள் குதிரைகளில் வருவார்கள். போகும் பாதை காட்டுப்பாதையாதலால் சில வீரர்களையும் நம்மோடு அழைத்துப் போவோம். ஒருநாள் பயணமாதலால் முதல் நாளே புறப்பட்டுப் போய் அங்கே இரவு கூடாரங்கள் அடித்துத் தங்கி, மறுநாள் விழா பார்த்துவிட்டு அடுத்த நாள் காலை புறப்பட்டு வருவோம்."

"சுவாரஸ்யமான குழுமப் பயணம் போல இருக்குமே"

"குழுமப் பயணம் அல்ல; இது குடும்பப் பயணம்" என்றாள்.

"நான் உங்களோடு வருவதற்கு வன்னியன் மாமா சம்மதித்து விட்டாரா?"

"அப்பாவிடம் கேட்டேன்; அவன் இல்லாமலா? ஜோதிநாதன் எங்கள் குடும்பத்தவனாச்சே என்கிறார்."


அடர்ந்த காட்டினூடாகச் சென்ற வண்டிப் பாதையில் பனங்காம அரச பரிவாரம் சென்று கொண்டிருந்தது. காட்டு மரங்களில் புதிய இலைகளும் தளைகளும் தளிர் விட்டுக் கொண்டிருந்தன. பாதையோரங்களில் அடர்ந்து படர்ந்திருந்த செவ்வந்தி மலர்களின் அழகையும் வெள்ளை வெளேரென்று பூத்துக் குலுங்கிய எருக்கம் பூக்களின் எழிலையும் பார்த்து ரசித்தவாறு குதிரையில் வந்து கொண்டிருந்தான் ஜோதிநாதன்.

முதலில் சென்ற குதிரை வண்டியில் சந்திரவல்லியும், அவளது தாயார் சாருமதியும், தோழி அனுரதியும், இரு பணிப்பெண்களும் பயணம் செய்தார்கள்.

தொடர்ந்து வந்த குதிரைகளில் தாத்தா கயிலாய வன்னியர், அரசன் குமார வன்னியன், அமைச்சர் சத்திய வாக்கர், ஜோதிநாதன் ஆகியோரைத் தவிர வேலையாட்கள், சமையல்காரர், காவல்காரர்கள், சேனாவீரர் என இருபது பேர் வரை பயணித்தார்கள். அவர்களைப் பின்தொடர்ந்த இரட்டைக் காளை பூட்டிய மாட்டு வண்டிகளில் கூடார உபகரணங்கள், உணவுப் பொருட்கள், சமையல் பாத்திரங்கள், படுக்கை விரிப்புகள், தலையணைகள் ஆகியன கொண்டு வரப்பட்டன.

அவர்கள் சென்ற காட்டுப் பாதையில் இடையிடையே கிராமங்கள் வந்து போயின. தென்னோலைகளால் வேய்ந்த கொட்டில் வீடுகளிலும், பனை ஓலைக் குடிசைகளிலும் வாழ்ந்து, விவசாயம் செய்து ஜீவனம் நடத்தி வந்த மக்கள் போதும் என்ற மனத்தோடு சந்தோஷமாக வாழ்ந்து வந்ததை கலகலப்பான பேச்சும், சிரிப்பும் எடுத்துக்காட்டின. வழியில் வந்த ஒரு கிராமத்தில் அவர்கள் இளைப்பாறத் தங்கிய போது அக்கிராம மக்கள் குலை குலையாக இளநீர்களைக் கொண்டு வந்து கொடுத்து உபசரித்தார்கள்.

அன்று மாலை வற்றாப்பளையை அடைந்ததும் கண்ணகி கோயிலுக்குச் சமீபமாக நான்கு



**மார்புக் கச்சைக்கும் இடுப்பு உடைக்குமிடையே பரவிக்கிடந்த பொன்வண்ண மேனிப் பிரதேசத்தை அவன் கண்கள் அளந்த போது அவள் அவனை இழுத்து தன்னோடு இறுக அணைத்துக் கொண்டாள்.**

கூடாரங்கள் நிறுவப்பட்டன. ஒன்றில் ஐந்து பெண்களும், ஒன்றில் அரச குடும்பத்து ஆண்களோடு மந்திரி சத்தியவாக்கரும், மற்ற இரண்டிலும் அரச பரிவாரங்களும் தங்கியிருந்தார்கள். ஜோதிநாதனோடு குதூகலமாகப் பொழுதைப் போக்கலாம், கொஞ்சிக் குலாவலாம் எனத் திட்டமிட்டு வந்த சந்திரவல்லிக்கு இந்த ஏற்பாடு சற்று ஏமாற்றம் அளித்தது.

கண்ணகி கோயில் வாசல் ஆயிரக்கணக்கான மலர்களைக் கொண்ட திருவாசிகையாலும், மண்டபம் மாவிலை தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. கோயில் வெளிப் பிரகாரத்தைச் சுற்றவர வாழை கமுக மரங்கள் அலங்காரமாகக் கட்டப்பட்டு தரையில் கடற்கரையிலிருந்து தருவிக்கப்பட்ட வெண்மணல் பரப்பப்பட்டிருந்தது.

கோயில் மண்டபத்தில் நடு நாயகியாக நின்ற ஒரு பெண் கண்ணகி அம்மன் மேல் பக்திப் பரவசமாக ஒரு பாடலைப் பாட மற்றொரு பெண் பாடலின் தாளத்திற்கேற்ப மத்தளம் வாசிக்க கையில் ஏந்திய மண் வட்டில்களில் நெய்யூற்றி, அதில் பெரிய திரிகளைக் கொளுத்தி அதை நூற்றுக்கணக்கான பெண்கள் கைகளில் எடுத்துக் கொண்டு அப்பாடலின் தாள கதிக்கேற்ப நடனமாடிக் கொண்டிருந்தார்கள்.

அந்த நடனத்தை சுற்றவர நின்று ரசித்துக் கொண்டிருந்த மக்கள், தாளத்திற்கேற்ப கைதட்டி ஆரவாரித்து, அப்பெண்களை ஊக்குவித்துக் கொண்டிருந்தார்கள். அம்மக்களோடு சேர்ந்து பனங்காம அரச குழாம் அப்பெண்களின் பாடலையும் ஆடலையும் ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்பெண்களின் நடனம் முடிந்ததும் கையில் பெரியதொரு தாம்பாளத்தை எடுத்துக் கொண்டு அக்கோயிலின் தலைமைப் பூசகர், பனங்காம அரசன் குமார வன்னியனின் முன்னால் போய் நின்றார். அந்தத் தாம்பாளத்தில் இரண்டு பெரிய மலர் மாலைகள் வைக்கப்பட்டிருந்தன.

தனது மகளை நோக்கிய குமாரவன்னியன்-

"சந்திரா! அதில் ஒரு மலர் மாலையை எடுத்து ஜோதியின் கழுத்தில் போடு" என்றான்.

"ஏன் மாமா இது?" என்று ஜோதிநாதன் வினவ-

"இங்கே என்ன அப்பா நடக்கிறது?" என்று சந்திரவல்லி கேட்க-

"இங்கே கண்ணகி அம்மன் சந்நிதியில் எனது மருமகன் ஜோதிநாதனுக்கும், எனது மகள் சந்திரவல்லிக்கும் எனது அரச குடும்பத்தவரின் ஆலோசனைப்படியும், அங்கீகாரத்துடனும், ஆசீர்வாதத்துடனும் இந்தத் திருமணம் நடக்கிறது" என்றான் குமாரவன்னியன்.

"மாமா!" என்றான் ஜோதிநாதன்.

"அப்பா!" என்றாள் சந்திரவல்லி.

அதற்கு மேல் பேச்சு வரவில்லை; விக்கித்து நின்றார்கள். அதிர்ச்சி- குழப்பம்- ஆனந்தம் ஆகிய உணர்ச்சிகள் அவர்களது முகங்களில் அடுத்தடுத்து இழையோடின.

"ஏன் அப்பா இத்திடீர்த் திருமணம்?"

"உங்களுக்கு இது திடீர்க் கல்யாணமாக இருக்கலாம்; ஆனால், இது எனது குடும்பத்தினர் அனைவரோடும் பேசித் தீர்த்து, ஒரு முடிவுக்கு வந்த கல்யாணம்".

"இதைப் பற்றி- இக்கல்யாணத்தைப் பற்றி- ஏன் என் விருப்பத்தை நீங்கள் கேட்கவில்லை?"

"இந்த மண்ணையும், மக்களையும், மக்களின் மன நிலையையும் அறிந்து செயல்படுபவன் நான். எனது மகளின் மனநிலை எனக்குத் தெரியாதா?"

சந்திரவல்லி மலர் மாலையைக் கையிலெடுத்து ஜோதிநாதனின் கழுத்தில் அணிவித்தாள்!

ஜோதிநாதன் மலர் மாலையை கைகளில் எடுத்து அதை சந்திரவல்லியின் கழுத்தில் அணிவித்தான்!

அடுத்து பூசகர் தாம்பாளத்திலிருந்த திருமாங்கல்யத்தை எடுத்து ஜோதிநாதனின் கைகளில் கொடுக்க-

இடி முழக்கம் போன்ற சப்தத்தில் முரசும், தப்பட்டையும் முழங்க.

தாரையும் கொம்பும் ஊதி ஒலிக்க-

ஜோதிநாதன் சந்திரவல்லியின் கழுத்தில் திருமாங்கல்யத்தை அணிவித்தான்.

கோயிலுக்கு வந்திருந்த மக்கள் அனைவரும் மலர் தூவி மணமக்களுக்கு ஆசீர்வாதம் வழங்கினார்கள்.

மணமக்கள் முதலில் சந்திரவல்லியின் பெற்றோர்களின் காலைத் தொட்டு வணங்கி ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டார்கள்.

அடுத்து தாத்தா கயிலாய வன்னியனின் காலைத் தொட்டு வணங்கிய போது அவர் தான் அணிந்திருந்த முத்து மாலையைக் கழற்றி சந்திரவல்லியின் கழுத்தில் போட்டு விட்டு ஜோதிநாதனைப் பார்த்துக் கூறினார்.

"இந்த மாலையைச் சந்திராவுக்கு அன்பளிப்பாகத் தருகிறேன்; ஆனால், அவளையே- எனது பேத்தியையே- உனக்கு அன்பளிப்பாகத் தருகிறேன்".

திருவிழா முடிந்து அவரவர்கள் தத்தமது கூடாரங்களுக்குத் திரும்பிய நேரம்.

அந்த மைதானத்தில் பலவர்ணப் பாய்த்துணிகளால் கூரை அமைக்கப்பட்ட ஐந்தாவது கூடாரம் ஒன்று புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

"அதுதான் சாந்தி முகூர்த்தக் கூடாரம்" என்றான் குமாரவன்னியன்.

அவர்கள் கையோடு கைசேர்த்த வண்ணம் அக்கூடாரத்திற்குள் நுழைந்தார்கள்.

*(தொடரும்)*



ஏ.ஜே.ஞானேந்திரன்

# எதற்கும் ஒரு விலை உண்டு






நகரங்கள் மாசுபடுவதை யார்தான் விரும்புவார்கள்? இலண்டன் நகரமும் இந்த விடயத்தில் வாகனச் சாரதிகளின் குரல் வளைகளை நெருக்க ஆரம்பித்துள்ளது. இலண்டன் நகர பிதா அறிமுகப்படுத்தி உள்ள புதிய சட்டத்தின்படி, 2006க்கு முன்பு பதியப்பட்ட, பெட்ரோல், டீசல் வாகனங்கள், இனி நகருக்குள் நுழைவதானால். பத்து பவுண்ட்ஸ் அதிகமாக அதாவது 21.50 பவுண்ட்ஸ் செலுத்தினால்தான், நகருக்குள் தமது கார்களைச் செலுத்த முடியும். தலைநகரின் சூழல் நாளுக்கு நாள் மோசமடைந்து, காற்று அசுத்தமாவதைத் தடுக்க, இலண்டன் நகரபிதா கான் முன்வைக்கும் புதிய திட்டமே இது! மாதமொன்றுக்கு 34,000 வாகனச் சொந்தக்காரர்கள் பாதிக்கப்படுவார்கள் என்கின்றன செய்திகள், நகரின் சுத்தம் பேணப்படுவது அவசியம் என்பதால், இந்த திட்டம் தவிர்க்க முடியாத ஒன்று என்கிறார்கள் அவதானிகள்

வருடா வருடம் 9,000க்கு மேற்பட்ட இலண்டன்வாசிகள், மிகமோசமான காற்றை சுவாசித்து, மரணம் "நேர காலத்தோடு" ஏற்பட்டு விடுகிறது என்று ஒரு குண்டைப் போடுகிறார் இலண்டன் நகர பிதா! இலண்டனில் வாழும் பிள்ளைகளின் நுரையீரல், முழுமையான வளர்ச்சியைக் காணாத நிலையில் இருப்பதை இவர் சுட்டிக் காட்டுகிறார். வளர்ந்தவர்கள் ஆஸ்த்மா, ஞாபகமறதி, இருதய அதிர்ச்சி போன்ற நோய்களின் தாக்குதல்களுக்கு ஆளாகி வருகிறார்கள் என்பதையும் இவர் இங்கே ஞாபகமூட்டத் தவறவில்லை.

இந்த நிலையில், சில கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியமாகின்றது. இன்னும் பல கடுமையான விதிமுறைகள், நடைமுறையில் வர இருக்கின்றன என்று இவர் சுட்டிக்காட்டியுள்ளார். கடந்த மாதம், அதாவது ஒக்டோபர் 23இலிருந்து, பத்து பவுண்ட்ஸ் மேலதிகமாகக் கட்டும் சட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டது. வாரா வாரம் திங்கள் தொடக்கம் வெள்ளிவரை, காலை 7.00 இலிருந்து மாலை 6.00மணி மட்டும், இந்த மேலதிகக் கட்டண விதி முறை அமுலில் இருக்கும். 2020இல் நகரை மிகக் குறைந்த அளவு அசுத்தமான காற்று கொண்ட தலைநகராக மாற்ற, இன்னும் சில கெடுபிடிகள் வரப்போவது நிச்சயம் என்கிறார்கள் அவதானிகள்! எதற்கும் ஒரு விலை உண்டு என்பது சரிதான்.



## பிறந்த மேனிப் பிரியர்கள்

"உன்னை நேசிக்க முதலில் கற்றுக்கொள். பின்பு பிறரை நேசிப்பதில் உனக்கு சிக்கல்கள் இருக்கப் போவதில்லை" . 2007இலிருந்து , நிர்வாணத்தை நேசிக்கும் அடிட்ரியா என்பவர் . தன் உடம்பைப் பார்க்கும் கோலம் இதுதான் போலும் . இந்தக் குறிப்பிட்ட நபருக்கு நீண்ட காலமாகவே "நிர்வாணம்" என்பதில் அதீதமான ஈடுபாடு இருந்து வந்துள்ளது. வெளி நாடுகளில் இவரைப் போல் உலாவும் "நிர்வாணச்சாமிகள்" சிலருடனும் இவர் தொடர்பு கொண்டுள்ளார். இது சிறிய குழுவென்றாலும், நெருக்கமான உறவைக் கொண்ட குழு என்கிறார் இவர். பொது இடங்களில் நிர்வாணமாக நிற்பதை அடியோடு தடை செய்யும் இந்தோனேசிய தலைநகரான ஜகார்த்தாவில் ஆண்களும் பெண்களுமாக 15பேர் வரையில் கொண்ட குழு இருக்கிறது. தடை அமுலில் இருந்தாலும் வெவ்வேறு இடங்களில் இவர்கள் "நிர்வாணமாக " ஒன்று கூடுவதை வழக்கத்தில் கொண்டுள்ளார்கள். ஜகார்த்தாவின் மலைப்பிராந்தியங்களில், மிக இரகசியமாக இவர்கள் சந்தித்து கொள்கிறார்கள். சந்தித்த அடுத்த கணமே ஆடைகளைக் களைந்துவிடுவோம் என்று உற்சாகமாக சொல்லும் இவர், நாள் முழுவதும் அரசியல் தொடக்கம் அடுப்படிச் சமாச்சாரங்கள் வரை அலசுவோம் என்கிறார். மிகக் கவனமாக எங்கள் சந்திப்புக்கான இடங்களை தெரிவு செய்ய வேண்டி இருக்கின்றது என்கிறார் இந்த மனிதர். முஸ்லீம்கள் பெரும்பான்மையாகக் கொண்ட இந்தோனேசிய தீவுகளை ஒப்பிடும்போது, பாலி தீவில், இந்த நிர்வாணச் சாமிகளுக்கு சுதந்திரம் அதிகம் என்று சொல்லப்படுகிறது. என்றாலும் இந்தச் சுதந்திரம் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளால்தான் அதிகம் அனுபவிக்க முடிகின்றது என்று அலுத்துக் கொள்கிறார் ஒருவர்!

எல்லாம் துறந்த நிலை இவர்களுக்கு தேவைப்படுகிறது. ஆனால், காலம், இடம் அதற்கு இடமளிக்க தயாராக இல்லை.

# சிங்கத்துக்கு இரையாக்க வரிசையில் காத்திருப்பு



பிரியமாக வளர்த்த குதிரை இறந்து விட்டால் , அதை சிங்கங்களுக்கு உணவாகக் கொடுக்க விரும்பி , ஆறு மாதங்கள் வரை டென்மார்க்கில் காத்திருக்கிறார்களாம். ஆச்சரியமாக இருக்கிறது. ஏன் இந்தக் காத்திருப்பு ?

காரணம் இருக்கவே செய்கின்றது . இறந்த குதிரையை தனியார் நிறுவனத்திடம் கையளித்து , அதை மீள் சுழற்சி முறையில் இல்லாதொழிக்க , 584டொலர் தொகை செலவிட்டாக வேண்டும் . ஆனால் அதே குதிரையை , டென்மார்க்கின் தலைநகரில் உள்ள மிருகக்காட்சிசாலை நிர்வாகம் ஏற்றுக் கொண்டு , தன் சிங்கங்களுக்கு இரையாக கொடுத்து வருகின்றது . பணச் செலவு எதுவுமில்லை . அதுமாத்திரமல்ல தமக்கு பிரியமான குதிரை மீள் சுழற்சி முறையில் , இன்னொன்றாக திரிந்து, வேறொருவர் கைக்கு போவதை பலர் விரும்பவில்லை. ஒரு குதிரையை இன்னொரு சிங்கம் உண்பது ஒரு சாதாரண நிகழ்வு. காட்டு வாழ்வின் உணவுச் சங்கிலியில் இது ஒரு அன்றாட நிகழ்வும் கூட !.என்கிறார் இன்னொருவர்.

இப்பொழுது எல்லோருமே இதை விரும்ப ஆரம்பித்துள்ளதால், குதிரைகளோடு வருபவர்கள் தொகையும் அதிகரிக்க, காத்திருப்புக் காலம் நீளத் தொடங்கி இருக்கின்றது. அது ஆறு மாதங்கள் வரை நீடிக்கலாம் என்கிறார்கள் மிருகக் காட்சிசாலை நிர்வாகிகள்!

இங்குள்ள சிங்கம், புலி, கரடி போன்ற காட்டு மிருகங்களுக்கு, இந்தக் குதிரை இறைச்சி என்பது அவற்றின் உணவின் ஒரு பகுதியே. இதைவிட முயல், ஆடு, வரிக்குதிரை போன்றவற்றின் மாமிசத்தையும் கொடுத்து வருகிறோம் என்கிறார் ஓர் அதிகாரி.

## தெருவோரப் பிரார்த்தனைக்கு "ஒரு கும்பிடு"

பிரார்த்தனைகள் பொதுவாக ஆலயங்கள் , கோவில்கள், பள்ளிவாசல்கள் போன்ற புனித ஸ்தலங்களிலேயே இடம்பெறுவதுண்டு. இதற்கு விதிவிலக்காக இடம்பெறும் பிரார்த்தனைகளும் உண்டு .தெருவில் காரில் போய்க் கொண்டிருக்கும்போது, தொழுகை நேரம் வந்து விட்டால் காரை நிறுத்திவிட்டு, தெருவோரம் ஒரு துணியை விரித்து, அதில் உட்கார்ந்து தொழுகை செய்பவர்களும் உண்டு. இதை முஸ்லீம்களே செய்கிறார்கள்.

ஆனால், இப்படியான தொழுகைக்கு, திடீரென தடைபோட்டுள்ளது ஐக்கிய அரபுக் குடியரசு! இப்படியான தொழுகை நிகழ்வில் இருவர் மரணமாகியதை அடுத்து, எமிரேட்ஸ் அரசு இப்படியான தொழுகைகளுக்கு தடை விதித்துள்ளதாக , இங்குள்ள பத்திரிகைச் செய்தி கூறுகின்றது . தடையை மீறினால் 500 திர்ஹம்ஸ் அதாவது 136 டொலர் தொகை அபராதமாகச் செலுத்த வேண்டும் என்றும் அறிவித்துள்ளது. நெடுஞ்சாலைகளில் இதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது . சமீபத்தில் நடந்த விபத்தும் மரணங்களும் , இவர்களுக்கு ஒரு படிப்பினையாக இருக்குமென்று பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார் .


துபாய் அரசு, சமீபத்தில் அதி வேகமாக ஓடும் சாரதிகள், பிடிபட்டால் 816டொலர் தொகை வரை அபராதமாகச் செலுத்தும் சட்டத்தை அறிமுகம் செய்திருந்தது . வேகம் விவேகமானது அல்ல என்பதை அறிய. மரணங்கள் வரை காத்திருப்பு எதற்கு?



## அதிர்வலைகளை உருவாக்கும் லக்ஷ்மி குறும்படம்!

கே.எம். சர்ஜுன் இயக்கிய 'லக்ஷ்மி' என்ற குறும்படம் சமூக ஊடகங்களில் பெரும் அதிர்வலைகளை உருவாக்கி வருகிறது. கனடாவில் டைவர்சிட்டி ஃபிலிம் ஃபெஸ்டிவலில் தங்கம் வென்ற இந்தப் படம், லாஸ் ஏஞ்சல்ஸ் சினிஃபெஸ்ட்டில் அரையிறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றிருக்கிறது. வேலைக்குச் செல்லும் நடுத்தரவர்க்கத்துப் பெண்கள் சந்திக்கும் மன இறுக்கத்தையும், அது சார்ந்த மனப்போராட்டத்தையும் அப்பட்டமாகக் காட்டுகிறது படம். கற்பு எனும் வளையம் பெண்ணுக்கு மட்டும் ஏன்... தன் ஆசைப்படி திருமணமான பெண் வாழக்கூடாதா?' என ஒரு தரப்பினரும், 'மிடில் கிளாஸ் பெண்கள் வழிதவறுவதாக காண்பிப்பது கலாச்சார சீர்கேடு. இது சரியா என்று மற்றொரு தரப்பினரும் விவாதம் செய்து வருகின்றனர். இதில் பாரதியார் பாடல்கள் கொச்சைப் படுத்தப்பட்டிருக்கின்றன என்றும் சிலர் கூறி வருகின்றனர். மொத்தத்தில் இந்தப் புதிய ஜானர் குறும்படம் கற்பு, கலாச்சாரம் குறித்த ஓர் அழுத்தமான கருத்தைப் பதிவு செய்கிறது.

## சிம்ரன் என்றால் விஜய்க்கு பயமாம்!



தளபதி விஜய்யுடன் நடிக்க பல ஹீரோயின்கள் வெயிட்டிங். அப்படியிருக்க அவர் யாரை பார்த்து பயப்பட வேண்டும் என்று நீங்கள் கேட்பது புரிகின்றது.

அது வேறு ஒன்றுமில்லை. விஜய் மிகவும் நன்றாக நடனமாடக்கூடியவர். எந்த ஒரு நடனக்காட்சியையும் ஒரு நிமிஷம் பார்த்துவிட்டு அசால்ட்டாக ஆடிவிடுவார்.

அப்படியிருக்க சிம்ரனுடன் டூயட் அதைவிட குத்துப்பாட்டு ஆட வேண்டும் என்றால் விஜய்க்கே பயமாம். ஏனெனில் அவர் அந்தளவிற்கு விட்டுக் கொடுக்காமல் போட்டிப் போட்டு கொண்டு ஆடுவாராம்.

## காதலில் விழுந்த நமீதா கல்யாணத்தில் முடிந்தது!



நடிகை நமீதா நடிகர், தயாரிப்பாளர் வீராவை காதல் திருமணம் செய்தார். நவம்பர் 24ஆம் திகதி திருமணம் திருப்பதியில் நடந்தது "வீரா என்னுடைய சிறந்த நண்பர், கடந்த ஆண்டு எனது நண்பர் மூலமாக வீரா எனக்கு அறிமுகமானார், நாங்கள் நல்ல நண்பர்களாக பழகினோம். கடந்த செப்டம்பர் மாதம் கடற்கரையில் நடந்த இரவு விருந்து ஒன்றில் வீரா என்னிடம் தனது காதலை வெளிப்படுத்தினர்.

நாங்கள் இருவரும் பல விடயங்களில் ஒத்துப்போவதால், அவரது காதலை நான் ஏற்றுக் கொண்டேன். அவரது மென்மையான அக்கறை மற்றும் ஆதரவினால், ஆண்கள் மீதான எனது நம்பிக்கை மீட்டெடுக்கப்பட்டது." என்கிறார் நமீதா.

## சிக்கலில் வடிவேலு, சிம்பு, திரிஷா!



திரிஷா, வடிவேலு மற்றும் சிம்பு ஆகிய நடிகர்கள் தயாரிப்பாளர்களுக்குப் பெருத்த நஷ்டத்தை ஏற்படுத்தி உள்ளனர். இதனை ஈடுசெய்யாவிட்டால், மூவர் மீதும் படங்களில் நடிக்கத் தடை விதிக்கத் தயாரிப்பாளர் சங்கம் முடிவு செய்துள்ளது. இயக்குனர் ஹரியின் 'சாமிஸ்கொயர்' படத்திலிருந்து விலகிக் கொண்டார் திரிஷா. இதனால் இயக்குனர் பல காட்சிகளை ரீ சூட் பண்ண வேண்டியுள்ளது. தயாரிப்பாளருக்கு எக்கச் சக்க நஷ்டம்!

அடுத்து 'இம்சை அரசன் 24ம் புலிகேசி' 2ம் பாகம் ஆரம்பிக்கப்பட்ட வேகத்திலேயே நிறுத்தப்பட்டது. காரணம் இம்சை அரசனாக வடிவேலு மாறியதுதான்! வாங்கிய அட்வான்ஸ் 3 கோடியை திரும்பத் தருமாறு வடிவேலுவிடம் தயாரிப்பாளர் ஷங்கர் கேட்டார். பதில் இல்லை.

சிம்பு மீதும் பெரும் புகார் 'அன்பானவன், அடங்காதவன், அசராதவன்' படம் எடுத்தபோது 29 நாட்கள்தான் வந்தாராம் 18 கோடி நஷ்டம். இந்த மூன்று நடிகர்களால் மூன்று பெரிய தயாரிப்பாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மூவர் மீதும் தயாரிப்பாளர் சங்கம் நடவடிக்கை எடுக்க முடிவு செய்துள்ளது.

## சாரதிக்கு 12 லட்சம் ரூபா கார் பரிசளித்த நடிகை அனுஷ்கா

நடிகை அனுஷ்கா தன்னுடைய 36வது பிறந்நாளன்று, தன் கார் சாரதிக்கு 12 லட்சம் பெறுமதியான புத்தம் புதிய கார் ஒன்றை வாங்கிப் பரிசளித்து உள்ளார். படப்பிடிப்புகளின் போது இரவு, பகல் பாராமல் தன்னைப் பாதுகாப்பாக வீட்டுக்கு அழைத்து வரும் அவரது உழைப்பையும், நேர்மையையும் பாராட்டும் விதமாக இந்தக் காரைப் பரிசு கொடுத்துள்ளதாக அந்தச் செய்தி தெரிவிக்கின்றது. கார் பரிசு கொடுத்திருப்பது மனதுக்கு மிகவும் சந்தோஷம் அளிப்பதாக நடிகை அனுஷ்கா தெரிவித்துள்ளார்.



## "நயன்தாரா சொன்னமாதிரி எங்க மகள் நடிச்சா"



'அறம்' படத்தில் தன்னுடைய நடிப்பாலும், எதார்த்தமான பேச்சாலும் அனைவரையும் தன் பக்கம் ஈர்த்தவர், பேபி மகாலட்சுமி, படத்தில் 'தன்ஷிகா' கதாபாத்திரத்தின் மூலம் கண்களைப் பனிக்கச் செய்தவர். அவரது 'அறம்' அனுபவத்தை மழலைக்குரலில் பகிர்ந்தார்.

"சென்னை திருவொற்றியூர் பக்கத்துலதான் எங்க வீடு இருக்கு. என் அப்பா கூலி வேலை செய்யறார். அம்மா எங்களைப் பார்த்துக்கறாங்க. எனக்கு அண்ணாவும் தங்கச்சியும் இருக்காங்க. என் அண்ணா நாலாங் கிளாஸ் படிக்கிறான். நான் மூணாவது படிக்கிறேன். பாப்பா இன்னும் ஸ்கூல் போகலே. எங்க அம்மாவும் அப்பாவும்தான் என்னை நடிக்கக் கூட்டிட்டுப் போனாங்க. அவங்க சொல்ற மாதிரி நடிச்சேன். அவங்க எல்லோரும் என்கிட்டே ஜாலியா பேசினாங்க. அதனால் பயமில்லாமல் நடிச்சேன்" என்றவரை மடியில் தூக்கி வைத்துக் கொண்டு தாய் பாக்கியலட்சுமி தொடர்ந்தார். "என் மாமாவின் நண்பர் சினிமாவில் இருக்கார். அவருதான் பாப்பாவை நடிக்கக் கூட்டிட்டுப் போனார். ஆரம்பத்துல மகா ரொம்ப பயந்துச்சு. டைரக்டர் கோபி சார் பொறுமையா தட்டிக் கொடுத்து, டயலாக் சொல்லிக் கொடுத்தார். அப்புறம் நல்லா நடிக்க ஆரம்பிச்சுட்டா. நாங்க ரொம்ப சாதாரணக் குடும்பம். டிவியில்தான் நயன்தாராவைப் பார்த்திருக்கோம். நேரில் பார்ப்போம்னே சாமி சத்தியமா நினைச்சதில்லை. அவங்களாம் எவ்வளவு பெரிய நடிகை. அவங்க கூட சரிசமமா நிற்கவே முடியாதுனு நினைச்சோம். ஆனா, அவர்கூடவே என் பொண்ணு நடிச்சது மறக்கவே முடியாத அனுபவம்" என்றார் நெகிழ்ச்சியுடன்.

மகாலட்சுமியின் அப்பா மாணிக்கம், "என் பொண்ணு இவ்வளவு அழகா பேசுவான்னோ, நல்லா நடிப்பான்னோ எங்களுக்கே இப்போதான் தெரியுது. அவளுடைய திறமையை சரியா வெளியே கொண்டு வந்த டைரக்டருக்கு நன்றி சொல்லணும். நிறைய பேர் 'உங்க பொண்ண எங்க படத்திலும் நடிக்கக் கூப்பிடறோம்'னு சொல்லியிருக்காங்க. அந்தக் குழிக்குள்ளே விழும் சீனில் மகாலட்சுமி ரொம்பவே பயந்தா. அப்போ நயன்தாரா மேடம்தான், 'என்னை மாதிரி தைரியமா நடிக்கணும். எதுக்கும் பயப்படக் கூடாது'னு சொன்னாங்க. அவங்க சொன்ன மாதிரி நடிச்சா. அந்த தன்ஷிகா கேரக்டருக்கு மகாலட்சுமியே டப்பிங் பேசுனா. எங்களுக்கு ரொம்பப் பெருமையா இருக்கு" என்றார்.



# நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

பொன்னும் பொருளும் செல்வமும் மனித வாழ்விற்கு செழுமையும், வளமும், மகிழ்ச்சியும் உண்டாக்கி, பூமியில் மனிதனின் வாழ்வை வளப்படுத்தும் தன்மையுடையது. எனவேதான், 'அருள் இல்லார்க்கு அவ்வுலகில்லை. பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை' என்று நம் முன்னோர் ஆணித்தரமாகக் குறிப்பிட்டிருந்தார்கள். எக்காலத்துக்கும் பொருந்தும் பொன்மொழி இது.

பொருள் சார்ந்தது பொருளாதாரம். (ECONOMICS) சிறந்த பொருளாதார வளமே தனி மனிதனுக்கும் வீட்டுக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்க்கிறது.

பொருளாதார வளர்ச்சியடைந்த ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளை நாம் கொண்டாடுவதற்குக் காரணம், அவர்களின் பொருளாதாரக் கொள்கைகளும், செல்வச் செழிப்புமே!



சிறந்த பொருளாதாரச் சிந்தனை உயர்ந்த வளங்களை உருவாக்கும். எனவேதான், உலகின் உயரிய பரிசான நோபல் பரிசு (NOBEL PRIZE) பொருளாதாரப் பிரிவிற்கும் வழங்கப்படுகிறது. 2017ம் ஆண்டு, பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு (NOBEL PRIZE FOR ECONOMICS) அமெரிக்காவிலுள்ள சிக்காகோ பல்கலைக் கழக பொருளாதாரத் துறைப் பேராசிரியர் ரிச்சார்ட் எச் தாலர் (PROF.RICHARD H THALER), UNIVERCITY OF CHICAGO, IL, USA) அவர்களுக்கு வழங்கப்பட்டது.

பல்வேறு போட்டியாளர்களுக்கிடையே பேராசிரியர் தாலர் பரிசுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காரணம் அவர் சமர்ப்பித்த ஆராய்ச்சிக் கட்டுரையின் சிறப்பு அம்சமாகும்.

அந்தக் கட்டுரையின் முக்கிய அம்சம் போக்குசார் பொருளாதாரம் (BEHAVIOURAL ECONOMICS) என்ற தற்காலத்துக்கு ஏற்ற ஆய்வாக அது அமைந்திருந்தது. அவருடைய ஆய்வின் முக்கிய கருத்து, மனிதனின் மனநிலையும், முடிவு எடுக்கும் திறனும் பொருளாதார மேம்பாட்டுக்கு எவ்வாறு உதவுகிறது என்பது குறித்த விசாரணையாக அமைகின்றது. பொருளாதார விஷயத்தில் பெரும்பாலும் சுயமாகச் சிந்தித்து முடிவு எடுப்பது குறைவு. சமூகத்தின் போக்குக்கு ஏற்ப அண்டை அயலார் மற்றும் நண்பர்கள் போன்றோரின் நடைமுறைத் தாக்கங்கள் நம் முடிவுகளில் பெரும் பங்களிப்புச் செய்கின்றன.



சில வருடங்களுக்கு முன்பு பலரும் ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு தங்களுடைய வருமானத்தையும் மீறி, அவர் செய்கிறார் இவர் செய்கிறார் என்று தானும் இரண்டு, மூன்று வீடுகளை வாங்கி, பொருளாதார நெருக்கடிகளுக்குள்ளாகி, பெரும்பாலானோர் நசிந்து போனதே போக்குசார் பொருளாதாரத்தின் சிறந்த முன் உதாரணமாகும்.

அது போன்ற அலைகளில் சிக்கிக் கொள்ளாமல், வருமானத்திற்கு ஏற்ப சுயமாகச் சிந்தித்து ஒரு நல்ல வீட்டை வாங்கி, வளமுடன் அமைதியாக வாழ்பவர்கள், மகிழ்வுடன் ஆரோக்கியத்துடன் இருப்பது நாம் காணக் கூடியதாகவுள்ளது. எனவேதான், போக்குசார் பொருளாதார ஆராய்ச்சிக்கு இந்த வருட நோபல் பரிசு வழங்கியது அனைவராலும் பாராட்டப்படுகின்றது.

மருத்துவ உலகிலும் மனித குலத்தைத் தாக்கும் நோய்களுக்கும், இந்தப் போக்குசார் மனநிலை (TRENDING MENTALITY) பெரும் பாதிப்பை உண்டாக்கும் முக்கிய காரணியாகிறது.

ஒவ்வொரு மனிதனும் தனித்துவமானவன். அது போல், அவர்களுடைய உடம்பும் தனித்துவமானது. அவர்களுக்கு உண்டாகும் நோய்களும் பெரும்பாலும் தனித்துவமானதே! இதை உணராத நாம் நம்முடைய தனித்துவமான சிந்தனை பகுத்தறியும் தன்மை போன்றவற்றிலிருந்து விலகி, நாம் கடைப்பிடிக்கும் நடைமுறையிலுள்ள பிறர் சார்ந்த போக்குசார் மனநிலை காரணமாகவே பெரும் நோய்களுக்கும், கஷ்டங்களுக்கும் ஆளாகின்றோம். நாற்பது வயது ஆகிவிட்டால், 'டயபட்டிக்' வியாதி வர வேண்டும் என்று ஆவலுடன் எதிர்பார்க்கும் மனநிலையே 21ம் நூற்றாண்டின் போக்குசார் மனித மனநிலை. (21ST CENTUARY TRENTING MENTALITY)



நல்ல ஆரோக்கியமான உடல் நிலையுள்ள மனிதன் கூட சமூகம் சார்ந்த சிந்தனையின் காரணமாக எல்லாரும் செய்வது போல், தானும் மருத்துவப் பரிசோதனைகளை (REGULAR MEDICAL CHECK UP) செய்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுவதும், பரிசோதனை முடிவுகளில் காணப்படும் சிறு சிறு மாறுபாடுகளைக் கூடப் பெரும் வியாதியாகக் கற்பனை செய்து கொண்டு, தேவையற்ற மருந்து மாத்திரைகளுடன் வாழ்நாள் முழுவதும் அல்லாடிக் கொண்டும் இருப்பதே நவீன TRENTING MENTALITY.

சாதாரண தலைவலியைக் கூட மூளையில் ஏற்பட்டுள்ள 'கட்டி'யாகக் கற்பனை செய்து கொண்டு, எக்ஸ்றே, ஸ்கான், எம்.ஆர்.ஐ ஸ்கான் போன்ற பரிசோதனைகளுக்காக வாரக் கணக்கில், மாதக்கணக்கில் வருடக் கணக்கில் ஓடித்திரிந்து காத்துக் கிடந்து, வாழ்நாட்களை வீணாக்குவது அவசியம்தானா? எல்லாரும் செய்வதை நானும் செய்ய வேண்டுமா? என்னுடைய உண்மை நிலை என்ன? நானே சிந்திக்க வேண்டாமா?

எது சரி? எது பிழை? உணர வேண்டாமா? தனிமனித சிந்தனை மிகவும் உயர்வானது, மிகவும் ஆரோக்கியமானது!

போக்குசார் சிந்தனை (TRENTING MENTALITY) நம்முடைய வளங்களுக்குக் கேடானது. உடல் வளத்தையும் (HEALTH), பொருள் வளத்தையும் (WEALTH) சீர்குலைப்பது. HEALTH IS WEALTH.

ஆரோக்கியமே பெரும் செல்வம். 2017ம் ஆண்டின் பொருளாதார நோபல் பரிசு நமக்கு உணர்த்தும் பாடம். இன்றைய உலகின் பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் கடந்த காலத்தில், நாம் மேற்கொண்ட போக்குசார் பொருளாதாரக் கொள்கையே ஆகும். இதுபோல், இன்றைய மனித குலம் பெரும் அவதியுறும் நீரிழிவு, (DIABETES) உயர் இரத்த அழுத்தம், (B.P/HYPERTENSION) போன்ற வியாதிகளுக்கு TRENTING MENTALITYயே முக்கிய காரணியாக அமைகின்றது. இது போன்ற வியாதிகளை சுகப்படுத்த முடியாது. வாழ்நாள் முழுவதும் மருந்து உட்கொள்ள வேண்டும்



என்கின்ற நம்முடைய மரத்துப் போன மனநிலையை மாற்றி இப்பிரச்சினையைக் குணப்படுத்த முடியாதா? என்று புதிய கோணத்தில் சிந்திக்க வேண்டிய நெருக்கடியான காலகட்டம் இது. நவீன சிந்தனைகளும், புதிய பாதைகளும் தற்போதைய அவசியமான விஷயங்களாகும். மனித உடல் அபூர்வசக்தி வாய்ந்தது. அதனை நமது சீரற்ற சிந்தனைகளால் சிரமப்படுத்தாமல், புதிய கோணத்தில், தெளிவாக யோசிப்பதன் மூலம் பெரும் சவாலாக உள்ள டயபட்டிஸ், பிளட் பிரஷர் போன்ற வருத்தங்களை நாம் வெற்றி கொள்ளலாம்.

ஜெர்மன் நாட்டில் தோன்றிய மாற்று வைத்திய முறை ஹோமியோபதி மாறுபட்டுச் சிந்திப்பவர்களின் பிரதானமான தேர்வு. மாறாத வியாதிகளையும் மாற்றவல்லது.

மாற்றத்தை விரும்புவோரின் சரியான தீர்வு ஹோமியோகெயர். எதற்கும் ஓர் தீர்வு உண்டு. நம்பிக்கையுடன் வாழ்க்கையை எதிர்கொள்வோம். நம் ஆரோக்கியம் நம் கையில்! ●

**இலவச ஆலோசனைகளுக்கு**
**0208 1441553**

# டயபட்டிஸ் சலன்ஜ்

## ஹோமியோபதி மருத்துவம் + உங்கள் ஒத்துழைப்பு



## 100% கட்டுபடுத்தலாம்

### சிறப்பு சிகிச்சைகள்

- **உயர் இரத்த அழுத்தம்** (B.P/Hyper Tension)
- **கொலஸ்ட்ரால்** (Cholesterol)
- **சிறுநீரக கோளாறுகள்** (Kidney Diseases)
- **மூட்டு வலி** (Arthritis)
- **தோல் வியாதிகள்** (Skin Diseases)
- **ஹார்மோன் பிரச்சனைகள்** (Hormone Disorders)
- **மாதவிடாய் கோளாறுகள்** (Menses Disorders)
- **செக்ஸ் பிரச்சனைகள்** (Sex Disorders)
- **குழந்தையின்மை** (Infertility)
- **டயபட்டிஸ்** (Diabetes)

டயபட்டிஸ் குறித்த பயமும், அறியாமையும், பீதியுமே ஒரு டயபட்டிஸ் நோயாளியின் வாழ்க்கையில் ஏற்படும் முதல் முடிச்சாக அமைகின்றது. இந்த முடிச்சே மேலும் பல முடிச்சுகளை ஏற்படுத்தி, தீராத பிரச்சினைகளாக மாறிவிடுகிறது.

சவால்களைச் சமாளித்து, ஆரோக்கியமாக வாழ ஹோமியோபதி மருத்துவம் பக்க விளைவுகளின்றி உறுதுணையாக இருக்கும்.

எத்தனை வயதில் டயபட்டிஸ் வந்தாலும், மேலும் நாற்பது, ஐம்பது வருட காலம் தாராளமாக உயிர் வாழலாம்

உயர்தர மருத்துவம் → பாதுகாப்பான மருந்துகள் → விரைவான சேவை

## HOMOEO CARE

30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்

**இலவச மருத்துவ ஆலோசனைக்கு**
**0208 144 1553**

Viber: 0044 7833341693 skype: homoeocare வெப்சைட்: www.homoeocare.com இமெயில்: homoeocare@rediffmail.com



# சனிப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

**இங்கிலாந்து நேரப்படி 19.12.2017 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 01 மணி 07 நிமிடம் அளவில் துலாம் ராசியிலிருந்து தனுசு ராசிக்கு சனி பகவான் பெயர்ச்சி பெறுகிறார்.**




'ஜோதிட வித்வ சிரோமணி'
துன்னையூர் ராம் தேவலோகேஸ்வரக் குருக்கள் (சாரதா பீடம் ஜோதிடம்)
0094777 91 56 85


## மேடம்

### (அஸ்வினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம்)



பூமிகாரகன், செவ்வாய் கிரஹத்தின் ஆதிபத்தியம் கொண்ட மேடராசி அன்பர்களே! முகத்திற்கு நேரே முழுமையாக பேசும் சுபாவம் கொண்டதனாலே அதிகமான எதிர்ப்புகளை சந்தித்துக் கொண்டு இருப்பீர்கள். மனச்சாட்சியின் சொல் கேட்டு உங்களின் நலன் பார்த்து, சமயோசிதமாக அதே நேரம் மற்றவர்களுக்கு தீங்கு இல்லாத செயல் கொண்டு செயற்படும் உங்களுக்கு இறையருள் முழுமையாக உண்டு. மெழுகுவர்த்தி போல் உங்களை உருக்கி மற்றவர்களுக்கு நன்மை செய்வதில் உங்களுக்கு நிகர் யாரும் இல்லை. உங்களின் ராசி நிலைக்கு ஜீவன, லாபஸ்த்தான ஆதிபத்தியம் பெறுகின்ற "சனீஸ்வரன்" இதுவரை இரண்டரை ஆண்டுகளுக்கு மேலாக அட்டமத்துச்சனியாக உங்களை ஆக்கிரமித்து பலவகையில் சிரமங்கள் கொடுத்து வந்திருப்பார். தற்போது பாக்கிய ஸ்தானம் எனப்படும் 9ம் இடம் அமையப் போகின்றார். இந்த அமைப்பானது பல வகையிலும் உங்களுக்கு நற்பலன்கள் அமைய இடமுண்டு. எடுக்கின்ற முயற்சிகளில் அனுகூலமான வெற்றிகள் அமையும். தொழில் சார்ந்த முன்னேற்றங்கள் சிறப்பாக இருக்கும். புதிய தொழில் முயற்சிகளிலே அனுகூலமான வெற்றிகள் அமையும். குடும்ப நிலையில் மகிழ்வும், சிறப்பும் இருக்கும். பணவரவு மிகவும் திருப்திகரமானதாக அமையும். குடும்ப உறவினர்களுடன் அனுகூலமான நன்மைகள் அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலன்கள் ஏற்படும். திருமணம் போன்ற சுபகாரியம் எதிர்பார்க்கின்றவர்களுக்கு அப்பலன் மிகவும் நிறைவு தருவதாய் அமையும். வெளிநாட்டு பிரயாணங்களை எதிர்பார்க்கின்றவர்களுக்கு அப்பலன் அனுகூலமாக அமையும் பலன் இருக்கும். உங்களின் திட்டங்களை வெற்றி கொள்ளக்கூடிய காலமாக இருக்கும்.

உடல் ஆரோக்கியம், மனமகிழ்வு, எதிர்பாராத வகை நற்பலன்கள் என்பன அமையும் நிலையிருக்கும். ஜீவன, இலாபாதிபதியாக சனீஸ்வரன் ஆதிபத்தியம் பெற்று பாக்கியஸ்தான நிலையிலே அமைவது தொழில் சார்ந்த இலாபங்கள் சிறப்பாக இருக்கும். வீடு வாங்க, வாகனம் வாங்க அனுகூலங்கள் கைகூடிவரும். பூர்வீகச் சொத்து சேரும் நிலையும் இருக்கும். தந்தை வழி சார்ந்த நன்மைகள் அமையும் பலன் இருக்கும். எந்த விடயத்தையும் நீங்கள் வெற்றிகரமாக நிறைவு செய்யக்கூடிய வழிவகைகள் அனுகூலமாக அமையும். எனவே, இந்தச் சனிப்பெயர்ச்சி மூலமாக நீங்கள் மிகவும் அனுகூலமான நன்மைகள் அடைய அதிக பலனுண்டு.

## இடபம்

### (கார்த்திகை 2ம், 3ம், 4ம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம் 1ம், 2ம் பாதம்)



சுகபோககாரகன், களத்திரகாரகன் எனப் போற்றப்படுகின்ற சுக்கிரனின் ஆதிபத்தியம் கொண்ட இடபராசி அன்பர்களே! எதையும் சுலபமாக கஷ்டம் ஏதும் இல்லாமல் அனுபவிக்க வேண்டுமென்கின்ற எண்ணப்பாங்கு அதிகம் கொண்ட உங்களுக்கு மற்றவர்கள் கருத்து, புத்திமதி என்பன அறவே பிடிக்காத ஒன்று. இதனாலயே நீங்கள் அதிகளவு பிரச்சனைகளை வாங்கிக் கொண்டு சிரமப்படுவீர்கள். நல்ல திறமையும், நுட்பமான நிர்வாகத்திறனும் கொண்ட நீங்கள் சரியான நல்ல வழிநடத்தலில் செயற்பட்டால் அனைவரும் போற்றும் உன்னதமான நிலையைப் பெறுவீர்கள்.

உங்களின் ராசி நிலைக்கு சனீஸ்வரன் "அட்டமஸ்த்தானம்" எனப்படுகின்ற 8ம் இடம் அமைகின்றார். எனவே, மிகவும் பொறுமையும், நிதானமும் கொண்டு செயற்பட வேண்டும். எடுக்கின்ற முயற்சிகளில் தடை, தாமதநிலை இருக்கும். குடும்ப நிலையில் தேவையற்ற வீண் பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டிவரும். எந்த விடயமாயினும் ஒன்றிற்கு பல தடவைகள் சிந்தித்து செயற்படுவதே மிகமிக நன்மை தரும். புதிய முதலீடுகள் செய்வதில் மிகவும் கவனம் தேவை. பங்கு வியாபாரங்களில் சிக்கல் நிலைகள் தொடரும் பலன் இருக்கும். மனச்சஞ்சலநிலை அதிகமாக அமைந்திருக்கும். உறவினர்களுடன், நண்பர்களுடன் தேவையற்ற சஞ்சலநிலை, வாக்குவாதம் என்பன ஏற்படும். தொழில்சார்ந்த வேலைப்பளு, தொழில்நிலை மாற்றம் என்பன அமையும் பலனிருக்கும். கடன் நிலைகளில் சிக்கல், இழுபறி நிலைகள் தொடரும். பணவரவுகளில் மத்திமமான பலன்களே அமையும். அதற்கேற்ப உங்களின் பணவிடயங்களை கையாண்டு கொள்வதே அனுகூலமாகும். உடல்நிலை சார்ந்த சிறுசிறு உபாதைகள் அமையும் நிலை இருக்கும்.

உங்களின் ராசி நிலைக்கு குருவின் கோசார பலனும் 2018 நடுப்பகுதி வரை 6ம் இடம் அமைவதும். தேவையற்ற சிரமங்களை கொடுக்கும் நிலையிருக்கும். சொத்துக்கள் விற்று, வாங்குவதில் சற்று பொறுமையுடன் செயற்பட வேண்டும். நஷ்டங்கள், பணம், பொருள், விரயம் போன்ற நிலைகளும் அமையும். வாகனப் பிரயாணங்களில் நிதானத்துடன் செயற்பட வேண்டும். பொதுவாக மறைமுக எதிர்ப்புகள் அதிகமாக அமையும் நிலையிருக்கும். எந்தக் காரியத்தையும் திட்டமிட்டு செய்ய முடியாத நிலைகள் இருக்கும். மருத்துவரீதியான சத்திரசிகிச்சைகள் அமையவும் பலனுண்டு. எனவே, எல்லா விடயங்களிலும் பொறுமையோடு செயற்படுவதே மிகவும் அனுகூலமானதாக இருக்கும்.

## மிதுனம்

### (மிருகசீரிடம் 3ம், 4ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ம், 2ம், 3ம் பாதம்)



வித்தியாகாரகன், மாதுலகாரகன் எனப் போற்றப்படுகின்ற புதனின் ஆதிபத்தியம் கொண்ட மிதுனராசி அன்பர்களே!

சாதுரியமும், சாமர்த்தியமும் மிகவும் அதிகமாக கொண்டவர்கள் நீங்கள். மனநிலையில் நிறைய விடயங்களை உங்களுக்குள்ளேயே புதைத்து வைத்திருப்பீர்கள். நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள், எப்படி செயற்படுவீர்களென்று யாராலும் உங்களை எடைபோட முடியாது. அந்தளவிற்கு உங்களின் அமைதியும், ஆளுமையும் புதைந்து கிடக்கும். தானம், தர்மம், பக்தியென எல்லாவிடயங்களிலும் ஒரு வரையறை வைத்து செயற்படுவீர்கள். ஆனால், உங்களுக்கு பிரியமான விடயங்களை மட்டும் சலிக்காமல் எத்தனை முறையும் ரகசியமாக அனுபவித்துக் கொள்வீர்கள்.

உங்களின் ராசி நிலைக்கு சனீஸ்வரன் "கண்டச்சனி" என்று கூறப்படும். 7ம் இடத்திற்கு அமைகின்றார். பொதுவாக இந்தப் பெயர்ச்சி உங்களுக்கு மத்திமமான பலன்களையே கொடுக்கும் நிலையிருக்கும். குடும்பரீதியாக பலவிதமான சிக்கல் நிலைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலையிருக்கும். எதையும் திட்டமிட்டு செய்ய முடியாத பலன் இருக்கும். மனைவியுடன் தேவையற்ற வீண்பிரச்சனைகள், வாக்குவாதங்கள், கணவன், மனைவி உறவில் விரிசல் நிலைகள், பிள்ளைகளின் மூலமாக சிறுசிறு பிரச்சனைகள், கொடுக்கல், வாங்கலில் இழுபறி நிலைகள், உறவினர்களுடன் மனச்சஞ்சல நிலைகளென பலவிதத்திலும் சிக்கல் நிலையிருக்கும். உங்கள் ராசி நிலைக்கு சனீஸ்வரன் அட்டம, பாக்கிய, ஸ்தான ஆதிபத்தியம் பெறுகின்றார். எனவே, இதன்மூலம் ஓரளவிற்கு சிறுசிறு திடீர் நன்மைகள் இடையிடையே ஏற்பட வாய்ப்புண்டு. அதற்கு குருவின் கோசாரபலனும் பஞ்சமஸ்தானம் அமைவதும் ஒரு அனுகூலமான நிலையாக இருக்கின்றது. இதுவொரு 20% பலனாகவே இருக்கும். எனவே, எடுக்கின்ற முயற்சிகளில் மிகவும் பொறுமை, நிதானம் கொண்டு செயற்பட வேண்டும். புதிய முயற்சிகளில் தேவையற்ற தலையீடுகளை தவிர்த்துக் கொள்வது மிகவும் நல்லது. தொழில் சார்ந்த விடயங்களில் அலைச்சல்நிலை அதிகமாக அமைந்து இருக்கும்.

மற்றும் திருமணம் போன்ற சுபகாரியங்களில் இழுபறி, சிக்கல் நிலைகள் ஏற்பட்டே அமையும் நிலையிருக்கும். உங்கள் நம்பிக்கைக்குரியவர்களே அதிகமான பிரச்சனைகளை உருவாக்கிவிடுகின்ற நிலையிருக்கும், பெண்களின் மூலமாக தேவையற்ற பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும். உங்களின் பலவீனம் அறிந்து உங்களை வீழ்த்திவிட எதிரிகள் வியூகம் அமைந்திருக்கும். எனவே மிகவும் நிதானமுடன் உங்கள் செயற்பாடுகளை நெறிப்படுத்தி செயற்படுவதே மிகவும் நன்மை கொடுக்கும். நீங்களுண்டு உங்கள் வேலையுண்டு என செயற்படுவதே சாலவும் சிறப்பாக இருக்கும்.

## கடகம்

### (புனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம்)



மாத்துருகாரகன், சஞ்சலக்கிரஹம் எனப்போற்றப்படுகின்ற சந்திரனின் ஆதிபத்தியம் பெற்ற கடகராசி அன்பர்களே! எல்லா மனிதருக்குள்ளும் கபடம் இருக்கும். சுயநலம் இருக்கும். ஒருசில தேவைகள் ஏற்படும் போது அதைப் பிரயோகித்துக் கொள்வார்கள். ஆனால், உங்களின் ராசிக்கு கபடம் ஒட்டிக் கொண்டேயிருக்கும். யாரையும் எளிதில் நம்பமாட்டீர்கள். நீங்கள் ஒருவரிடம் நெருங்கி உதவி செய்தால் அதில் 85% உங்கள் நலனிற்கான வெற்றியாகவே இருக்கும். உங்களின் வெற்றிக்கு, புகழுக்கு, சமூக அந்தஸ்திற்கு எதையும் செய்யத் துணியும் தைரியசாலிகள் நீங்களேதான்.

ஆனால், உங்கள் வாழ்விலே வெற்றியும், தோல்வியும் சமநிலையிலேயே இருக்கும். உங்களின் ராசி நிலைக்கு சனீஸ்வரன் ரோகஸ்த்தானம் எனப்படும். 6ம் இடம் அமைகின்றார். அதிகமான யோக பலன்களை நீங்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புகள் அதிகம் இருக்கும். எடுக்கும் முயற்சிளில் நல்ல வெற்றிகளைப் பெற முடியும். தொழில் நிலை சார்ந்த சிறப்புகள், மேன்மைகள் அமையும். குடும்ப நிலையில் அனுகூலமான நற்பலன்கள் ஏற்படும். புதிய உறவுகளின் மூலமாக இலாபகரமான நன்மைகள் ஏற்படும். கடன் நிலைகளில் அனுகூலமான பலன்கள் ஏற்படும். கொடுக்கல், வாங்கலில் சுமூகமான நிலைகள் அமையும் பலனுண்டு. புதிய சொத்துக்கள் சேருகின்ற நிலைகளும் அமையும். நீண்டகாலத் திட்டங்களை நிறைவேற்றக்கூடிய பலன்கள் அமையும். குடும்ப நிலையில் சுபகாரியங்கள் அமையும் பலன் இருக்கும். சொத்துகள் விற்க, வாங்க அனுகூலமான நிலைகள் ஏற்படும். எதையும் திட்டமிட்டு செய்யக் கூடியதாய இருக்கும். நீண்ட நாள் வரவுகள் உங்களை வந்து சேரும். உங்கள் ராசிநிலைக்கு குருவின் கோசார பலன் மத்திமமாக அமைவது முற்பகுதியில் சிறுசிறு சிக்கல் நிலைகளும், இழுபறி நிலைகளும் ஏற்பட்டு மறையும். எனவே, முற்பகுதியில் சற்று நிதானம் தேவை. குறிப்பாக 2018 நடுப்பகுதி வரையான காலம். அதன் பின்னர் நன்மைகள் அதிகமாக இருக்கும்.

உங்களின் ராசி நிலைக்கு களத்திர, அட்டமஸ்தான ஆதிபத்தியம் பெறுகின்றார் சனிபகவான். இருப்பினும் அவர் சஞ்சாரப்படி உங்கள் ராசிக்கு யோகமான 6ம் இடம் அமைவதன் மூலமாக எதிர்பாராதவகை அதிர்ஷ்ட பலன் உங்களை நாடிவரும் நிலையுண்டு. வெளிநாட்டு பிரயாணங்களை எதிர்பார்க்கின்றவர்களுக்கு அப்பலன் நிறைவாக அமையும். புதிய தொழில் முயற்சிகளில் வெற்றிகள் இருக்கும். உறவினர், நண்பர்களின் மூலம் எதிர்பாராத நன்மைகள் அமைய இடமுண்டு. புதிய சொத்துக்கள் சேரக்கூடிய பலனும் உண்டு. எனவே, உங்களின் முயற்சிகளின் மூலமாக நீங்கள் அதிகமான

சிறப்பும், முன்னேற்றமும் இந்த சனிப்பெயர்ச்சி மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

## சிம்மம்

### (மகம், பூரம், உத்தரம் 1ம் பாதம்)



பித்ருகாரகன், பிதாக்கிரஹனம் எனப் போற்றப்படும் சூரியனின் ஆதிபத்தியம் கொண்ட சிம்மராசி அன்பர்களே! ஆதிக்கமான குணமும், செயலும், அதிகமாக கொண்டவர்கள் நீங்கள். உங்களின் ஒவ்வொரு நிலை முன்னேற்றத்திலும், திட்டமிட்டு, திடமாக செயற்படுகின்ற நீங்கள் அதிகமான புகழையும், சமூக உயர்வையும், விரும்புவீர்கள். மற்றவர்களுடன் ஒரு எல்லையை நிர்ணயம் செய்தே பழகுவீர்கள். மற்றவர்களுக்காக உங்கள் தனித்துவங்களை இழக்கமாட்டீர்கள். உறவினர்களாக இருந்தாலும் நீங்கள் உங்களின் தன்மைகளை விட்டுக் கொடுக்கமாட்டீர்கள். உங்களின் நலத்திலும், வெற்றியிலும் முழுமை கொடுத்தே, மற்றவர்களுக்கு உங்களின் பங்களிப்பு அமைந்திருக்கும்.

உங்களின் ராசிநிலைக்கு ரோக, களத்திர, ஸ்தான ஆதிபத்தியம் பெற்று அமையும் சனீஸ்வரன் பஞ்சமஸ்த்தானமாகிய 5ம் இடம் அமைகின்றார். எனவே, எடுக்கின்ற முயற்சிகளில் சற்று நிதானமாக செயற்பட வேண்டும். தொழில்நிலை சார்ந்த அலைச்சல் நிலையிருக்கும். பணவரவு விடயங்களில் சற்று மந்தமான பலனே அமையும். குடும்ப நிலையில் சற்றுக் குழப்ப நிலைகள் இருக்கும். எதையும் திட்டமிட்டுச் செய்யமுடியாத நிலையிருக்கும். உங்கள் ராசி நிலைக்கு சனீஸ்வரனின் பலன் மத்திமமாகவே அமையும். பூர்வீகச் சொத்து விடயங்களில் சற்று பிரச்சனைகள், வழக்கு விவகாரங்கள் தொடரும். பிள்ளைகளின் மூலம் சிக்கல் நிலைகள் ஏற்படும். குடும்ப உறவுகளுடன் சிறு சிறு மனச்சஞ்சலம் இருக்கும். மனச்சஞ்சலம், எதிர்பாராத பிரச்சனைகள், தேவையற்ற சிக்கல் நிலைகள் என்பன தொடரும் நிலைகள் அமையும். எனவே, மிகவும் நிதானமாக செயற்பட்டுக் கொள்வதே உங்களுக்கு உகந்தது. திருமணம் போன்ற சுபகாரியங்களில் தடை, தாமத நிலைகள் இருக்கும். கொடுக்கல், வாங்கல் விடயங்களில் இழுபறி நிலைகள் தொடரும். நண்பர்களுடன் மனஸ்தாப நிலை இருக்கும். புதிய முயற்சிகளில் பொறுமை, நிதானம் வேண்டும். வெளிநாட்டு பிரயாணங்களை எதிர்பார்க்கின்றவர்களுக்கு அப்பலன் சற்று சுமாரானதாகவே அமையும். சொத்துக்கள் வாங்குவதில், விற்பதில் பொறுமை, நிதானம் வேண்டும். வாகன விடயங்களிலும் சற்று சிக்கல் நிலைகள் தொடரும் பலன் அமைந்திருக்கும். எனவே, அதற்கேற்ப உங்களின் செயற்பாடுகள் தொடர வேண்டும். வீண் விடயங்களில் உங்களின் தலையீடுகளை தவிர்ப்பது மிகவும் நல்லது.

உங்களின் ராசி நிலைக்கு குருவின் கோசார பலன் 3ம் இடம் அமைகின்றது. அடுத்து 4ம் இடம் என அமையும். அந்த நிலையிலே சனீஸ்வரன் சஞ்சாரம் பஞ்சமஸ்த்தானம் அமைவதும் சச்சரவுகள் தொடரும் நிலையிருக்கும். எதையும் உங்களின் திட்டத்திற்கேற்ப செயற்படுத்தி வெற்றிகாண முடியாத நிலைகள் இருக்கும். மற்றவர்களுக்கு ஒரு சிறந்த நிர்வாகியாக இருக்கும் நீங்கள் மற்றவர்களின் விமர்சனங்களுக்கு ஆளாக வேண்டிய நிலையிருக்கும். எனவே, இவற்றை மனதிலே கொண்டு உங்களின் செயற்பாடுகள் அனைத்தையும் மிகவும் தெளிவாக பொறுமையுடன் செயற்படுத்தி அனுகூல பலன் பெறுங்கள்.

## கன்னி

### (உத்தரம் 2ம், 3ம், 4ம் பாதம், அத்தம், சித்திரை)




வித்தியாகாரகன், மாதுலகாரகன் எனப் போற்றப்படும் புதனின் ஆதிபத்தியம் கொண்ட கன்னிராசி அன்பர்களே! பொதுவாகவே எந்த விடயத்தையும் ஒன்றிற்கு பலமுறை சிந்தித்து செயற்படுகின்ற உங்களுக்கு பிடிவாதமான குணவியல்பு ஒட்டியிருக்கும் நிலையுண்டு. மனதிலே வைராக்கியம் கொண்டு செயற்படுகின்ற நீங்கள் உங்களுக்கு தீமை செய்பவர்களை எத்தனை காலம் சென்றாலும் அமைதியாக இருந்து பழிதீர்த்துக் கொள்வீர்கள். மனதிலே எப்போதும் சிந்தனை அதிகமாக இருக்கும். எதிர்காலத்தின் உயர்வில் அதிக அக்கறை, ஆர்வம் கொண்டு செயற்படுவீர்கள். தேடலும், உழைப்பும் உங்களிடம் அதிகமாக அமைந்திருக்கும்.

உங்களின் ராசி நிலைக்கு பஞ்சம, ரோக, ஸ்தான ஆதிபத்தியம் பெறுகின்ற சனிபகவான் சுகஸ்த்தானம் எனப்படுகின்ற 4ம் இடத்தில் அர்த்தாஷ்டம சனியாக அமைகின்றார். இந்தச் சஞ்சாரம் பெரும் சிறப்பான பலன்களைத் தரும் நிலை குறைவாகவே இருக்கும். தொழில் நிலை சார்ந்த அலைச்சல் நிலை அதிகமாக இருக்கும். பணவரவு விடயங்களில் சிக்கல் நிலைகள் தொடரும். குடும்பத்தில் தேவையற்ற வீண்பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலையிருக்கும். உறவினர்களின் மூலமாக தேவையற்ற சிக்கல் நிலைகளை எதிர்கொள்ள வேண்டிவரும். நிதானமாகவும், பொறுமையாகவும் செயற்படுவது மிகவும் அனுகூலம் கொடுக்கும். கொடுக்கல், வாங்கல் விடயங்களில் சிக்கல் நிலைகள் இருக்கும். உடல்நிலை சார்ந்த சுகயீனம், மருத்துவ செலவு, சிறுசத்திரசிகிச்சை என்பன அமையும் நிலையிருக்கும். மனநிலையிலே அதிக சஞ்சலமான போக்கு இருக்கும். உங்களின் செயல்களில் தெளிவில்லாத நிலை அமையும். இதன் மூலமாக பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டிவரும். புதிய முயற்சிகளில் அவசரம் இல்லாத பொறுமையான செயற்பாடு மிகவும் முக்கியம். திடீரென எதிர்பாராத செலவுகள் அமையும் பலனும் இருக்கும். வாகன விடயங்களில் சற்று நிதானமான செயற்பாடு வேண்டும். கொடுக்கல், வாங்கல் மூலம் மனஸ்தாபங்கள், சச்சரவுகள் என்பன உறவினர், நண்பர்களுடன் ஏற்படுகின்ற நிலை இருக்கும் அதற்கேற்ப செயற்படுவது மிகவும் நல்லது. குருவின் கோசாரபலன் தனஸ்த்தானமாகிய 2ம் இடம் அமைவதனால் எதிர்பாராதவகை நன்மைகள் அமையும் நிலை திடீரென அமையலாம். தொழில்நிலை சார்ந்த அலைச்சல் சற்று அதிகமாக இருக்கும். உங்கள் முயற்சிகளில், முடிவுகளில் திடமாக, தீர்க்கமாக ஒரு நிலையை எடுக்க முடியாமல் திண்டாடுவீர்கள். எனவே, எல்லா விடயங்களிலும் மிகவும் பொறுமையாகவும், நிதானமாகவும் செயற்பட்டுக் கொள்வது மிகமிக நல்லது. சாமர்த்தியமாக வழியமைத்து வெற்றிகள் பெறுக!

## விருட்சிகம்

### (விசாகம் 4ம் பாதம், அனுஷம், கேட்டை)



*பிராத்ருகாரகன், பூமிகாரகன்* எனப்போற்றப்படுகின்ற செவ்வாய் கிரஹத்தின் ஆதிபத்தியம் கொண்ட விருட்சிகராசி அன்பர்களே! எதையும் நிதானமாக சிந்தித்து செயற்படும். உங்களுக்கு எதிர்காலத் திட்டம் வகுத்து செயற்படுகின்ற ஆற்றல் அதிகம் உண்டு. உங்கள் நலன், உங்கள் குடும்பநலன் என்பனவற்றில் அதிகமான அக்கறை கொண்டவர்களாக இருப்பீர்கள். தேவையில்லாமல் உங்கள் தலையீடுகளை தவிர்த்துக் கொள்வதிலும், உங்கள் தலைமைத்துவம் முக்கியத்துவம் பெறுகின்ற காரியத்திறனும் கொண்டு செயற்படும் ஆற்றல் கொண்டவர்கள் நீங்கள். அதிகமான அறிவுத்திறன் உங்கள் அந்தஸ்தை முன்னிலைப்படுத்தி நிற்கும் நிலையிருக்கும். உங்களுக்கு "ஏழரைச்சனி" கடைக்கூறு சஞ்சாரமாக அமைகின்றார். பொதுவாக பெரும் சிறப்புகளை எதிர்பார்க்க முடியாது. சற்று அலைச்சல் நிலைகள் அதிகமாக இருக்கும். எடுக்கும் முயற்சிகளில் தடை, தாமத நிலைகள் தொடரும். பணவரவு சற்று மத்திமமாகவே அமையும் நிலையுண்டு. கொடுக்கல், வாங்கல் விடயங்களில் நிதானமான செயற்பாடு வேண்டும். குடும்ப நிலையில் சிறு சிறு குழப்பங்கள் இருக்கும். உறவினர்களுடன் மனஸ்தாப நிலைகள் ஏற்படும். பணவரவு சற்று மத்திமமாகவே இருக்கும். புதிய முயற்சிகளில் சிக்கல், இழுபறி நிலைகள் தொடரும். மனநிலையில் சஞ்சல நிலைகள் அதிகமாக இருக்கும். உடல்நிலையிலே சோர்வு நிலை இருக்கும். தொழில்சார்ந்த அலைச்சல் நிலை அதிகமாக அமைந்திருக்கும். தொழில் நிலைகளில் தேவையற்ற பிரச்சனைகளும் இருக்கும். எதிர்பார்ப்புகளில் சிறுசிறு தடைகள், இழுபறிகள் இருக்கும். கடன் நிலைகளில் சிக்கல் நிலைகள் இருக்கும். கொடுக்கல், வாங்கல்களில் தேவையற்ற வீண்சிக்கல் நிலைகள் அமையலாம். எனவே, மிகவும் பொறுமையாக செயற்படவும், எதிலும் பிரச்சனைகள் சூழும் நிலைகள் அமையும். தொழில் சார்ந்த பிரயாணங்கள் ஏற்படும். எதிர்பாராத செலவீனங்கள் அமைகின்ற நிலையிருக்கும். வாகன விடயங்களில் நிதான செயற்பாடு வேண்டும். உடல் நிலைச்சோர்வும், வேலைப்பளுவும் அதிகமாக அமைந்திருக்கும். மனதில் நீங்கள் நினைக்கும் விடயங்கள் உடனடியாக நிறைவு செய்ய முடியாத நிலையிருக்கும். உங்களின் ராசி நிலைக்கு குரு சஞ்சாரம் விரயஸ்த்தானமாகிய 12ம் இடம் அமைவது பொருள்விரயம், பணவிரயம் என்பனவற்றை ஏற்படுத்தும் நிலையிருக்கும். அதற்கேற்ப பொறுமையோடு செயற்படவும், அனுகூலமான பலன்கள் கிடைக்கும். எதையும் அவசர முடிவாக எடுத்துச் செயற்படாமல் உங்கள் நிதான செயலின் மூலமாக அணிவகுத்துக் கொண்டு தேவையற்ற விடயங்களில் தலையீடுகளை தவிர்த்து நிதானமுடன் செயற்படுங்கள். ஏழரைச்சனி கடைக்கூற்று சஞ்சாரம் எதிர்பாராத திடீர் சிக்கல்களை உருவாக்கும்.

## துலாம்

### (சித்திரை 3ம், 4ம் பாதம், சுவாதி, விசாகம் 1ம், 2ம், 3ம் பாதம்)




சுகபோககாரகன், களத்திரக்காரகன் எனப்போற்றப்படுகின்ற சுக்கிரனின் ஆதிபத்தியம் கொண்ட துலாம்ராசி அன்பர்களே! நீங்கள் அதிகமான அக்கறையோடு உங்களின் காரியங்களை மேற்கொள்வீர்கள். தொழில் நிலையில் நியாய பூர்வமாக செயற்படுகின்ற குணவியல்பு இருக்கும். ஒரு தவறு செய்தால் அந்தத் தவறுக்குரிய பரிகாரத்தை செய்து விடுகின்ற தயாளகுணம் உங்களுக்கு உரிய தனித்துவமாகும். உங்களுக்கென்று ஒரு வரையறைகொண்டு செயற்படுவீர்கள். உங்களின் சுயகௌரவப் போக்கினால் பல சிரமங்களையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். நேர்மையான குணவியல்புகளுடன் செயற்படுவீர்கள். இதனால் பல லாபங்கள், அதிர்ஷ்ட நிலைகள் என்பன உங்களின் கைநழுவிப் போகின்ற நிலையும் அமைவதுண்டு.

உங்கள் ராசி நிலைக்கு சுக, பஞ்சம, ஸ்தான ஆதிபத்தியம் பெறுகின்ற சனீஸ்வரன் "ஏழரைச்சனி சஞ்சாரம்" எனும் நீண்டகால சஞ்சாரத்தில் இருந்து நீங்கி ஜெயஸ்த்தானம் எனப்படுகின்ற 3ம் இடம் அமைகின்றார். அப்பாடா! என ஒரு பெருமூச்சை விட்டுக் கொள்ளுங்கள். யாராக இருந்தாலும் சனீஸ்வரன் நீதிமானாக செயற்பட்டு உங்களின் ஊழ்வினைக்கேற்ப, உரிய பலாபலனை நன்மை, தீமையென சரியாக கொடுத்துவிடுவார். துலாம்ராசியில் சனீஸ்வரன் உச்சநிலை பெறுவதால் பாதிப்பில்லை என்கின்ற ஒரு வார்த்தைப் பிரயோகம் ஜோதிடர்களால் கூறப்பட்டாலும் சனீஸ்வரன் தனது பலாபலன்களை சரியாகக் கொடுப்பார் என்பதே மெய். அந்த வகையிலே கடந்த எட்டு ஆண்டுகளாக நீங்கள் பலவகைச் சிரமங்களை எதிர்கொண்டு இருப்பீர்கள். இதன்மூலம் நிறைய பக்குவ நிலையும் பெற்றிருப்பீர்கள். தற்போது அமையும் சனீஸ்வர சஞ்சாரம் மிகவும் அனுகூலமான நன்மைகள் பெறக்கூடிய பலன் உண்டு. தொழில்நிலை சார்ந்த முன்னேற்றங்கள் சிறப்பாக இருக்கும். பணவரவு மிகவும் திருப்திகரமாக அமையும். கொடுக்கல், வாங்கல்களில் சுமூகமான நிலைகள் அமையும். குடும்ப நிலையில் மகிழ்வான பலன்கள் அமையும்.

திருமணம் போன்ற சுபகாரியங்களை எதிர்பார்க்கின்றவர்களுக்கு அப்பலன் நிறைவானதாக அமைய பலன் இருக்கும். புதிய முயற்சிகளில் அனுகூலமான நன்மைகள் அமையும் நிலையிருக்கும். நீங்கள் எதிர்பார்க்கின்ற விடயங்களை நிறைவு செய்யக்கூடிய பலன்கள் சிறப்பாக இருக்கும். வழக்கு விவகாரங்களில் சுமூகமான நிலைகள் அமையும். வெளிநாட்டு பிரயாணங்களை எதிர்பார்க்கின்றவர்களுக்கு அப்பலன் நிறைவு தருவதாய் இருக்கும். எதிர்பாராத சுபசெலவுகள் அமையும் பலனும் இருக்கும். உறவினர்களின் மூலமாகவும், நண்பர்களின் மூலமாகவும் அனுகூலங்கள் கிடைக்கும். குருவின் கோசாரபலன் தற்போது ஜென்ம ராசியில் குருசஞ்சாரம் அமைவது சிறுசிறு பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலையிருக்கும். அதற்கேற்ப உங்களின் செயற்பாடுகளை சாதுரியமாகவும், சாமர்த்தியமாகவும் கொண்டு நகர்வதன் மூலமாக நன்மைகளை நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும். உங்களின் தெய்வ நம்பிக்கை உங்களுக்கு மிகவும் பக்கபலமாக இருக்கும்.

## தனுசு

### (மூலம், பூராடம், உத்தராடம் 1ம் பாதம்)



புத்திரகாரகன், ஞானகாரகன் எனப்போற்றப்படுகின்ற குருபகவானின் ஆதிபத்தியம் கொண்ட தனுசுராசி அன்பர்களே! தன்னம்பிக்கை அதிகம் கொண்டவர்கள் நீங்கள். எதையும் உங்களின் எண்ணப்படியே செய்வதனால் பலவிதமான பிரச்சனைகளை சந்திக்கின்ற நிலையிருக்கும். பிடிவாதம், முன்கோபம் என்பன சற்று அதிகமாகவே இருக்கும். மனதிலே கபடம் கொண்டு பழகும் நீங்கள் சஞ்சலநிலை கொண்டவர்களாகவே இருப்பீர்கள். எந்தவிடயமாயினும் அதை சுலபமாக முடிக்க முடியாதபடி பிரச்சனைகளைச் சந்திப்பீர்கள். மற்றவர்களின் மனதைப் புரிந்து செயற்படுகின்ற நிலை சற்றுக் குறைவாக அமையும்.

உங்களின் ராசி நிலைக்கு ஏழரைச்சனி சஞ்சாரத்தின் "ஜென்மச்சனி" சஞ்சாரமானது பலவகையிலும் சிரமங்கள் கொடுக்கும் நிலையிருக்கும். எனவே, பொறுமை, நிதானமுடன் செயற்பட வேண்டும். குடும்ப நிலையில் தேவையற்ற வீண் பிரச்சனைகள் சூழும். பணவரவு சற்று மத்திமமாகவே அமையும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல், இழுபறி நிலைகள் தொடரும். எதையும் திட்டமிட்டு செய்ய முடியாத நிலை இருக்கும். மனநிலையில் அதிகமான யோசனை, உடல்நிலைச் சோர்வு போன்ற பலாபலன்கள் அமையும் நிலையிருக்கும். எதையும் சற்று நிதானமாகவே சிந்தித்து செயற்பட வேண்டும். உங்களின் ராசி நிலைக்கு தன, ஜெயஸ்த்தான, ஆதிபத்தியம் பெறும் சனீஸ்வரன் ஏழரைச்சனி சஞ்சாரமாக அமைவது தொழில் நிலைகளில் சற்று சிக்கல், இழுபறி நிலையிருக்கும். தொழில்நிலை சார்ந்த வேலைப்பளுவும், திடீர் பிரயாண நிலைகளும் அமையும் பலனிருக்கும். தொழில் சார்ந்த வருமானங்களில் மந்தமான பலன் இருக்கும். உடல்நிலை சார்ந்த உபாதை இருக்கும். மருத்துவ செலவும் அதிகமிருக்கும்.

*27ம் பக்கம் பார்க்க*



மாதவிசிவலீலன்

# பெயரிடப்படாத நட்சத்திரங்கள்



ஊடறு விடியல் வெளியீடாக 2011 இல் ஈழத்துப் பெண் போராளிகளின் கவிதைகளைத் தாங்கி வெளிவந்த நூல் பெயரிடாத நட்சத்திரங்கள். களத்திலே ஆயுதமேந்திய இப்பெண்களின் அபிலாசைகள்,எண்ணங்கள், ஏக்கங்கள், மண் மீதும் மக்கள் மீதும் அவர்கள் கொண்டிருந்த பற்றுக்கள், கவித்துவங்கள் யாவற்றினதும் வெட்டுமுகத்தோற்றமாக இக்கவிதைத் தொகுப்பைக் காணலாம்.

அம்புலி, காந்தா, அலையிசை, ஜெயா, கலைமகள், ஆதிலட்சுமி, கனிமொழி, ஞானமதி, வானதி, புரட்சிகரா, கஸ்தூரி, கிருபா, மலைமகள், நகுலா, நாமகள், நாதினி, பிரேமினி, பிரமிளா, ரூபிமார்க்கட், பாரதி, சிரஞ்சீவி, சூரியநிலா, சுதாமதி, தமிழவள், தயாமதி, தூயவள் ஆகியோரின் கவிதைகளை உள்ளடக்கிய இந்நூல், போராட்ட நிகழ்வுகள் பலவற்றை ஆவணப்படுத்துவதால் காலத்தின் பொக்கிசமாக அமைகின்றது.

2009ஆம் ஆண்டு ஆயுதப்போராட்டம் மழுங்கடிக்கப்பட்ட பின்னர், அங்கிருந்த போராளிகள் தற்போது உயிரோடில்லை. ஆயினும் அவர்தம் உணர்வுகளைப் பதிவிடத்துணிந்த ஊடறு மதிப்புக்குரியதாகின்றது. தினமும் கெஷல்லுக்குள்ளும் விமானக்குண்டு வீச்சுக்குள்ளும் மரணங்களுக்குள்ளும் வாழ்ந்திட்ட போதும் தம் வாழ்வில் வசந்தமொன்றைக் கற்பனை செய்தவாறு காலங்களைக் கடத்திய அவர்தம் வாழ்வு மிகப்பெரும் சோகமொன்றை விதைத்து விடுகின்றது. சாக விரும்பாது பலரும் நாளைய பொழுதும் தாம் வாழ வேண்டுமென விரும்புகின்றனர். நிச்சயமற்ற வாழ்வோடு நாளும் வாழ்கின்ற நிலைப்பாட்டினால் ஆழ்மனத்து ஏக்கமாகக் கவிதைகளில் அவற்றை வெளிப்படுத்துகின்றனர்.

**ஓராயிரம் விழிகளின் உறக்கத்துக்கான**
**என் காவலிருப்பு**
**நாளையும் நான் வாழவேண்டும் (அம்புலி)**

பெறுமதிமிக்க தம் வாழ்வை மக்களின் நிம்மதி வாழ்விற்காக அர்ப்பணித்தமையைக் காணலாம்.

**ஓர் அழகிய காலையை**
**உனக்கு**
**காட்டமுடியா வசந்த காலத்தில்**
**விளையாட முடியாத பாலைவன நாட்களையே**
**உனக்குப் பரிசளிக்கிறேன் (அம்புலி)**

எனக்கூறுகையில் மனதால் வதைபடுவதை எம்மால் உணரமுடிகின்றது. 'ஏ-9 வீதி பற்றிய குறிப்புகள்' பற்றிய கவிதைகள் போர்க்காலச் சூழலை எடுத்தியம்புவனவாகக் காணப்படுகின்றன. புலம்பெயர்ந்து சென்ற மக்களின் துயர் வாழ்வை ஒரு விமர்சனக் கவிதையாக அம்புலி முன் வைக்கின்றார். அதுவெல்லாம் அன்றைய அவர்களது கனவுகளிலொன்றாக இருந்திருக்கின்றது.

காயப்பட்டு அங்கவீனர்களாகிய போராளிகள் தாம் ஏனையோருக்குப் பாரமாகிப் போனதாகக் கவலையுறுவதனை, 'சாகாத பிணமாக நானிங்கு நிலையானேன்' எனத் துயருற்றுப் பதிவாக்குகின்றார்.

மரணங்கள் மலிந்து காணப்பட்ட அத்தேசத்தை காந்தா என்ற போராளி எந்த மகனுக்காக எந்தன் கால்களை நகர்த்த என ஏங்கித் துயருறுகின்றார். இவ்வாறே வீதியில் பாடையில் செல்லும் போராளிக்குத் தலை வணங்கி வேலி நிற்பதாக,

**வீர மகளிரின்**
**வித்துடல் சுமந்த**
**ஊர்திகள் தம்மை**
**கடந்து சென்றபோதெல்லாம்**
**தலை வணங்கி நின்றிருக்கின்றது**
**அந்த வேலி (சிரஞ்சீவி)**




மாவீரர்கள் தியாகங்கள் பற்றியும் கந்தக வெடி சுமந்து கரும்புலியாகிக் காற்றோடு போன போராளிகள் பற்றியும் இப்போராளிகள் பேசியுள்ளனர். அந்த நேர அவஸ்தையைக் கூறும் போது 'மௌனமாக ஒளிமுகங்கள் தமக்குள் குமுறிக் கொள்ளும்' என்றும் 'அவர்கள் அதிர்வுகளோடு வெளிச்சமாகி இருப்பர்' என்றும் பதிவிடுகின்றனர். சங்கச் செய்யுட்களில் கூறப்படும் புறச்செய்யுட்களின் காட்சிப்படுத்தலின் இன்னொரு வடிவங்களை இப்பாடல்களில் காணலாம். 'பெயரிடாத நட்சத்திரங்கள்' கரும்புலி மறவர் பற்றிச் சொல்கிறது. போராளிகளின் வாழ்வை இரவுகளோடு பயணிக்கும் பயங்கரங்களை 'காலங்களற்ற கடல்' எனும்கவிதையில்சூரியநிலா வடித்திருக்கின்றார்.

இந்திய இராணுவம் செய்த அட்டூழியங்களும் இவர்களால் நினைவுபடுத்தப்படுகின்றது, 'உணவும் மருந்தும் கொண்டு உள்ளே வந்தார்கள்' என ஆதங்கப்படுகின்றார் ஒருபோராளி.'அந்தத் தீபாவளியும் என் அழகிய கிராமமும்' எனும் கவிதையில்

**இந்தியா என்கின்ற இமாலயம்**
**எங்கள் மனப்பரப்பில் இடிந்து**
**நொருங்குகின்றது**
**என்னவென்று அறியாமல்**
**முற்றத்துக்கு ஓடிவந்த அம்மா**
**குண்டுபட்டு வீழ்கிறாள்**
**அதைப் பார்த்து**
**அலறிய தம்பிக்குச் சூடு' (ஆதிலட்சுமி)**

என்றுஅப்பாவிகளின்இறப்புச்சொல்லப்படுகின்றது. வல்வெட்டித்துறைப் படுகொலையைக்கூறுவதாகப்பின் வரும்வரிகள்அமைகின்றன.

**இறந்து கிடப்பவர்கள்**
**ஈழத்தமிழர்கள் அல்ல**
**இந்தியாவின் மனிதாபிமானமும்**
**ஜனநாயகமும் தான் ( தூயவள்)**

எழுதாத கவிதை என்ற தன் இறுதிக் கவிதையினூடாக சமுகத்தை உலுக்கிய வானதியின் இன்னொரு கவிதை நாளைய சந்ததிக்கு நடந்ததைக் கூறு எனும் கவிதையாகும். பனையோடு இங்கு உறவாடும் வானதி பனை பற்றி இதுவரை வந்த பாடல் கருப்பொருளில் இருந்து மாறுபட்டு பனையைக் களம் நின்ற இன்னொரு போராளியாகப் பாவித்துக் கதையாடுகின்றார்.

**அத்தனை 'செல்' துண்டுகள் உன்**
**வைரமேனியை ஊடுருவியதை**
**கூறுவாயா?**

அம்மாவிற்கும் தங்களுக்குமான பாசப்பிணைப்பை கண்ணீர் ததும்ப எழுதியுள்ளனர். இதுபோல் அம்மாவிற்கும் ஊர்ப்பாட்டியொருவருக்குமான தங்கள் நெருக்கத்தைச் சொல்லியுள்ளனர். தன் தாயின் அடக்கப்பட்ட கோபங்களே தன்னைப் போராட வைத்ததாக மலைமகள் கூறுகின்றார்.

**'எந்த வேளையிலும் எனை**
**இழக்காதிருக்க ஆசிர்வதி**
**அம்மா' (மலைமகள்)**

இடர் நடுவிலும் உயிர்ப்புடன் இருக்கும் காதலை மிக அழகியலுடன் சொல்லும் கவிதை,

**எப்போதாவது தெருவில்**
**அவசர இயக்கத்தில்**
**கண்டுவிட நேர்கையில்**
**சந்திப்பை வரவேற்பதாய் அவன்**
**கண்கள் ஒருமுறை விரியும்**
**மறுகணம் ஆழ்ந்து மூடிக் கொள்ளும்**
**அவனுக்குத் தெரியும்**
**எனக்கு அது போதுமென்று (நாமகள்)**

பெண்ணடிமைத்தனத்திற்கு சமாதிகட்ட வா எனப் பெண்களுக்கு அறைகூவல் விடுவதான கவிதைகளையும், உலக நாடுகளால் மனித அவலம் கண்டு கொள்ளப்படவில்லையென்கின்ற சோகத்தையும் செம்மணிப் புதைகுழி, ஆனையிறவுச் சமர், பூபதியின் உண்ணாநோன்பு போன்ற பல வரலாற்றுத் தகவல்களையும் இவர்கள் பதிவிட்டுள்ளனர்.

நிச்சயமற்ற பொழுதுகளிலெல்லாம் கவிதை எழுதத்துணிந்த இப்பெண்கள் போராட்ட வாழ்வை எமக்குப் புடம்போட்டுக் காட்டியுள்ளனர். இது எமக்குக் கண்ணீரை மனநெருடல்களைத் தந்த போதும் தமிழ்ச்சமூக அமைப்பை உடைத்தெறிந்து பொதுவெளியில் ஆளுமையுடன் செயற்பட்ட போராட்ட வாழ்வும் சொன்ன போராட்டச் செய்திகளும் வரலாற்று ஆவணமாக நிலைநிற்கும். இப்பெண்களும் மனதில் இருப்பர்.



டாக்டர் ஸ்ரீதரன்



# கலாச்சாரம் தந்த உடன்கட்டைகள்

திருமணம். அக்கினி சாட்சியாக - முப்பது முக்கோடி தேவர்கள் சாட்சியாக - ஊர் உலகம் சாட்சியாக - அம்மி மிதித்து - அருந்ததி காட்டி - உறவினர்கள் வாழ்த்த நண்பர்கள் வாழ்த்த - வேதியர்கள் மந்திரம் ஒலிக்க - மங்கலத் தாலி கட்டப்படும் திருமண வைபவம்- நமது - சமூகத்தால் - நமது இனத்தால் - மிக உயர்வாகப் பேசப்படும் ஒரு விடயம் - மிக உயர்வாக மதிக்கப்படும் ஒரு விடயம்.

அதனால்தான்- இதை இன்று யாரும் குறைவாகப் பேசுவதை இன்றைய கால கட்டத்தில் இங்கு இது அமுல் நடத்தப்படும் முறைகளைப் பற்றிக் கேள்வி எழுப்புவதை - இதனால் இன்று ஏற்படும் நடைமுறை விளைவுகளைப் பற்றிச் சுட்டிக்காட்டுவதை - நமது சமூகத்தில் பெரும்பாலானோர் அங்கீகரிப்பதில்லை- ஆதரிப்பதில்லை.

ஆனால், இங்குள்ள பலருக்கு அல்லது ஒரு சிலருக்கு இன்று திருமணம் என்பது அவர்களின் வாழ்வில் ஏற்படும் சூரிய உதயமா? அல்லது அஸ்தமனமா? என்று விவாதிப்பதற்கு நமது பட்டிமன்றங்களுக்கு முதிர்ச்சி போதாது.

நமது பெண்களில் பலர் அல்லது ஒரு சிலர் அன்று பெற்றோர்களுடன் வாழ்ந்த போது மகிழ்ச்சியாக இருந்தார்களா? அல்லது இன்று கணவனுடன் வாழும் போது மகிழ்ச்சியாக இருக்கிறார்களா? என்று விவாதிப்பதற்கு நமது கலாச்சாரம் இடம் கொடுக்காது.

நமது பெண்களில் பலர் அல்லது ஒரு சிலர் திருமணத்தின் பின் சுதந்திரமாக வாழ அனுமதிக்கப்பட்டார்களா? அல்லது திருமணம் அவர்களின் சுதந்திரத்தைக் கட்டிப் போட்டதா? என்று விவாதிப்பது நம்மவர்களுக்கு தரக்குறைவாகத் தோன்றுகிறது.

அதனால்தான் ரோம் நகரம் தீப்பற்றி எரியும் போது பிடில் வாசித்த நீரோ மன்னனைப் போல காலத்திற்கு ஒவ்வாத - இன்றைய சமூகத்திற்கு எந்த வகையிலும் சம்பந்தமில்லாத - இன்றைய தனி மனிதனுக்குத் தேவையற்ற - எத்தனை எத்தனையோ அற்பமான விடயங்களை செத்த பாம்பைத் துள்ளித் துள்ளி அடிப்பவனைப் போல படித்தவர்கள் என்று நமது சமூகம் கருதுபவர்கள் இன்றைய பட்டிமன்றங்களில் விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அறிவு வளர்கிறது - புத்தி சீராகிறது என்று நினைத்து புத்தியை பேதலிக்க வைக்கும் இந்தப் பட்டிமன்றங்களை நம்மவர்களில் பெரும்பாலானோரும் ரசித்து அனுபவிக்கிறார்கள். ரசிகர்கள் ஏகமனதாக ஆதரிக்கிறார்கள் என்பதை காரணம் காட்டி வானொலி தொலைக்காட்சிகளிலும் இத்தகைய செல்லரித்த விவாதங்கள் மீண்டும் மீண்டும் தொடர்கின்றன.

ஒரு விடயத்தின்- ஒரு கொள்கையின்- ஒரு தத்துவத்தின்- சகல பரிமாணங்களையும் - சகல தோற்றங்களையும் பல பல கோணங்களில் - பல பல நோக்கங்களுடன் ஆராய்ந்து- மக்களுக்கு அறிவூட்டுவதே - மக்களைச் சிந்திக்க வைப்பதே பட்டிமன்றங்களின் குறிக்கோள் என்றால் இன்று நமது பட்டிமன்றங்களில் விவாதிக்கப்பட வேண்டிய மிக முக்கியமான ஒரு விடயம் தமது திருமணங்கள் - அவை இங்கு அமுல் நடத்தப்படும் முறைகள் - அதனால் தனிமனிதர்களுக்கு ஏற்படும் அவலங்கள்.

அதே சமயம் - இது நடைமுறைக்கு ஒவ்வாத ஒரு விடயமென்றால் இது நாகரீகமில்லையென்றால் - பட்டிமன்ற விவாதங்கள் வேண்டாம் - பகிரங்க கருத்துப் பரிமாறல் வேண்டாம். ஆனால், அந்தரங்க கருத்துப் பரிமாறல் கூட நம்மிடையே இல்லையே!

நமது சமூகத்தில் இன்று நடைபெறும் பல திருமணங்களை தொடர்பாக நாம் தரிசிக்கத் தயங்கும் - கச்சிதமாக மூடி மறைக்கும் - ஒப்புக் கொள்வதற்கு வெட்கப்படும் - விவாதிப்பதற்குப் பயப்படும் ஒரு சில நடைமுறை விடயங்களை ஆராய்கிறது இந்த அலசல்.

ஆலாபனை எதுவுமின்றி பட்டென்று சொல்வதானால் நமது கலாச்சாரத்தின் சிகரம் என்று நாம் எல்லோரும் தயங்காமல் பெருமை கொண்டாடும் திருமணம் என்பது இங்கு பலரின் வாழ்க்கையில் ஒரு மாபெரும் ஏலம். பல பல வியாபார ஒப்பந்தங்கள் ஒன்றுள் ஒன்று பின்னிப் பிணைந்த சிக்கலான ஒரு வகை ஏலம். இந்த ஏலத்தை கச்சிதமாக மூடி மறைக்க நாகரீகமாக நாம் இங்கு பாவிக்கும் ஒரு சொல்தான் கலாச்சாரம்.

வீட்டிற்கு விளக்கேற்ற வருபவள் - குலம் வாழ வைப்பவள் - புகுந்த வீட்டின் பெயர் விளங்க வைப்பவள் என்றெல்லாம் வாய் நிறைய தமிழ்க் கலாச்சாரம் பேசும் பெற்றோர்களாகிய நாம் "திருமண வயதை எட்டி விட்ட நமது மகனுக்கு ஒரு கண்ணகியைத் தேடி வாருங்கள் ஒரு சீதையைத் தேடி வாருங்கள் ஒரு குல விளக்கைத் தேடி வாருங்கள்" என்று உறவினர்களிடம் கல்யாணத் தரகர்களிடம் விண்ணப்பிப்பதில்லை.

மாறாக "எனது மகனின் கல்வித் தகைமைகள் இவை - அவன் வாங்கிய பட்டங்கள் இவை - அவன் பார்க்கும் உத்தியோகம் இது. அவன் அமரும் நாற்காலி இது- இன்றைய சந்தையில் இவற்றின் பெறுமதி இது - இந்த விலை கொடுக்கக் கூடிய பெண்களைப் பெற்றவர்களைத் தேடிப் பிடியுங்கள் - குணம் அப்படி இப்படி இருந்தாலும் பரவாயில்லை- நாளடைவில் சரியாகிவிடும்" இப்படித்தான் ஆரம்பமாகிறது ஏலம். இந்த ஏலத்தின் எதிர்பார்ப்பு பணம். இந்த ஏலத்தின் அத்திவாரம் பணம்.

இப்படி ஏலத்தை ஆரம்பிப்பவர்களுக்குச் சற்றும் சளைத்தவர்களல்ல இங்கு ஏலம் கேட்பவர்களும் திருமண வயதை எட்டி விட்ட ஒரு பெண்ணுக்கு ஒரு வாழ்க்கைத் துணைவனைத் தேடும் பெற்றோர்களில் பெரும்பாலானோர் ஒரு நல்ல மனிதனை - ஒரு சிறந்த குணவானை ஒரு உன்னதமான கனவானைத் தேடுவதில்லை.

அது என்னவோ தெரியவில்லை இங்கு பெண்ணைப் பெற்றவர்களின் கண்களுக்கு டாக்டர்கள் மட்டும்தான் நல்ல மனிதர்கள் பொறியியலாளர்கள் மட்டும்தான் நல்ல குணவான்கள் கணக்காளர்கள் மட்டும்தான் சிறந்த கனவான்கள். இவர்களில் யாராவது ஒருவரை கணவனாக அடைபவள் மட்டுமே வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருக்க முடியுமென்பது அவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.

கல்யாணத் தரகரின் - உறவினர்களின் - நண்பர்களின் சாத்திரிமார்களின் சாமர்த்தியத்தைப் பொறுத்து - சொல்லும் பொய்களின் பரிமாணங்களைப் பொறுத்துபோடும் வேடங்களின் அளவைப் பொறுத்து - இங்கு ஏலங்கள் வெற்றியாகின்றன அல்லது தோல்வியாகின்றன.

வெற்றியில் முடிந்த ஏலங்களைத் தொடர்கின்றன வியாபார ஒப்பந்தங்கள் இரு குடும்பத்தினரிடையே.

மங்கலக்கயிறு - மாங்கல்ய பாக்கியம் - மூன்று முடிச்சு - இப்படி ஏதேதோ விடயங்களுடனெல்லாம் தொடர்புள்ள அந்தக் கலாச்சாரச் சின்னம் செய்யப்பட வேண்டிய தங்கத்தின் பெறுமதிக்கு ஒரு ஒப்பந்தம் - ஆடை அலங்காரங்களுக்கு ஒரு ஒப்பந்தம் - கல்யாணம் நடைபெற வேண்டிய இடத்திற்கு ஒரு ஒப்பந்தம் - அதற்கு வரவேண்டிய விருந்தினர்களுக்கு ஒரு ஒப்பந்தம் - பரிமாற வேண்டிய உணவுக்கு ஒரு ஒப்பந்தம் - அதை சமைப்பது யார் என்று ஒரு ஒப்பந்தம்.

நெஞ்சை நிமிர்த்தி ஆண்மையுடன் ஆராய்வதானால் இந்த எல்லா ஒப்பந்தங்களுமே கலாச்சாரம் என்ற பெயரில் - முன்னோர்கள் வகுத்த வழி என்ற பெயரில் - தமிழர் பண்பாடு என்ற பெயரில் நடாத்தப்படும் சுயநலம் நிறைந்த வெறும் சுரண்டல்கள் சுயலாபம் நிறைந்த சிக்கலான வியாபார ஒப்பந்தங்கள்.

இந்த ஏலத்தின் - இந்த வியாபார ஒப்பந்தங்களின் பலிக்கடாக்கள் இரு உயிரினங்கள்.

எங்கோ பிறந்து எப்படியோ வளர்ந்த ஒரு ஆணையும் ஏதோ நினைத்து எதையெதையோ எதிர்பார்த்து வளர்ந்த ஒரு பெண்ணையும் சமூகம் என்று சொல்லும் நாலு பேர்கள் பட்டம் பதவி பணம் அந்தஸ்து குடும்ப கௌரவம் என்று அதைச் சொல்லி இதைச் சொல்லி கல்யாணம் என்ற பெயரில் ஊரைக் கூட்டி அம்மியை மிதிக்க வைத்து அருந்ததியைக் காட்டி திருமணம் செய்து வைத்து நடாத்துங்கள் இல்லறத்தை என்று அனுப்புகிறார்கள்.

முதல் கோணல் முற்றும் கோணல் என்பார்கள். இத்தனை கோணல்களையும் தாண்டி வந்து வாழ்க்கை நடாத்தும் இருவரின் வாழ்க்கை எப்படி இருக்கும்? எப்படி முடியும்? சித்தர் கூறுகிறார்:

**"நாப்பிளக்கப் பொய்யுரைத்து- நவநிதியம் தேடி**
**நலன் ஒன்றும் அறியாத நாரியரை கூடி**
**பூப்பிளக்க வருகின்ற புற்றீசல் போல**
**பொல பொலென கலகலென**
**புதல்வர் களைப் பெறுவீர்**
**காப்பதற்கும் வகையறியீர்- கைவிடவும் மாட்டீர்**
**கவர் பிளந்த மரத்தினுள் கால் நுழைத்துக் கொண்டே**
**ஆப்பிழுத்த குரங்கு போல**
**அகப்பட்டீர் அகப்பட்டீர்**
**கிடந்துழல அகப்பட்டீரே".**

ஒவ்வொரு இளைஞனும் படிக்க வேண்டிய - ஒவ்வொரு யுவதியும் படிக்க வேண்டிய உண்மையை கூறும் சத்தியத்தைப் பறை சாற்றும் இது போன்ற எத்தனை எத்தனையோ பாடல்களை கச்சிதமாக ஒதுக்கி வைத்து விட்டோம் செத்த வீடுகளில் பாடுவதற்காக மட்டும் சுடலை ஞானம் பேசுவதற்காக மட்டும்.

சமூக விதிகள் - மதக் கோட்பாடுகள் - கலாச்சாரச் சடங்குகள் என்பவற்றின் பெயரால் முன்னொரு காலத்தில் நம்மிடையே நிலவி வந்த காட்டுமிராண்டித்தனமான காரியங்கள் - பைத்தியக்காரத்தனமான செய்கைகள் - முட்டாள்தனமான போக்குகள் ஏராளம் ஏராளம். அவற்றுள் ஒன்று உடன்கட்டை ஏறுதல்.

ஆனால், திருமணம் என்ற பெயரில் ஏதேதோ கூறி ஒரு ஆணையும் ஒரு பெண்ணையும் உனக்கு இவள் தான் என்றும் இவளுக்கு நீதான் என்றும் ஊரைக் கூட்டிச் சேர்த்து வைத்தபின் பிடித்ததோ பிடிக்கவில்லையோ ஊருக்குப் பயந்து - உலகத்திற்குப் பயந்து தங்கள் சொந்த ஆசை அபிலாசைகளை மறந்துவிட்டு வள்ளுவர் கூறிய இல்லறம் நடாத்துகிறோம் என்று தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டு தொடரவும் முடியாமல் முறிக்கவும் முடியாமல் செக்குமாடுகள் போல இங்கு பலர் அல்லது ஒரு சிலர் அனுபவிக்கும் ஆயுட்கால இம்சைகளை விடவா சில நிமிடங்களே நிலைக்கும் உடன்கட்டை காட்டுமிராண்டித்தனம்.

திருமண வைபவங்களுக்கு மட்டும் ஒரு போதுமே செல்லாத - திருமணத்தால் பாதிக்கப்பட்ட ஒருவர் ஒரு நாள் தனது நண்பரிடம் மனம் திறந்து கூறினார். "நான் எனது தலையில் மண்ணை வாரிக் கொட்டியது போதாதென்று இன்னொருவனும் வாரிக்கொட்டுவதை பார்த்து வாழ்த்துவதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

முடிவாக ஒரு விடயம் பலர் அங்கீகரிப்பதனால் மட்டும் பலர் ஆதரிப்பதனால் மட்டும் ஒரு விடயம் இங்கு சரியாகி விடுவதுமில்லை. யாருமே அங்கீகரிக்கவில்லை என்பதனால் மட்டும் யாருமே ஆதரிப்பதில்லை என்பதனால் மட்டும் இங்கு ஒரு விடயம் பிழையாகி விடுவதுமில்லை.

**போர்வைகளற்ற நிர்வாணம் இந்த அவதானம்.**

**அகத்தே மாசில்லாதவனுக்கு நிர்வாணம் ஒரு புனிதம்.**

**அது ஒரு சத்தியம்.**








# லண்டனில் நடந்த தமிழ் ஊடகவியலாளர் ஒன்றிய மாநாடு

'இனப்படுகொலையை நினைவு கொள்வதிலும் அதனை எதிர்த்துச் செயல்படுதலிலும் ஊடகவியலாளர்களின் பங்கு' என்ற தலைப்பில் கடந்த *04.11.2017* சனிக்கிழமை, லண்டன் *Soas* பல்கலைக்கழக *Khalili* விரிவுரை மண்டபத்தில், லண்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் மாநாடு வெகு சிறப்பாக நடந்தது.

ஒன்றியத் தலைவி, முன்னாள் பிபிசி தமிழோசை தயாரிப்பாளர் ஆனந்தி சூரியப் பிரகாசம் வழிகாட்டலில், அமைப்பின் பணிப்பாளர் கோபி ரட்ணம் நெறியாள்கையில், தமிழ் ஊடகவியலாளர்கள், மற்றும் தமிழ்த் தேசிய



மக்கள் முன்னணியில் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் நிகழ்வுகளில் பங்கு கொண்டனர். காலை *9.30* மணி முதல் மாலை *5.30* மணிவரை மாநாடு நடைபெற்றது.



மாவீரர்கள், ஊடகவியலாளர்கள், பொது மக்களுக்காக அகவணக்கத்தைத் தொடர்ந்து ஆரம்பமாகிய மாநாட்டில் வரவேற்புரையினை ஒன்றியத்தின் இணைச்செயலாளர் பேலோன் யோகரட்னம் நிகழ்த்தினார். தொடர்ந்து காலை நேர அமர்வாக கலாநிதி சேந்தன் செல்வராஜா தலைமையில், ஆய்வரங்கம் இடம்பெற்றது. 'இன அழிப்பை எதிர்கொள்ளலும், நினைவுகூறலும்' என்பது குறித்த கருத்துக்களை கலாநிதி ஏ.ஆர். சிறீஸ்கந்தராஜா, ஜெயந்தி லிங்கம், கலாநிதி மீனா கந்தசாமி, நிர்மானுசன் பாலசுந்தரம், ஜெயச்சந்திரன் கோபிநாத் ஆகியோர் வழங்கினார்.

மதிய போசனத்தை அடுத்து பிற்பகல் அமர்வு சிவகுரு பிறேம் தலைமையில் நடைபெற்றது. பிறேமலதா சேந்தனின் உணர்வு பூர்வமான கவிதையைச் சமர்ப்பித்தார். தாயகத்தில் வாழும் ஊடகவியலாளர் ஜெரா என்ற ஜெயராஜா நிலமிழந்த கதைகள் நூலை நிர்மானுசன் வெளியிட்டு உரையாற்றினார்.

மூத்த ஊடகவியலாளர்கள் இரத்தினம் கந்தசாமி, ஈ.கே. ராஜகோபால் பிரபல அரசியல் ஆய்வாளர் இதயச்சந்திரன் (த. நவநீதநாதன்) ஆகியோருக்கு ஒன்றியம் விருது வழங்கி மதிப்பளிக்கும் நிகழ்வு நடைபெற்றது. விருது வழங்கலை சுகிகோபிரட்ணம் தொகுத்து வழங்க, பிபிசி 'தமிழோசை' ஆனந்தி விருதுகளை வழங்கி மதிப்பளித்தார்.

'தமிழ்நெற்' இணையத்தள ஆசிரியர் ஜெயச்சந்திரன், வருடாந்த பேருரை நிகழ்த்தினார். மாலை நேர இடைவேளையைத் தொடர்ந்து தமிழ் தேசிய மக்கள் முன்னிணியின் தலைவர் கஜேந்திரகுமார் புதிய அரசியலமைப்பு தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தக்கூடிய பாதகமான கருத்துக்களை விளக்கினார். டாக்டர் சிவகாமி இராஜமனோகரன் இந்நிகழ்வை நெறிப்படுத்தினார். சபையோரின் கேள்விகளுக்கும் கஜேந்திரகுமார் பதில் அளித்தார்.

ஒன்றியத்தின் பணிப்பாளர் கோபிரட்ணம் நன்றி கூறி, மாநாட்டினை முடித்து வைத்தார். •



# என் தேசத்தின் பிறந்தநாள்



தமிழ் உதயா
லண்டன்

தேசமெங்கும்
குதூகலமாகத் திரிந்த
வெண் முகில்களைப்போல
குஞ்சுப் புறாக்கள்.
யார் வெட்டியது
அவற்றின் சிறகுகளை
போர் முழக்கம் வெடித்து
பிஞ்சுகளை அறுத்து
பூமி ஏன் சிவப்பேறிக் காய்கிறது .
பூக்கள் கருகும் மணமும்
உயிர்கள் உருகும் மணமும்
நாசி வழி வருத்தி நகர்கிறது
உனக்கு தெரியாதிருக்குமா
குடில்களின்
கூரையோட்டைகளில் கூட
நிலா முகிழ்க்கவில்லை
ஆகாயம் வேடிக்கையாய்
பார்த்துச் சிரிக்கிறது
தேகம் சிலிர்க்க
யார் சாகக் கூடும்
என்ற அச்சத்தில்
ஒவ்வாத காலைகள் புலர்கிறது.
சண்டை முடிந்தது என
போதி மரங்கள்
புதிது புதிதாய் முளைத்து
புற்றெழும்பி நிற்கின்றன
காம்புகள் கழன்று
பூக்கள் அழுகி வீழ்கின்றன
நெருப்பேறிய நெஞ்சுக்கூடுகள்
வெடித்துச் சிதறித்தான்
விழி பிதுங்கி நகர்கின்றன
மானத்திற்கு அணியும் மகுடம்
ஏன் தரவில்லை எமக்கு
விடுதலைப் பெருங்காதலை
விதைத்து வளர்த்த பெருவிருட்சம்
நீ எங்கிருக்கிறாய் ....?
வேர்களில்
விடம் பாய்ந்ததா
வித்துடல்கள் கண் விழித்து
உன்னைத் தேடி அலைகின்றன
சுண்ணாம்புச் சக்கரையை
குழைத்து மூடிய பொன்னுடல்கள்
முளைத்து நிழலை கேட்கின்றன
வானம் அதிர முகில் கிழிய
அண்ணன் வருவான் என்று
எத்தனை நாள் காத்திருந்து. .....
தாய் நிலத்தின் நெற்றிக்கண்
எப்போது தீப்பிழம்பாய்
திறப்பான் எனப் பார்த்திருந்து.....
வல்வெட்டித்துறை வளர் நெருப்பு
ஒளிந்து கிடக்கிறதா
ஒளிர்ந்து கழுவேறிக் கொண்டு. ...
ஈர விழி பனிக்கும்
ஊரறியா உறவுகளின்
நினைவுகளை எண்ணியெண்ணி.....
நஞ்சு மாலை அணிந்து
செங்குருதி காய்ந்து
வெடித்த குஞ்சுகளை
மொட்டவிழும் பூக்களை
கல்லறையில் கிடத்தி
காற்றில் கலந்த மூச்சுக்களை
உயிர்த்துக் கிடக்கிறது
வென்ற களிப்பு இன்னும்
தோற்காத போது
எங்கிருக்கிறாய் .....?
எம் பேரன்புத் தலைவனே
ஒரே ஒரு முறை உயிரை நீட்டு
எங்கள் மண் தின்று
மகிழ்ந்திருக்கும் குழந்தைகளுக்காவது.....!



ப.வை. ஜெயபாலன்

# வளம் தேக்கும் வன்னி

'ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ்' என்பது ஒரு முதுமொழி. உழைப்பால் சாதிக்கலாம் என்பதை இன்னும் விவசாயத்தில் மெய்ப்பிப்பது வடக்கு கிழக்கு தமிழரில் சலிக்காத உழைப்பு. "பாவை பரிசு பெற்றாலும் அப்பாவையை பச்சைப்படுத்தி, பயன் விளைத்து வாழத் தொடர்ந்து முயன்றதனால் இன்று வையத்துயர்ந்தது யாழ்ப்பாணம்' என்கிறது; மகாகவியின் கவிவரி.

நெற்செய்கை எமது தாயகத்தின் பிரதான வருவாய் துறையில் ஒன்று. தெற்கில் மகாவலி உட்பட ஆறுகள் மூலம் பெறும் நீர்வளம் வருடாந்தம் மூன்று போகத்துக்கும் மேலான நெற்செய்கையை மேற்கொள்ள வாய்ப்பு அளிக்கின்றன. ஆனால் வடக்கில் மாரி மழையை நம்பி நெல் விதைக்கும் காலபோக செய்கை ஒன்றே பிரதானம். குளங்களில் தேக்கி வைக்கும் மாரி நீரை கொண்டு சிறுபோக செய்கையில் ஈடுபட நீர்ப்பாசன திணைக்களங்கள் வாய்ப்பளிக்கின்றன. புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் விதைத்தல், பயிரை வளர வைத்தல் என்பதற்கான முக்கிய ஒரு காலக்கட்டம். காட்டை அழித்து நெல் களனி ஆக்கப்பட்ட குடியேற்ற பூமி வடக்கின் வன்னிப்பகுதி. ஒவ்வொரு விவசாயியும் தன் ஒயாத உழைப்பை உக்கிரமாக கொட்டும் அன்றய வளம் தேக்கும் வன்னியின் விதைப்பு கால நினைவுகள் நெஞ்சில் ஊரும் போது ஒரு ஆனந்தம்.

"ஆழ உழவு தேடி உழு" என்பது விவசாய முதுமொழி. குளத்து நீர் மூலம் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடும் வயல் நிலங்கள் கூட ஒட்டு என்ற அறுவடை செய்தபின் வயலில் காய்ந்து கிடக்கும் நெற்தண்டின் அடிப்பகுதியை எரித்து தரையை சீர்படுத்தி மழையை கண்டதும் உழவு மேற்கொள்ள தயாராக இருக்கும். உழவுக்கு போதுமான ஈரத்தை நிலம் மழை மூலம் பெற்றதும் அந்த ஈரம் காயும் முன்பாக உழவு வேலை மும்முரமாக நடக்கும். பகலும் இரவும், உழவு இயந்திரங்கள் வயலின் உழவில் ஈடுபடும் ஓசை ஓயாமல் ஒலிக்கும். சிறு நிலப்பரப்புகளை ஏர்பிடித்து மாடு மூலம் உழும் நிலமைகளும் உண்டு. புழுதிபடர்ந்த பூமி, உழவால் புரட்டப்பட்டு ஈரம் சுவற நிறத்தை திறந்து காட்டி உழவில் உருவான நீள்களோடு கிடப்பதே ஒரு அழகு அதில் உழுதகளையோடு மண் மாதா வெளிகக்கும் ஒரு மண்வாசமும், இனிமை, உழவு நடக்க, நடக்க கிளறப்படும் மண்ணில் வெளிப்படும் மண்புழு உட்பட, பூச்சிகளை உண்ண உழவு யந்திரத்தின் பின்னாக படை எடுக்கும் வெள்ளை பறவை கூட்டம் சிறகடித்து சிறகடித்து போட்டி போட்டுக் கொண்டு புழுக்களை பொறுக்குவதே ஒரு தனி அழகு, வீறான விஷம் இல்லாத மண் புடையன் பாம்புகள், வரம்பில் புற்றமைத்த எறும்புகளும் கூட உழுத நிலத்தில் பரபரப்போடு ஓடித்திரியும். உழவு, மறு உழவு என குறுக்கும் நெடுக்குமாக இரு உழவைக் கண்ட நிலத்தில் புளுதி விதைப்பு என்பதும் ஒரு விதைப்பு முறை. மழை ஆரம்பமாகும் முன்பாக விதை நெல்லை வயலில் வீசி விதைத்து மீண்டும் விதைத்த நெல்லை மூட உழவு, மறு உழவு என்று இரு உழவை உழுது மழை வந்ததும் நெல் நீரை உண்டு முளைவிட தயாராக்கலே இந்த புளுதி விதைப்பு.

விதைப்புக்கு தெளியப்படும் நெல் இனங்கள் இடத்துக்கு இடம் தரையைப் பொறுத்தும் மழையை கணக்கிட்டும் வேறுபடும். மொட்டைக் கறுப்பன், பச்சை பெருமாள் என்ற நெல்லினங்கள், 5 முதல் 6 மாத வயது உடையவை. கனதியும் சுவையும் நிறைந்தவை. மொட்டைக்கறுப்பன் நெல்லில் விளையும் அரிசி தரும் சோற்றின் ருசி உச்சமானது. மரவெள்ளி கிழங்குகறி, கீரை; தாழித்து தயாராக்கிய கட்டிக்குழம்பு, தயிர் என விட்டுப் பிசைந்து உண்டால் வெளிப்படும் ஏவறையே திருப்திக்கு சான்று. பச்சை பெருமாள் மாவாக்கி தயாராக்கும் பிட்டு இடிப்பத்துக்கு சுவை தரும் நெல் இனம். இதில் அவிக்கப்பட்ட பிட்டை உள்ளங்கையில் வைத்து கிறுக்க அழுத்த எண்ணை பிழியும். சத்தும் சுவையும் நிறைந்த இந்த நெல்லினங்கள் அறுவடையாகும்போது குறைந்த விளைச்சலையே தரும். வியாபாரத்தையும் லாபத்தையும் குறிக்கோளாக கொண்டதாக விவசாயம் மாறிவிட்டதால் இவ்வகை நெல் இனங்கள் விதைப்பு அருகிவிட்டது. ஆனாலும் போலி அரிசி இனங்களும் மொட்டை கறுப்பின் பேரில் கடைகளில் விற்பனைக்கு வருவதும் வழமையாகிவிட்டது. 500/- என்ற 4 மாத நெல்லினம் அதிக விளைச்சலை தருவதாக நீண்டகாலம் கோலோச்சியது. 34/6 மற்றும் 34/2 என்ற சிவப்பு வெள்ளை நெல் இனங்கள் 3½ மாத வயதுடையவையாக சிறுபோக செய்கைக்கும் பயன்படுவன.

புளுதி விதைப்பு, கணக்கான மழையை கண்டால்த்தான் வெற்றி அளிக்கும். புளுதி விதைப்பின் பின் மழை தொடரானால் வெள்ளம் மூடி விதை நெல் அழுகிவிடும். பருவத்தே பயிர் செய்" என்பதுபோல மாரி தொடர்மழைக்கு நெல் 2 மாத வயதை கொண்டதாக இருந்தால்தான் போதிய அறுவடையை பெறலாம். ஐப்பசி முற்பகுதிக்குள் பயிர் வயலில் பச்சையம் காண வைப்பது முக்கியம் என்பதால் உழைப்பு கடுமையாக இருக்கும். விதைப்பாத்தியில் முளை நெல்லை பயிராக்கி சேற்றில் நாற்று நடுதல் ஒரு சிறந்த முறை. ஆனால் கூலியாளர்களை தேடிப்பிடிப்பதில் ஏக்கர் கணக்காக செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் சிரமப்படுவார்கள். இந்நிலையில் பலகை அடிப்பு முறைதான் பயன்தரும்.

சாக்குகளில் விதை நெல்லை தளர்ச்சியாக கட்டி தண்ணீரில் கணக்காக 'ஊறவிட்டு பின் எடுத்து அடுக்கி இறுக்கமாக சாக்குகளால் மூடி, நீர்வடிந்து, சூடு ஏறி நெல் முளைவிட வைப்பது பலகை அடித்து விதைக்க செய்யும் முன் ஏற்பாடு. வெள்ளை முளைகள் ஒவ்வொரு நெல்லிலும் வெளிவந்து அழகாக பல் இளிக்கும்.

முளை நெல் தயாராகிவிட்டது என்று அர்த்தம். உயரகட்டிய வரம்புகளுடன் தயாராகி இருக்கும் பாத்திகளில் நீரைதேக்கி சேறு கலங்க உழுவது அடுத்த கட்டம். உழவுயந்திரம் புதையாமல் இருக்க இரு சில்லிலும் பெரிய உருளி வளையல்கள் என்ற வீலை பூட்டிக் கொண்டுதான் சேற்று உழவில் ஈடுபடும். உழுது நீரோடு சேறு கலங்கி இருக்க மட்டமான ஒரு பலகையை இழுத்துக் கொண்டு சோடி மாடுகள் தரையை சமப்படுத்தும். மேடான இடங்களை சமப்படுத்த பலகையில் ஏறி நின்று ஒட்டி மாடுகளை உழுபவவன் நெறிப்படுத்துவான். இதன்பின் பாத்தி பாத்தியாக அடி உரம் என்ற 'வீச' மற்றும் விதை நெல் விசிறப்படும். உழவும் விதைப்பும் முடிய நீர் சேறு அடங்கி தெளியும் தெளிந்த நீர் வெளிகடத்தப்பட்டதும் தயாரான விதை நெல் சேற்றில் கால் ஊன்றி சூரியனில் ஒளி ஏந்தி வறாக விரைவாக முளைத்து வெளிவரும். ஆங்கு ஆங்கு வயலில் தேங்கிய நீரை அழல் வெட்டி கவனமாக காத்தல் அடுத்த நாள் காலை வேலை 2ம் 3ம் நாள் காலை சூரிய ஒளியில் எதிர்ப்புறமாக நின்று பார்க்க பரவலாக முளையாகி வெள்ளையும், தளிர்ப்பச்சை விதமாக பரவி நிற்கும் முளைகள் களைத்து உழைத்த விவசாயின் நெஞ்சில் மகிழ்வை நுழைக்கும்.

விதைப்பின் பின் முளையாகும் நெல்லை பறவைகளிடம் இருந்து பாதுகாப்பது சிரமமான வேலை. சேற்று மணக் கவரப்பட்டு இரவில் கூட்டம் கூட்டமாக சிறகை என்ற பறவைகள் வயலில் அலை அலையாக வந்து அமரும். வாத்து போன்ற தன் அகல கொண்டால் விதை நெல்லை உறிஞ்சி விரைவாக உண்டபடி நகரும். முளை நெல் முழுதும் இவற்றுக்கு இரையாகிவிடும். இவற்றை விதிட்ட டீசல் எண்ணெயில் எரியும் போத்தல் விளக்குகளை சேத்து விதைப்பு இரவில் வரம்பில் ஆங்கு ஆங்கு வைப்பதும் சங்கு, சேமக்கலம் மூலமும் உரக்கக் கத்தியும் இவற்றை விரட்ட இரவு இரவாக விவசாயிகண் முழிப்பான். வயல் ஓரமாக சிறகை பறவையின் இறைச்சியை ருசிக்க நரிகளும் வரம்புகளில் திரியும். மழை ஒரு இருநாட்கள் சிறிதளவு என்றாலும் ஓய்ந்து கொடுத்தா விட்டால் நீர் தேங்கி முளை நெல் சேதமாகி விடும். பெருமூச்சோடு மீண்டும் சேற்றுவிதைப்புக்கு அல்லது நாற்று நடுகைக்கு விவசாயி சலிக்காமல் தயாராவான்.

பயிர் வளர்ந்ததும் 2 நாட்களுக்குள் யூரியா பசளை, முளைக்கும் களைகளை அகற்ற களை நாசினி தெளித்தல் மீறி வளரும் களைகளை பிடுங்க கூலி ஆட்களை காலையில் உழவுயந்திரத்தில் கவனமா தாண்டிப்போய் ஏற்றிவந்து களை பிடுங்க வைத்தல், அவர்களுக்கு தேனீர், சம்பளம் என்று கொடுத்து மாலையில் திரும்ப கொண்டு போய் விடுதல் தேனீர், உணவு இடைவேளையில் நீண்ட நேரம் ஓய்வு எடுக்கும் சோம்பேறி கூலி ஆட்களை கங்காணி மூலம் உசுப்பு ஏற்றல் என விவசாயி படும்பாடு நாய்படாப்பாடு. விளையும் வரை உழைப்புத்தான். ●



# கீ-போர்ட் கலைஞர்கள் துஷி-தனுவின் 25 ஆண்டு கால இசைப் பயணம்




இருபத்து ஐந்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்து, ஐரோப்பாவின் முதல் தமிழ் பெண் கீ-போர்ட் (Key Board) கலைஞர்களாக பவனி வந்து, ஈழத்துக்குப் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள் ‘துஷி - தனு’ என்ற சகோதரிகள்.

1992ம் ஆண்டு, டிசம்பர் மாதத்தில், ‘துஷி-தனு செல்லத்துரை’ என்ற பெயருடன் கலையுலகில் காலடி வைத்த இந்தச் சகோதரிகள், துஷி சுதாகரன் - தனு சந்தோஷ் என்ற திருமண பந்தத்துக்குள் சிக்கிக் கொண்டாலும், ‘துஷி-தனு’ என்ற பெயரைப் பிரிக்க முடியாமல், ஆனந்தகரமாக இவர்கள் கலைப் பயணம் 25 ஆண்டுகளாக வெற்றிகரமாக தொடர்கிறது.

மூத்தவர் துஷி:பிரிட்டிஷ் வெளி உறவுத் திணைகளத்தில் (Foreign office) பணியாற்றுகிறார். இளையவர் தனு: பல் வைத்தியர்.

பால் மணம் மாறாத குழந்தைப் பருவத்திலிருந்து கீ-போர்ட் இசைக் கருவியுடன் சங்கமமாகி விட்ட துஷி-தனுவுக்கு அதனை முதலில் கற்றுத் தந்தவர் ஜோ அனா என்ற ஆங்கில ஆசிரியை லண்டனில் பிரபலமான ‘பவன்’ சங்கீத வித்துவான் சிவசக்தி சிவனேசனிடமும், சரஸ்வதி உதயகுமாரிடமும் துஷி கர்நாடக இசை பயின்றார். இளையவர் தனு, சாரங்கன் ஸ்ரீ ரங்கநாதனிடம் சங்கீதமும், வீணையும் பயின்றார்.

சின்னஞ்சிறு வயதில் லூயிஷியம் நகரில் ‘பூபாள நண்பர்கள்’ என்ற தலைப்பில் நடந்த நிகழ்ச்சிகளில் இவர்கள் 1992இல் கலந்து கொண்டனர். டாக்டர் ஜெயநாதன் குடும்பத்தினர் உருவாக்கிய ‘வசந்த மலர்கள்’ (Spring Blossom) இசைக் குழுவில் MIOT அமைப்பின் மேடை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டது துஷி-தனுவின் ஆரம்பம்.

சன்றைஸ் தமிழ் வானொலி மூலம் தம்மை வானலைகளில் அரங்கேற்றியவர், ‘அரங்கேற்றம்’ வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் துளசி என்றும், தமது தொலைக்காட்சி அறிமுகம் 1998இல் ‘TRT தமிழ் ஒளி’ லண்டனில் ஒளிப்பதிவு செய்த ‘KTC சப்தஸ்வரங்கள்’ போட்டி நிகழ்ச்சியில் தாம் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து ஏற்பட்டது என்றும் துஷியும், தனுவும் பழைய நினைவுகளை பெருமிதத்துடன் மீட்டார்கள்.

இன்றுவரை சுமார் நூறு மேடை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருப்பார்கள். மேடை நிகழ்ச்சிகளில் பக்கவாத்தியக் கலைஞர்களாக கலந்து கொண்டவர்களை இசை ஒன்றிணைப்பாளர்களாக, இசைக் குழுத் தலைவியராக முதன் முதலில் மேடையேற்றி அறிமுகப்படுத்தியவர்கள் கானக்குயில் அமைப்பாளர் யோகா தில்லைநாதனும், அவரது கணவரும்தான். 1999இல் ‘துஷி-தனு நண்பர்கள்’ TT + Friends இசைக்குழு, சாரங்கன் சிறீரங்கநாதன் நெறியாள்கையில் என்ற பெயருடன் ஜொலிக்கத் தொடங்கியது. 2005ம் ஆண்டுவரை கானக்குயில் இசை நிகழ்ச்சியில் பின்னணி வாத்தியக் கலைஞர்களாக பிரசித்தி பெற்றார்கள்.

கம்பர் மலை மகாவித்தியாலயத்தின் ‘பூபாளராகங்கள்’ நிகழ்வில் ஒன்பதாண்டு காலம் தொடர்ச்சியாக ‘துஷி - தனு நண்பர்கள்’ இசை நிகழ்ச்சி ஆண்டு தவறாது நடந்ததைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. உலக தமிழ் அறிவிப்பாளர் பி.எ.அப்துல்ஹமீட் ஈழக்கலைஞர்களான பொப் இசை பிதா நித்தி கனகரத்தினம், பாடகர் ரகுநாதன் போன்றோரின் பாராட்டுக்களை அத்தருணத்தில் பெற்றனர். லண்டனில் பூபாளராகங்கள் புகழ் தேடிக் கொடுத்த மற்றொரு மறக்க முடியாத நிகழ்ச்சி.

மறைந்த மாமனிதர் டாக்டர் மூர்த்தி இவர்களை சுவிஸ் நாட்டில் நடந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 10வது ஆண்டு நிறைவில், ‘கானக்குயில் 2007’ நிகழ்வில், மறைந்த தமிழக இசை அமைப்பாளர் சந்திரபோசுடன் சேர்ந்து மத்தியஸ்தம் வகிக்க வழங்கப்பட்ட சந்தர்ப்பம் இவர்களுக்கு மறக்க முடியாத ஒரு அனுபவம்.

மறக்க முடியாத அனுபவம் லண்டன் மாவீரர் தேசிய எழுச்சி நாளில் 10 ஆயிரம் தமிழ் மக்கள் முன்னிலையில், சுமார் பதினெட்டு தமிழ் எழுச்சிப் பாடல்களுக்கு இசை வழங்கியது. பாலேந்திரா - ஆனந்தராணியின் தமிழ் அவைக் காற்றுக் கலைக்கழகத்தின் ‘ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு’ நாடகத்தில் இசை வழங்கியது; கலாநிதி இரத்தினம் நித்தியானந்தனின் மூலம் வீணை வித்துவான் சிவதாரிணி சகாதேவன் அறிமுகபடுத்தினார். அவரது ‘மேற்கு கிழக்கு கலந்த இசை நிகழ்ச்சியில் ‘வாதாபி’, ‘நின்னுகோலீ’ பாடல்கள் பாரம்பரிய முறையில் பாடப்பட்டபோது, இடை இசையைத் துஷி-தனு மேற்கத்திய கீ-போர்ட் இசையாக வழங்கியது.



மகராஜனுடன் துஷி தனு நண்பர்கள்

MIOT, TSSA மற்றும் வெண்புறா போன்ற நிகழ்வுகளில் பங்கு பற்றியிருக்கிறார்கள்.

சர்வதேச இந்து இளைஞர் பேரவை இவர்களுக்கு ‘இசைச் சுடர்ஒளி’ பட்டமளித்துக் கௌரவித்தது.

Gajan Siva’s Free Birds குழுவுடன் இணைந்து சூப்பர் சிங்கர்கள் நிக்கல் மத்யூ, ஆனந்த் அரவிந்த்தக்ஷன் போன்றவர்களுக்கு பின்னனி இசை வழங்கி, அவர்களின் பாராட்டுக்களைப் பெற்றார்கள். செப்ரெம்பர் 2017 இல் TT+FRIENDS, சூப்பர் சிங்கரான நம்மவர் நிருஜனுடன் (ஜெர்மனி) லண்டனில் இணைந்து சமீபத்தில் வழங்கிய வட இந்துக் கல்லூரி ஆண்டு நிகழ்வு பலரையும் கவர்ந்தது.

துஷி-தனு இசைப் பயணத்தில், இவர்களது பெற்றோர் செல்லத்துரை- தயாளினி, கணவர்கள் சுதாகரன், சந்தோஷ் ஆகியோர் தங்கள் நிறைவான பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

தனித்துவமான முதல் பெண் கலைஞர்களாக ஒரு இசைக் குழுவை வழிநடத்தும் கீ-போர்ட் வித்தகர்களான துஷி-தனுவை நெஞ்சார வாழ்த்துவோம்! ●



சுப்பர் சிங்கர் நிருஜனுடன் துஷி-தனு



சரோஜினி சந்திரகோபால்






# பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்தின் எதிர்காலம் இளையோர் கைகளில்!

# 40வது ஆண்டு விழாவில் பாசக்கரம்

புகழ் தேடாப் புனிதர் சிலர் வேண்டும். புறம் பேசாப் புதியவர் சிலர் வேண்டும். இளையோர் உன்னில் காதல் கொள்ளவேண்டும். இதன் இனிமை இனி அவர் உணர வேண்டும"

இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கத்தின் 40வது அகவை நிறைவு விழா மலரில் சங்கத் தலைவர் திரு. சதாசிவம் ஆனந்ததியாகர் எழுதிப் பதித்த வரிகள் இவை. அவர்தம் தலைமையுரையில்,சங்கத்தில் இளையோர்கள் இணையவேண்டும் என விடுத்த நேச அறைகூவல், பல இளையோரை அக்கணமே பாசக்கரம் நீட்ட வைத்தமையை, அவர்கள் உடனடியாகப் பூர்த்தி செய்து சமர்ப்பித்த அங்கத்துவப் பத்திரங்கள் சான்று பகர்ந்தன. இந்த இளையோர்குழுவிற்கு, சூட்டப்பட்டுள்ள பெயர், "சைவ முன்னேற்றச் சங்கம் சந்ததி".(எஸ். எம். எஸ். ஜெனரேஷன்). மனித குலம் வாழ....மொழி, மதம், கலை, பண்பாடு, கலாச்சார விழுமியங்கள் கட்டிப் பாதுகாக்கப்பட.... வளர்க்கப்பட... நாம் வளரவேண்டும். நம் பரம்பரை வளரவேண்டும். வாழையடி வாழையாக ஒரு சமூகம் வளர நம் இளையோர் நம் சுவடுகளைப் பின்பற்றி நடைபயில வேண்டும். வரவேற்கப்பட வேண்டிய ஒரு வரலாற்றுக் கூற்றினை முன்வைத்த தலைவர் பேச்சு இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தின் 40வது ஆண்டு விழாவிற்கு மணிமகுடம் சூட்டினாற்போல், சபையோர் கவனத்தைப் பெரிதுமே கவர்ந்ததை கரகோசங்கள் நிருபித்தன.

சங்கத்தின் நாற்பதாண்டு நிறைவினை நலமே கொண்டாட, பல மாதங்களாகக் காலநேரம் பாராது கடினமாக உழைத்த சங்க அங்கத்தவர்களது அவா, இனிதே நிறைவேறிய நன்னாள், 28.10.2017. அப்பொன்னாளில் வோல்த்தம்ஸ்ரோ கற்பகபதி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய வழிபாட்டுடன் ஆரம்பமானது அந்த அலங்காரத் திருவிழா. இலண்டனிலுள்ள பல்வேறு ஆலயங்களைச் சேர்ந்த நாற்பது சிவாச்சாரியார்கள் சீர்வரிசை சுமந்துவர, பன்னிரு திருமுறைகள், சமய குரவர் நால்வர் பல்லக்கில் அமர்ந்திருக்க, நந்திக் கொடியினைக் கையிலேந்தி நல்லோர்கள் நடந்துவர, பட்டுவேட்டி சால்வை, பட்டுச்சேலை பூ பொட்டு எனப் பக்தர்கள் குழாம் சூழ வோல்த்தம்ஸ்ரோ நகரசபை மண்டபத்தை நோக்கி நகர்ந்த அப்பவனி, வீதியில் சென்ற அத்தனைபேர் கவனத்தையும் கவர்ந்த கண்கொள்ளாக் காட்சியை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை. அன்றைய விழாவின் பிரதம அதிதி டாக்டர் ஆறு திருமுருகன் அவர்களும் அந்த நடை பவனியில் கலந்து கொண்டமையும் சிறப்பம்சமே. நகரசபை முன்றலில் மிக அமைதியான முறையில் கொடியேற்றும் வைபவம் நடைபெற்றது. மண்டபத்தின் உள்ளே மேடையருகில் வைக்கப்பட்டிருந்த நாற்பது குத்துவிளக்குகளை நாற்பது பெண்மணிகள்



ஏற்றிவைக்க மங்களகரமாக ஆரம்பமானது மாணிக்கவிழா. ஜெகஜோதியாகப் பிரகாசித்த நாற்பது விளக்குகளும், சங்கத்தின் நாற்பது வருடக் கடின உழைப்பின் பெருவெற்றியினைப் பறைசாற்றி ஒளி பரப்பின.

மௌன அஞ்சலி, தமிழ்த்தாய் வாழ்த்து, பண்ணிசை, வரவேற்புரை, தலைமையுரை, ஆசியுரை, வாழ்த்துரை எனக் களைகட்டிய விழாவில், திரு. சர்மா அவர்கள், அழகாகத் தொகுத்துக் காட்சிப்படுத்திய சங்கத்தின் 1977-2017 வரையிலான தலைவர்களது செய்தியுடனான விவரணப் படக்காட்சியும,; அங்கே பதிவாகியிருந்த அமரத்துவமடைந்த தலைவர்கள், அங்கத்தவர்கள் நிழற்படங்களும் பசுமை நிறைந்த நினைவுகளை மீண்டும் நெஞ்சில் நிறுத்தியதோடு, பலரது கண்களில் நீர் மல்கச் செய்ததையும் குறிப்பிட்டேயாகவேண்டும்.



செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன்

செந்தமிழும், சிவநெறியும் செழுமையுடன் வளர நாற்பது ஆண்டுகளாக அயராது உழைக்கும் இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தினர்;, அதே வழியில் நம் தாய்த்தமிழ் மொழி, சைவம், மற்றும் தமிழ்ச்சமூகத்திற்கு, தத்தமக்குரிய துறைகள் மூலம் தொடர்ந்து தொண்டாற்றும் மூன்று பெரியவர்களை அவர்தம் சேவை நலம் பாராட்டிக் கௌரவித்தனர். என்பீல்ட் நாகபூஷணி அம்மன் திருக்கோயிலின் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ இரகுநாதக்குருக்கள் கமலநாதக்குருக்கள் அவர்களுக்கு சைவத்திற்கும் தமிழுக்கும் ஆற்றிவரும் பெரும் பணியைப் பாராட்டி "வேதாகம வித்தகர்"எனும் சிறப்புப்பட்டமும், தங்கப்பதக்கமும், வாழ்த்துப் பத்திரமும் வழங்கப்பட்டது. சிவாச்சாரியாருக்கான அறிமுகவுரையை சிவஸ்ரீ வசந்தன் குருக்கள் அவர்கள் வழங்கினார். தமிழ் அவைக்காற்றுக் கழக நிறுவனர் திரு. கனகரத்தினம் பாலேந்திரா அவர்களுக்கு நாடகத் தமிழுக்கு மாறாப் புகழுடம்பாய் என்றும் நிலைக்கும் படைப்புக்களை நாற்பது ஆண்டுகளாகத் தந்து இளையோரையும் இயக்கிவரும் பெரும் பணியைப் பாராட்டி "கலா வித்தகர்" எனும் சிறப்புப் பட்டமும், தங்கப்பதக்கமும், வாழ்த்துப்பத்திரமும் வழங்கப்பட்டது. இந்நாடகாசிரியருக்கான அறிமுகவுரையை கலசம் ஆசிரியர் திரு.ஜெகதீஸ்வரம்பிள்ளை அவர்கள் வழங்கினார். புதினம் ஆசிரியர் திரு. இளையதம்பி குமாரசாமி ராஜகோபால் அவர்களுக்கு ஈழநாடு முதல் இங்கிலாந்து வரை ஐம்பது வருடங்களுக்கு மேலாகப் பத்திரிகைத் துறையுடன் பயணித்து, தமிழினத்தின் உணர்வுகளைப் பதிவில் காட்டி வரும் பணியைப் பாராட்டி "தமிழ் வாரிதி" எனும் சிறப்புப் பட்டமும், தங்கப்பதக்கமும், வாழ்த்துப்பத்திரமும் வழங்கப்பட்டது. இப்பத்திரிகையாசிரியருக்கான அறிமுகவுரையை திரு. பா.வை. ஜெயபாலன் அவர்கள் வழங்கினார். சிறப்புப் பட்டங்கள் பெற்றுக் கொண்டவர்களை, தனக்கே உரிய பாணியில் மீண்டும் மீண்டும் சபையினரையும் இணைத்து வாழ்த்தி, விழாவின் சிறப்பிற்கு மெருகூட்டினார், கயிலை சிவஸ்ரீ நாகநாதசிவம் குருக்கள் ஐயா அவர்கள்.

கடந்த புரட்டாதி மாதத்தில்,நாற்பதாவது ஆண்டின் நிறைவையொட்டி, இலங்கையில் உள்ள நாற்பது இளந்தம்பதியினரின் ஒளியிழந்த எதிர்காலத்தை ஒளிமயமானதாக்கியதன் மூலம், சைவ முன்னேற்றச் சங்கம், அத்தம்பதியினரின் நெஞ்சங்களில் நிரந்தர ஆலயமாகக் குடிகொண்டமை யாவரும் அறிந்த விடயம்.

விழாவின் சிறப்பான நிகழ்வுகளின் மத்தியில், நால்வர் தமிழ்க் கலை நிலைய மாணவர்களின் இசை நிகழ்ச்சி, நடனம், "உதிக்கின்ற உச்சித் திலகம்" நாடகம், மாணவர்களுக்கான நாவன்மை, சமயபாடத் தேர்வுப் பரிசளிப்பு, ஸ்ரீமீனாட்சி பரதநாட்டியப் பள்ளி மாணவர்களின் "அர்த்தனாரீஸ்வரர்" குறவஞ்சி நாட்டிய நாடகம், சமஸ்கிருதம் யூ.கே. நடனம், சர்மா சகோதரிகள் நடனம், தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழக மாணவர்களின் "பரமார்த்த குருவும் சீடர்களும்" நாடகம், போன்ற இதமான நிகழ்வுகள் பார்வையாளர்களின் பார்வையை மேடையிலேயே சுழலவிட்டன. நால்வர் மூத்தோர் நிலைய அங்கத்தவர்களின் கிராமிய நடனம்

30ம் பக்கம் பார்க்க

அரியமலர் உதயகுமார்

# ஈழத்துக்கே அழைத்துச் சென்ற காயத்ரியின் பரதநாட்டிய அரங்கேற்றம்

நிருத்ய ஆச்சார ரத்னா உஷா ராகவன் மாணவி, கிரிதரன் - டாக்டர் சாந்தினி புதல்வி காயத்ரி கிரிதரனின் பரதநாட்டிய அரங்கேற்றம் சமீபத்தில் கெய்ஸ் பெக்கியேட்டரில் நடந்தது. அரங்கம் பரதத்துக்கு ஏற்ப அழகுபடுத்தப்பட்டிருந்தது.

எடுத்த எடுப்பிலே நர்த்தகி புஸ்பாஞ்சலி அலாரிப்புவில் கவர்ந்து, பார்க்க வேண்டுமென்ற ஆவலை ஏற்படுத்தினார். அடுத்து அவரது சப்தம் ஈழத்துக்கே அழைத்துச் சென்று விட்டது, பாலச்சந்திரன் யாத்த பஞ்சலிகேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், திருக்கோனேஸ்வரம், முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம், தொண்டீஸ்வரம் ஆகியன குருவின் நடன அமைப்பில், காயத்ரியின் சிறப்பான ஆடலை ரசிக்க முடிந்தது. இந்த நடனம் ஆடப்பெற்றபோது, திரையில் ஒவ்வொரு கோவிலும் காண்பிக்கப்பட்டபோது, நர்த்தகி அந்த ஆலயங்களுக்கு முன் அபிநயகம் பிடித்து ஆடிய காட்சி அற்புதம்!

எங்கள் யாழ்ப்பாணம், வீரமணி ஐயரின் ‘கற்பகவல்லி நின்.....’ பாடலுக்கு ஆடி, கற்பகாம்பாளை கண்ணெதிரே கொண்டு வந்த பதின்மூன்றே வயதான காயத்ரியை எப்படிப் பாராட்டுவது என்று தெரியவில்லை.

நடராஜப் பெருமான் நாள் முழுக்க ஆடியதை மதுரையில் ராஜசேகர பாண்டியன் பார்த்து, “இப்படி வலது காலை ஊன்றியபடி நடனமாடினால் உமது திருப்பாதம் நோகாதா?” என ஏங்கியதைக் கண்ட கருணைக் கடல், அம்மன்னனுக்கு கால் மாறி ஆடிக் காட்டினாராம். அதே போன்று காயத்ரியும், குந்தரவாளி ராகத்திலும், ஆதிதாளத்திலிருந்தும்



அமைந்த ‘கால்மாறி ஆடிய’ என்ற பதத்திற்கு குரு உஷா தன் மாணவியை ஆட வைத்தமை ஒரு சவால்!

பக்கவாத்தியங்கள் நடனத்துக்கு உயிரூட்டின. பாலச்சந்தரின் மிருதங்கம் பேசியது. நர்த்தகியின் கால்களோடு அவர் மிருதங்கம் சதிராடியது.

அவரின் மாணவரான காயித்ரியின் தம்பி கிரிதரன் கிருஷ்ணன் ஒரு நடனத்துக்கு மிருதங்கம் வாசித்தார். காயித்ரியின் சங்கீதக் குரு வம்சி கிருஷ்ணா சிறப்பாகப் பாடினார். பாலு ரகுராம் வயலின் இனிமையாக இருந்தது.

ஸ்ரீலங்கா துணைத் தூதுவர், சுகீஸ்வர குணரட்னர் பிரதம விருந்தினர். சிறப்பு விருந்தினர்களாக அம்பிகை தாமோதரம், டாக்டர் சுந்தரராஜா தேவநாதர் பங்கு கொண்டனர்.

காயத்ரியின் பாடசாலை உபஅதிபர் அலெக்ஸ் வில்சன் பேசுகையில், பல துறைகளிலும் திறமையுள்ளவர் காயத்ரி என்றும், 12 வயதில் மலேரியத் தடுப்புச் சாதனம் ஒன்றைக் கண்டு பிடித்து, இளம் விஞ்ஞானி என்ற விருதைப் பெற்றார் என்றும் கூறினார். நிகழ்ச்சியை அஞ்சலி விக்னகுமார் அழகாகத் தொகுத்து வழங்கினார்.

குருவின் கடின உழைப்பும், பெற்றோரின் ஒத்துழைப்பும் காயத்ரியின் நடன ஆற்றலின் வெளிப்பாடாக சிறந்த அரங்கேற்றமாக ஜொலித்தது! ●

# Think Twice ஒன்றிய சலங்கை ஒலி 2017

சரோஜினி சந்திரகோபால்

சலங்கை ஒலியின் ஓசையைக் கண்டு களிக்கவும், கேட்டு ரசிக்கவும் மண்டபம் நிறைய ஆவலுடன் அமர்ந்திருந்த அத்தனை ஆதரவாளர்களின் மனங்களும் மகிழும் வகையில், குறித்த நேரத்தில் ஆரம்பமானது ‘திங்க் ட்வைஸ்’ (*Think Twice*) ஒன்றியத்தின் ‘சலங்கை ஒலி 2017’. இலண்டனிலுள்ள முன்னணி நடன ஆசிரியைகளின் நெறியாள்கையில், வானவில்லின் அத்தனை நிறங்களிலும் தோய்ந்து எழுந்தாற்போன்ற வண்ண வண்ண ஆடை ஆபரணங்களுடன், அரங்கிற்கு வந்த பரத நாட்டியமணிகள், தம் கண்கவர் நடனங்களால் அரங்கை ஆக்கிரமித்துச் சபையோர் மனதைக் கொள்ளை கொண்டனர்.

‘திங்க் ட்வைஸ்’ ஒன்றியம் தனது எட்டாவது வருடத்தில் வெற்றி நடைபோட ஆணிவேராக இருப்பது, இவ்வொன்றியத்தின் ஸ்தாபகர், தலைவர், திரு. ஏ.ஆர். ஸ்ரீதரன் அவர்களும் ஏனைய அங்கத்தவர்களும் தாய் மண்ணிலும், தாயக உறவுகளிலும் கொண்டுள்ள தணியாப் பற்றேயாகும். 2011ம் ஆண்டிலிருந்து தாயகத்திலுள்ள கருணைப்பாலம் எனும் அமைப்புடன் ஒன்றிச் செயல்படும் இவ்வொன்றியம், இந்த ஆண்டிலும் பல சிறப்பான திட்டங்களைச் செயற்படுத்தியுள்ளனர். தாயகத்திலுள்ள தமிழ் இளந்தலைமுறையினருக்கு, தற்காலிக உதவிகள் செய்வதை விடுத்து, ‘உழைத்து வாழவேண்டும்’ எனும் பெயரில் கிளிநொச்சியில் ஒரு கல்லூரியும் தொழிற்சாலை, கற்சிலைமடு எனுமிடத்தில் உருக்குத் தொழிற்சாலை ஒன்று, பால்பண்ணை ஒன்ற, அத்துடன் ஒட்டிசுட்டானில் பப்பாசிப் பயிர்ச்செய்கை எனப் பல தொழில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து, பிறர் முன் கையேந்தி நில்லாது தன்கையே தனக்குதவி எனத் தன்னம்பிக்கையுடன் வாழ வழி வகுத்துக் கொடுத்துள்ளனர்.

இது மட்டுமின்றி, ‘லிட்டில் எய்ட்’ (*Little Aid*) எனும் தர்மஸ்தாபனத்துடன் இணைந்து, கிளிநொச்சியில் வதியும் மாணவர்களது ஆங்கில, கணனி அறிவினை விருத்தி செய்வதற்காகவும், தையற் பயிற்சியினை ஊக்குவிப்பதற்காகவும் செவ்வனே செயற்பட்டு வருகின்றனர். இதுபற்றி விளக்கிய திரு.ஏ.ஆர். ஸ்ரீதரன் இத்திட்டத்தினைச் செயற்படுத்த ஒரு வருடத்திற்கு 6000 பவுண்கள் தேவைப்படுவதாகக் கூறினார். தாயகத்தில் போரினால் ஏற்பட்ட வலிகளோடும், வடுக்களோடும் அல்லலுறும் நம் இளைய சமுதாயத்தினருக்கு, அறிவு







வளர்ச்சிக்கும், தொழில் வாய்ப்புக்களுக்கும் மட்டுமின்றி, இவர்கள் எதிர்காலத்தில் தன்னம்பிக்கையுடனான நல்ல பிரஜைகளாக வாழ்வதற்காக, ‘ஆளுமை விருத்திக் கல்வி’ எனும் திட்டத்திற்கான செயல் அமர்வுகள் தற்பொழுது நடந்துள்ளதாகவும், ‘உன்னால் முடியும்’ என்ற பெயருடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமென்றும் பெருமிதத்துடன் கூறினார். ‘திங்க் ட்வைஸ்’ ஒன்றியம் வெளியிட்ட கார்த்திகை மாத இதழில் ‘ஜீவா முகுந்தன்’ என்பவர் எழுதிய கவிதை ஒன்று... அக்கவிதையில் சில வரிகள்....

“ஆண்ட பூமியில் அடிமைகளாய் வாழ சபிக்கப்பட்டவர்கள் நாம் வாழ்தலின் ஒவ்வொரு அங்கத்தினாலும் சபிக்கப்பட்டவர்களாக நாம்” அழகான அக்கவிதையை எழுதிய ஜீவாவிற்கும் பாராட்டுக்கள். சலங்கை ஒலியின் சபையோர் மனதைத் தொட்ட, தமிழர் தலை நிமிர்ந்து பெருமைப்பட வேண்டிய நிகழ்வாகப் பரிணமித்தது, 24 வயதேயான ராதவன் குணரட்ணராஜாவின் கௌரவிப்பு. மான்ச்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் முழுநேர மருத்துவ படிப்பைத் தொடரும் ராதவன், ‘லிட்டில் திங்க்ஸ்’ எனும் தொண்டு நிறுவனத்தை நிறுவி, பல சுகாதாரத் திட்டங்களை முன்னெடுத்து தன்சானியா, கிளிநொச்சி, தெல்லிப்பிழை போன்ற நாடுகளுக்கு உதவிகளைச் செய்ததோடு, நேபாளம் போன்ற நாடுகளுக்கு உதவுவதற்கான திட்டங்களையும் முன்னெடுத்து வருகிறார். இவரது



சேவையைப் பாராட்டி பிரித்தானிய பிரதமர் தெரேசா மே 787வது *point of light* விருது வழங்கியதோடு தனிப்பட்ட வாழ்த்துக் கடிதமும் அனுப்பியுள்ளமை, ஒவ்வொரு தமிழனுக்கும் கிடைத்த பாராட்டு. ‘திங்க் ட்வைஸ்’ நிறுவனம் ராதவனுக்கு ‘*young tamil citizen award*’ என்ற விருது அளித்து, கேடயமும் வழங்கியமை பாராட்டுதற்குரிய விடயம். இந்த விருதினை இந்நிறுவனத்தின் உப தலைவி திருமதி. கமலா பாலசுப்பிரமணியம் கையளித்தார். ராதவன் ஈஸ்ற்காம் திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளியின் பழைய மாணவர். இந்நிறுவனத்தின் பொருளாளர் என். சண்முகதாஸ் பேச்சு சுருக்கமாகவும், கருத்துப் பொதிந்ததாகவும் இருந்தது.

அடுத்து. ‘திங்க் ட்வைஸ்’ நிறுவன அதிபர் திரு.ஏ.ஆர். ஸ்ரீதரனின் நெறியாள்கையில் அரங்கேறிய ‘உன் பார்வை ஒரு வரம்’ நாடகம். தாயகத்தில், போர்ச் சூழலில் இரு இளம் உள்ளங்களில் அரும்பிய காதல் பற்றிய கதை. நெஞ்சம் நிரம்பிய காதலுடன் ஒரு பள்ளி மாணவி. தாயகக் கனவுடன் அந்த மாணவியையும் உயிராக நேசிக்கும் ஒரு மாணவன். காதலா? தாய்மண்ணா? என்ற கேள்வி எழுந்தபோது, வென்றது தாய் மண்ணில் அவன் கொண்ட காதலே. இடையில் தன் கணவனின் தந்தையாரை சரீரப் பிணையாக விட்டுவிட்டு, இலண்டன் போகத் துடிக்கும் மருமகள், போர்ச்சூழலிலும் கடமை புரியும் டாக்டர். நாட்டுக்காகப் போராடப்போன மகனை எண்ணி ஏங்கும் தாய், தொலைபேசி இணைப்புத் தள உரிமையாளரின் யதார்த்தமான போக்கும், பேச்சும், 10 வருடங்களின் பின் அந்த காதலர்கள் சந்திப்பு, இப்படிப் பல தரப்பட்ட மகிழ்ச்சி, சோகம், யதார்த்தம், நகைச்சுவை கொண்ட இந்த நாடகத்தில், காதலின் புனிதத்துவமும், நாட்டுப்பற்றும் மிக அழகாகச் சித்தரிக்கப்பட்டிருந்தது. 11.11.2017இல் ‘*Woodbridge High School, Woodgreen* இல் நடந்தேறிய இவ்விழாவில், திரளாக அமர்ந்திருந்த மக்கள் ஒரு நிறைவான நிகழ்ச்சியைக் கண்டு களித்த உணர்வுடனும், சொல்லப்பட்ட நேரத்தில் விழா நிகழ்ச்சிகள் முடிவுற்ற பெருந்திருப்தியோடும் வீடு திரும்பினர். ●



# லண்டனில் நடந்த பாரதியார் பல்கலைக்கழக பட்டமளிப்பு

தமிழ்நாடு பாரதியார் பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட, மேலை நாட்டு பாடசாலைகள் ஒன்றியத்தினால் (Western Tamil School Federation uk) 2014-2017 கல்வி ஆண்டுகளில், இளங்கலை மானி (B.A) முதுகலைமானி (M.A) நிறைவு செய்த பரீட்சார்த்திகளுக்கான பட்டமளிப்பு விழா வொலிங்டன் மகளிர் கல்லூரி மண்டபத்தில் சமீபத்தில் சிறப்பாக நடைபெற்றது. தமிழ்நாடு தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி க. பாஸ்கரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கான பட்டமளிப்பை நடாத்தி வைத்தார்.



20 பேருக்குப் பட்டச் சான்றிதழ்களை வழங்கிக் கௌரவித்தார். கடந்த மூன்று வாரங்கள் லண்டனில் புதிய மாணவர்களுக்கான விரிவுரைகளை நடாத்திய பாரதியார் பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி ஆர். சந்திரசேகரன், சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். இவருடன் கொவன்றி தமிழர் நலன்புரிச்சங்கத்தின் தலைவரும், தமிழ் பாடசாலை தலைவருமான கே. அரியரத்தினம் சிறப்பு விருந்தினராக கலந்தார். இவ்விழாவுக்கு தமிழ் ஆர்வலர் கே. மனோகரன் தலைமை வகித்தார். தொலை தொடர்பு கல்வி மூலம் இழந்த சந்தர்ப்பத்தை மீண்டும் பெற்று பட்டம் பெறும் ஆர்வம் வளர்ந்துள்ளதை உபவேந்தர் பாஸ்கரன் தனது பட்டமளிப்பு உரையில் குறிப்பிட்டார். வரவேற்புரையை முருகையா நிகழ்த்தினார். மேட்டன் தமிழ்பாடசாலை அதிபர் பத்மமோகன் விழா, நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்தார்.

எதிர்காலத்தில் இரண்டாவது மொழியாக தமிழ்மொழியை கொண்டிருக்கக் கூடிய சூழ்நிலை உருவாகிறது. இதனை மனதில் கொண்டு, அவர்களுக்கு அமைய கற்பிப்பதற்கு தகுதியானவர்களை உருவாகக் வேண்டுமென்ற நோக்கத்தின் விளைவாக 2010ம் ஆண்டு மேலைநாட்டு பாடசாலைகள் ஒன்றியம் - uk ஆரம்பிக்கப்பட்டது. 2012ம் ஆண்டு, இலகுவான முறையில், தயாரிக்கப்பட்ட தமிழ் பட்டதாரிகளுக்கான பாடத்திட்டத்தை பாரதியார் பல்கலைக்கழக உபவேந்தர் சுவாமிநாதன் லண்டன் வந்து, அங்கீகாரம் வழங்கினார். இதனைத் தொடர்ந்து பாரதியார் பல்கலைக்கழக பேராசிரியர் சந்திரசேகரன் சில தடவைகள் லண்டன் வந்து மாணவர்களுக்கு விரிவுரைகளை நடாத்திச் சென்றார்.

சிவகுமாரன் தமிழ் பாடசாலை ஸ்தாபகரும், தமிழ் கல்வி ஆர்வலருமான ஜோசப் வில்வராஜா கடின உழைப்பில், கல்வியாளர்களின் அரவணைப்பில் தமிழ்பட்டதாரிகளை உருவாக்கும் இம்முயற்சி பலராலும் வரவேற்கப்பட்டுள்ளது. லண்டனில் நடக்கவுள்ள பட்டதாரிகள் பரீட்சையில் சேர்ந்து கொள்ள விரும்புவோர் தொடர்பு கொள்ளலாம்.

**வில்வராஜ் - 07958 408280**

1ம் பக்க தொடர்ச்சி

தமிழ் தேசிய அரசியல் தலைமைகள் சிக்குண்டு போனதுபோல் உணரப்படுகிறது.

இந்தியாவின் வசந்த அழைப்புகள், புலம்பெயர் தேசத்தை நோக்கி வருவதாகவும் செய்திகள் வருகின்றன.

சீனா மற்றும் அமெரிக்காவின் திடமான காலூன்றல் குறித்து டெல்லி வளாகம் தடுமாறுகிறது.

ஒரு தடவை தலைவரைச் சந்தித்த 'சுருட்டுக்காரர்', ' மிஸ்டர் பிரபாகரன்.. நீங்கள் மூன்று தடவைகள் எம்மை ஏமாற்றியுள்ளீர்கள் ' என்ற போது, அதற்குப் பதிலளித்த தேசியத்தலைவர், ' நாம் எம் மக்களை மூன்று தடவைகள் உங்களிடமிருந்து காப்பாற்றியிருக்கின்றோம்'. என்றாராம்.

ஈழப்போராளிகளுக்கு ஆயுதப்பயிற்சிகளும் அளித்து, இலங்கையோடு ஒப்பந்தத்தையும் செய்து, இறுதியில் எதனைச் சாதித்தது இந்தியா?.

ஆனால் ஒன்று மட்டும் விளங்குகிறது.

80 களில் , 2009 இல் விட்ட தவறுகளை இன்னமும் அது திருத்திக் கொள்ளவில்லை என்பது தெரிகிறது.

இன்னமும் எம்மைப்பாவித்து, சிங்களத்தை தனது பிடிக்குள் கொண்டுவரும் இற்றுப்போன இராஜதந்திரத்தை இந்தியா கைவிடவில்லை என்பதும் புரிகிறது.


OM SAKTHI ASTROLOGY CENTRE

Skilled in: Astrology Hand Reading, Numerology, Horoscope Reading, Face Reading



SIVA RAM GURUJI

EXPERT IN:
PALM, FACE, PHOTO, PATRA NAME AND DATE OF BRITH READING KNOW YOUR PAST, PRESENT & FUTURE



TO GET PERMANENT SOLUTIONS TO ALL YOUR PROBLEMS SUCH AS:

BLACK MAGIC, EVIL SPIRITS, JADOO, VOODOO, WITCHCRAFT OBEAH, EVIL EYE POWER, CURSE, JEALOUSY, HEALTH, LOVE MARRIAGE, FAMILY PROBLEMS, LOTTERY, JOB MONEY, EDUCATION COURT CASES, SEXUAL PROB., CHILDREN PROB., REUNITES LOVERS, ETC.,

SPECIALIST IN BRINGING BACK LOVED ONES

ONE STOP, 218 HIGH STREET NORTH EAST HAM, LONDON - E6 2JA

Contact: 07404 101 443 / 07404 197618
India Number: (0091) 98480 53506



ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம் (ஹறோ)

தேவை : பணிநிலை வேலை - உதவி சிவாச்சாரியார் (Religious Worker)

தகமைகள்: விண்ணப்பதாரர் சிவாச்சாரியார் பட்டம் பெற்றிருக்க வேண்டும். குறைந்தது 6 மாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

கடமைகள்: வேத ஆகம விதிமுறைப்படி ஆலயத்தில் பூஜைகள் செய்திருத்தல் வேண்டும்.

வேதனம்: மாதம் £1170 + ஓய்வூதியம். வருடத்திற்கு ஒரு மாதம் விடுமுறை வழங்கப்படும்.

பதவிக்காலம்: 2 வருடங்கள்

ஆலயம் இலவச தங்குமிடமும் உணவும் வழங்கும்.

விண்ணப்ப முடிவு திகதி :
15.12.2017. சுய விபரக்கோவையுடன்
தபால் மூலம் அல்லது email மூலம் விண்ணப்பிக்கவும்.

அனுப்ப வேண்டிய விலாசம்:
General Secretary
Shri Sithi Vinayagar Thevasthanam (Harrow)
Unit B, Rear of 59 Station Road, Harrow,
Middlesex HA1 2TY
Email: sithivinayagarharrow@gmail.com

# லண்டனில் நாதவிநோதம் ‘ஆனந்த லயாஸின்’ 10ஆவது ஆண்டு





நிருத்த, கீத, இசை வாத்தியங்களுக்குப் பிரதான விரலிசைத் துணை வாத்தியமாகவும், லய வாத்தியமாகவும் மிளிர்கின்றது மிருதங்கம் என்ற ஆனந்த வாத்தியம். இந்தப் பக்க வாத்தியத்தின் ஆசிரியராகத் திகழும் ஸ்ரீகந்தையா ஆனந்த நடேசன் ‘ஆனந்த லயாஸ்’ என்ற மிருதங்கப் பள்ளியைக் கடந்த பத்து வருடங்களாக வெற்றிகரமாக நடாத்தி வருவது பாராட்டுக்குரிய விடயமாகும். இவர் மிருதங்கத்தில் மட்டுமன்றி கஞ்சிரா, கடம், மோர்சிங், தபேலா, தவில் போன்றவற்றிலும் பயிற்சி பெற்ற சிறந்த கலைஞராவார்.

ஸ்ரீ ஆனந்த நடேசன் இத்தகையதொரு மிருதங்கக் கலையை மனநிறைவோடு மாணவர்களுக்குப் பயிற்றுவித்து 25இற்கும் மேற்பட்ட மிருதங்க அரங்கேற்றங்களை லண்டனில் நடாத்தியிருப்பது குறிப்பிட வேண்டிய முக்கிய விடயமாகும். இன்றைய நவீன கால நிலையில் கலைகளை சமநிலையாகப் பேணும் அவசியம் புலப்படுகின்றது. அறிவியலுக்கும் கலைத்துறைக்கும் இடையில் சமநிலையைப் பண்பைப் பேணும் வகையில் ஸ்ரீ ஆனந்த நடேசனின் கற்பித்தல் முறைகள் அலாதியானது. கலைஞர்களுக்குரிய கலைப்பண்புகளோடு மாணவர்களை அணுகி, கவர்ச்சியாகக் கற்பிப்பது இவரின் ஆளுமைப் பண்பின் சிறப்பம்சமாகும். அவரிடம் பயின்ற மாணவர்கள் பலர் பல்வேறு தாள வாத்தியங்களில் பயிற்சி பெற்று தாளவாத்திய ஆசிரியர்களாக தற்போது திகழ்கின்றார்கள் என்றால் அந்தக் குருவின் வழிகாட்டலின் திறமை என்றே நம்புகிறேன்.

அந்த வகையில் ஸ்ரீ ஆனந்த நடேசன் அவர்களால் அரங்கேறிய ‘நாத விநோதத்தை’ அவரது அரங்கேறிய மாணவர்களான அகஸ்ரி ஜோகரட்னம் (சிம்பா), அருண் மகேஸ்வரன், மேவின் மகேந்திரன், ராம் சிவசுப்ரமணியம், கிரிசன் பாஸ்கரன், விருசிகன் ராஜாஜி, விதுஷன் விக்ரமராஜா, கபிலேஷ் கிரிதரன், சஞ்சூரன் கீர்த்திகுமார், ஹரிஷ் மோகன், ஹரிசன் சிறீகாந், விஜித் சந்திரபாலன், மகேசன் புவனச்சந்திரன், ஜதூஷன் அழகராஜா ஆகியோர் அவருடன் இணைந்து மிருதங்கம், கஞ்சிரா, கடம், மோர்சிங், தபேலா போன்ற பல்வேறு தாள வாத்தியங்களுடன் இணைத்து தத்தமது திறமைகளை வெளிக்காட்டியமை மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

‘ஆனந்த லயாஸ், அமைப்பின் மாணவர்கள் புல்லாங்குழல் இசை, கர்நாடக இசை, வயலின் இசை போன்ற பல்வேறு இசைக் கச்சேரிகளுக்கு பக்க வாத்தியங்களாக பல்வேறு தாள லயங்களை வாசித்து 10ஆவது நிறைவு தினத்தை மிகச் சிறப்பாக்கியிருந்தார்கள்.


‘கலையின்பமே நிலையின்பமாம்’ ஸ்ரீ.ஆனந்த நடேசனின் குருவான கலாபூசணம் க.ப.சின்னராசாவின் வாசகத்தை நினைவு கூர்ந்து, வளர்ந்து வரும் இளம் கலைஞர்கள் அனைவருக்கும் பெரியவர்களின் பாராட்டும் ஆசீரும் கிடைக்க வேண்டுமென விரும்பி, ‘ஆனந்த லயாஸ், அனைத்துக் கலைகளையும் நீடித்து வளர்க’ என வாழ்த்தி நிற்கின்றேன்.

17 ம் பக்கத்தின் தொடர்ச்சி

சிறு சத்திரசிகிச்சைகள் அமையும் பலனும் இருக்கும். பொறுமையோடு செயற்பட வேண்டும். புதிய முதலீடுகள் செய்வதில் சற்று கவனம் தேவை. சொத்துக்கள் விடயங்களில் சிக்கல் நிலைகள் அமையும் நிலையிருக்கும். வாகன விடயங்களிலும் பொறுமையுடன் நிதானமாகக் கையாள வேண்டும். நீங்களுண்டு, உங்கள் வேலையுண்டு என இருப்பதே சாலச்சிறந்தது. ஏதாவது ஒரு ரூபத்தில் பிரச்சனை உங்களைச் சூழும் நிலையிருக்கும். அதற்கேற்பவே உங்களின் செயற்பாடுகளும் மிகவும் நிதானத்துடன் செயற்படுத்த வேண்டும். திடீர் பணவிரயங்கள் அமையும் பலனும் இருக்கும். உறவினர், நண்பர்களுடன் எதிர்பாராத வகைப் பிரச்சனை, வாக்குவாதம் என்பனவும் அமையும். இதை உணர்ந்து செயற்பட்டு பலன் பெறுக!

## மகரம்

### (உத்தராடம் 2ம், 3ம், 4ம் பாதம், திருவோணம், அவிட்டம், 1ம், 2ம், பாதம்)




ஆயுட்காரகன், நீதிக்கிரஹம் எனப்போற்றப்படும் சனீஸ்வரனின் ஆதிபத்தியம் கொண்ட மகரராசி அன்பர்களே! உங்கள் ராசிநாதன் மந்தக் கிரஹமாக அமைந்திருப்பது ஒருவித சஞ்சலமான நிலைகள் மனதிலே இருக்கும். ஆடம்பரமான வாழ்வியலை அதிகமாக விரும்புகின்றவர்கள் நீங்கள். இதனாலே அதிக பிரச்சனைகளையும் சந்திக்கின்ற நிலை இருக்கும். தவறாக இருந்தாலும் நீங்கள் எடுக்கும் முடிவையே சரியெனக் கொள்ளும் மனோபாவம் கொண்டவர்கள். வாழ்க்கையில் எந்த நிலையில் நாம் இருக்கின்றோம் எனும் எண்ணம் மறந்து உயர்ந்த கற்பனையில் வாழ்வதற்கு அதீத முயற்சிகள் எடுப்பீர்கள். மற்றவர்களை விமர்சனம் செய்வதும் உங்களுக்கு மிகவும் பிரியமான விடயமாகும். பொதுவாக வாழ்வியலில் பலவிதமான போராட்ட நிலையைப் பெறுகின்ற நீங்கள் எதற்கும் அஞ்சாத துணிவும் அதிகம் கொண்டவர்கள்.

உங்கள் ராசி நிலைக்கு ஏழரைச்சனி சஞ்சாரம் ஆரம்பமாகின்றது. எனவே, நீங்கள் மிகவும் பொறுமையோடு செயற்படும் காலமாக அமைகின்றது. தொழில் நிலைகளில் எதிர்பாராத பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டிவரும். தொழில்நிலை சார்ந்த வேலைப்பளு அதிகமாக இருக்கும். மனதிலே சஞ்சலமானநிலை அதிகமாக அமைந்திருக்கும். கொடுக்கல், வாங்கலில் நிதானமாக செயற்பட வேண்டும். பணவரவுகளிலே சிக்கல் நிலைகள் அமையும். எதையும் உங்களின் திட்டத்திற்கேற்ப செய்ய முடியாத நிலை இருக்கும். குடும்பத்தில் தேவையற்ற வீண்பிரச்சனைகள் சூழும். உறவினர்களுடன், நண்பர்களுடன் வாக்குவாதம் அமையும். உங்களின் ஜென்ம, தன, ஸ்தான ஆதிபத்தியம் பெறும் சனீஸ்வரன் உங்கள் ராசி நிலைக்கு ஏழரைச்சனி முதற்கூற்று சஞ்சாரமாக அமைகின்றார். எனவே, உங்களின் முக்கியமான முயற்ச்சிகளில் மிகவும் பொறுமையான செயற்பாடு வேண்டும். உடல்நிலையில் சுகயீனங்கள், மருத்துவ செலவு என்பன அமையும். ஒரு சிலருக்கு சிறுசத்திரசிகிச்சை அமைகின்ற பலனும் இருக்கும். எனவே, அதற்கேற்ப உங்களின் உடல்நிலையில் கூடிய கவனம் எடுத்துச் செயற்படுவது மிகவும் நல்லது. புதிய தொழில் முயற்சிகளிலும் பிரச்சனைகள் இருக்கும். தொழில் சார்ந்த வேலைப்பளு அதிகம் அமைவது போலவே திடீரென தொழில்நிலை நீக்கமும் அமைய பலனுண்டு. அதற்கேற்ப மேலதிகாரிகளுடன் மிகவும் பொறுமை, நிதானமாக செயற்பட வேண்டும். தேவையற்ற வாக்குவாதங்களை தவிர்த்துக் கொள்வது மிகவும் நல்லது. எதையும் சாதித்து செயற்பட முனையும் உங்களின் முயற்சிகளில் தடைகளும், இழுபறி நிலைகளும் இருக்கும் அதற்கேற்ப உங்களை உற்சாகப்படுத்தி தேவையற்ற விடயங்களில் தலையீடு கொள்ள வைப்பதற்கென சில உறவினர்களும், நண்பர்களும் உங்களைச் சூழ்ந்து இருப்பார்கள். இவர்களை இனம்கண்டு செயற்பட்டுக் கொள்ள வேண்டும். குருவின் கோசாரபலனும் உங்களுக்கு ஜீவன ஸ்தானமாகிய 10ம் இடம் அமைவது முக்கியமாக தொழில் நிலைகளில் சிக்கல் நிலைகள் அதிகமாக இருக்கும். இதற்கேற்ப உங்களின் செயற்பாடுகளின் மூலமாக நீங்கள் அனுகூலம் பெறுங்கள்.

## கும்பம்

### (அவிட்டம் 3ம், 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1ம், 2ம், 3ம் பாதம்)



ஆயுட்காரகன், நீதிக்கிரஹம் எனப்போற்றப்படும் சனீஸ்வரனின் ஆதிபத்தியம் கொண்ட உங்களுக்கு ஏதோ ஒரு வகை அதிர்ஷ்டம் சூழ்ந்த வண்ணமே இருக்கும். நீங்கள் நினைக்கும் விடயங்கள் பூரணமாக உங்களை வந்து சேராவிடினும் ஓரளவிற்கு அமைந்துவிடும் நிலையிருக்கும். அதிகமான சுயநலச்செயற்பாடு உங்களிடம் மேலோங்கி இருக்கும். நல்ல முறையிலே உங்களின் காரியங்களை மிகவும் கச்சிதமாக முடித்து விடுவீர்கள். உங்கள் காரியங்களை எதிர்த்தோ, அமைதியாகவோ இடம், பொருள், ஏவலுக்கேற்ப செய்து முடித்துக் கொள்ளும் ஆற்றல் கொண்டவர்கள் நீங்கள். மனதிலே நல்ல ஆன்மபலம் தைரியம் கொண்டு செயற்படுவீர்கள்.

உங்களின் ராசி நிலைக்கு சனீஸ்வரன் லாபஸ்த்தானமாகிய 11ம் இடம் அமைகின்றார். எடுக்கும் முயற்சிகளில் பூரணமான வெற்றிகள் பெறுவீர்கள். குடும்ப நிலையில் அனுகூலமான நன்மைகள் அமையும். தொழில்நிலை சார்ந்த முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். புதிய தொழில் முயற்சிகளில் நல்ல வெற்றிகள் கிடைக்கின்ற நிலையிருக்கும். பணவரவு நல்ல திருப்திகரமாக அமையும். கடன் நிலைகளில் சுமூகமான பலன்கள் அமையும். கொடுக்கல், வாங்கலில் சுமூகமான பலாபலன்கள் அமையும். திருமணம் போன்ற சுபகாரியம் எதிர்பார்க்கின்றவர்களுக்கு அப்பலன் நிறைவானதாக இருக்கும். குடும்ப உறவினர், நண்பர்களின் மூலமாக நல்ல அனுகூல பலன்கள் அமையும் நிலையிருக்கும். சொத்துக்கள் வந்து சேரக்கூடிய பலாபலன் அமையும். வழக்கு விவகாரங்களில் உங்களின் பக்கம் வெற்றிகள் சேரும் நிலையிருக்கும். பூர்வீக சொத்துக்கள் உங்களைச் சேருகின்ற பலன் இருக்கும். வாகன லாபங்கள் சிறப்பாக இருக்கும். புதிய வாகனச் சேர்க்கையும் அமையும். வெளிநாட்டு பிரயாணம் எதிர்பார்க்கின்றவர்களுக்கு அப்பலன் நிறைவாக அமையும். எந்த விடயமாக இருந்தாலும் அனுகூலம் கொடுக்கும்.

உங்களின் ராசி நிலைக்கு குருபகவான் பாக்கியஸ்த்தானமாகிய 9ம் இடத்திலே அமைவதும் இரட்டிப்பு நன்மைகள் கொடுக்கும். உங்கள் ராசி நிலைக்கு ஜென்ம, விரயஸ்தான ஆதிபத்தியம் பெறும் சனீஸ்வரன் அமைந்துள்ள கோசார பலன் லாபஸ்த்தானம் எனப்படுகின்ற 11ம் இடம் அமைவதன் மூலமாக உங்களின் பல எதிர்பார்ப்புகளை நிறைவாக அடையும் நிலையை இப்பலன்கள் கொடுக்கும் நிலையுண்டு. எனவே இந்தச் சனிப்பெயர்ச்சியின் மூலமாக நீங்கள் பலவித சிறப்புப் பலன்கள், அதிர்ஷ்ட பலன்கள் பெறக்கூடிய நிலை உண்டு.


## மீனம்

### (பூரட்டாதி 4ம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)



புத்திரகாரகன், ஞானகாரகன் எனப்போற்றப்படுகின்ற குருவின் ஆதிபத்தியம் கொண்ட மீனராசி அன்பர்களே! எல்லா விடயங்களிலும் முன்னிலை வகிக்க வேண்டுமெனும் எண்ணப்பாங்கு அதிகம் கொண்டவர்கள் நீங்கள். மற்றவர்களின் விடயங்களில் தலையீடு கொண்டு சமாதானப்படுத்துவதில் உங்களுக்கு தனிவிருப்பமாகும். நீங்கள் செய்யும் உதவிகளை, விடயங்களை நீங்கள்தான் செய்தது என்பதை தெளிவுபடுத்துவதில் கவனமாக இருப்பீர்கள். மனதிலே அதிகமான கற்பனை வளம் நிறைந்து இருக்கும். எதையும் சோர்வின்றிச் செய்யும் ஆர்வம் அதிகம் கொண்டிருப்பீர்கள். பலவகையிலும் எல்லோருடனும் பழகி நட்புறவு கொண்டாடுகின்ற தன்மைகள் அதிகமாகக் கொண்டிருப்பீர்கள்.

உங்களின் ராசி நிலைக்கு சனீஸ்வரன் ஜீவனஸ்த்தானமாகிய 10ம் இடம் அமைகின்றார். பொதுவாக இந்த பெயர்ச்சியின் பலாபலன் பெரும் நன்மைகளை, சிறப்புகளை எதிர்பார்க்க முடியாது. சற்று சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைகள் இருக்கும். குடும்ப நிலையில் சுமாரான மத்திமமான பலன்களே அமையும். எடுக்கும் முயற்சிகளில் அதிகமான அலைச்சல் நிலைகள் இருக்கும். தேவையற்ற அலைச்சலினால் மனச்சோர்வும், மனச்சஞ்சலமும் தொடரும் நிலைகள் இருக்கும். எதையும் நீங்கள் திட்டமிட்டு செய்ய முடியாதநிலை அமைந்திருக்கும். பணவரவு விடயங்களில் மத்திமபலனே இருக்கும். கொடுக்கல், வாங்கல் விடயங்களிலும் நிதானமான செயற்பாடு வேண்டும். முக்கியமாக தொழில்நிலையில் அதிகமான அலைச்சல், வேலைப்பளு அமையும். தொழில் சார்ந்த பிரயாணங்கள் அமையும் நிலையுண்டு தொழில் சம்பந்தமான வெளிநாட்டு பயணங்களும் அமையும் நிலை அமைந்திருக்கும். சிலசமயம் தொழில் இல்லாத நிலையும் ஏற்படும். எனவே, தொழில் விடயங்களில் தேவையற்ற தலையீடுகளை தவிர்த்து செயற்படுவது மிகவும் நல்லது. மேலதிகாரிகளுடன் அளவாக உங்கள் செயற்பாடுகளை மேற்கொள்வது மிகவும் நல்லது. உடல்நிலை சார்ந்த சிறுசிறு உபாதைகள் அமையும் நிலையும் இருக்கும். உங்கள் முயற்சிகளில் சிறுசிறு காரியத்தடைகள் இருக்கும். சொத்து விடயங்களில் வாங்குவது, விற்பது சற்று நிதானமாகவே செயற்படவேண்டும். உங்களின் ராசி நிலைக்கு குருவின் சஞ்சாரமும் அட்டமஸ்த்தானமாகிய 8ம் இடம் அமைவது சிரமமான பலன்களையே கொடுக்கும். அதற்கேற்ப பொறுமை, நிதானம் கொண்டு செயற்பட வேண்டும். குடும்ப நிலையில் உறவினர்களுடன் சிறு சிறு மனஸ்தாபம் அமையும். வாகன விடயங்களில் பொறுமை, நிதானம் கொண்டு செயற்பட வேண்டும். எந்த விடயமாக இருப்பினும் உங்களின் வரையறைக்குள் உட்பட்டதாய் அமைத்துக் கொண்டு செயற்படுவது அனுகூலமான பலன் கொடுக்கும்.





# ஆலய வழிபாடு

தத்துவாமிர்தமணி சிவஸ்ரீ பா.வசந்தக்குருக்கள் B.A(Hons)

ஆலயம், சந்நிதி, திருத்தலம், புண்ணியபதி,க்ஷேத்ரம், திருக்கோவில், திவ்யதேசம் போன்ற பல்வேறு பெயர்களால் இறைவனுடைய அருள் இடங்கள் போற்றப்படுகின்றன. எமது ஆன்மா பொறி புலன் மூலமாக உலக இன்பத்தை அனுபவிக்கின்றது இது போகம் எனப்படும். அதேபோன்று பொறி புலன் மூலமாக இறைவனை நோக்கி அனுபவித்தல் லயம் எனப்படும். ஆன்மாவானது இறைவனை நோக்கி இன்பம் அனுபவிக்க உள்ள இடம் ஆலயம் ஆகும்.

லயம் என்பதற்கு கட்டுப்பாடு என்றகருத்தும் உண்டு. எமது புலன் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தி மனத்தை இறைவன்பால் குவிந்து இருக்கச் செய்தல். இதனை மனோலயம் என்றும் சொல்லுவர். இதற்குரிய இடமாக ஆலயம் குறிப்பிடப்படும். சங்கீத சாஸ்திரத்தில் லயம் என்றால் தாளம் அதாவது அதுவும் ஒரு கட்டுப்பாடுதான். இதனை தாளக் கட்டுப்பாடு எனலாம். ஆலய வழிபாட்டிலும் சில கட்டுப்பாடுகள் உண்டு. அவற்றை நாம் பின்பற்ற வேண்டும். ஆலயங்களில் செருப்பு அணியக் கூடாது. பெண்கள் தலை விரித்துப் போகக்கூடாது, இவையெல்லாம் நாம் நடைமுறையில் தெரிந்துள்ள கட்டுப்பாடுகள்.

ஆண்கள் வேட்டி சால்வை, பெண்கள் சேலை போன்ற பூர்ண வஸ்திரங்களை அணிந்து வழிபாட்டில் ஈடுபடுவதும் ஒரு கட்டுப்பாடாக இருந்த காலம் அருகி வருகிறது. இவ்வாறான பூர்ண வஸ்திரம் அணிவதால் பூர்ண பலன் உண்டு. புலம்பெயர் நாடுகளில் குளிர் காலங்களில் இவை சற்றுக் கடினமாக இருந்தாலும் பிரதானமாக ஆலயங்களில் உபயம் செய்கின்ற அன்பர்கள் மற்றும் சுவாமிகாவும் அடியார்கள் பின்பற்றினால் சைவத் தமிழ் பண்பாட்டை உயர்த்தும்பணிக்கு துணை புரிகிறார்கள். மனம்வைத்தால் (லயமானால்) இது அவ்வளவு சிரமம் இல்லை. அத்துடன் தெய்வ சந்நிதான மரியாதையைசெய்த பெருமையும் உண்டு. இதனை விரதம், விழாக் காலங்களிலாவது அதிகம் நாம் கடைப்பிடிக்க வேண்டும். ஆலயம், கோவில் இரண்டும் ஒரு இடத்தைக் குறித்தாலும் இரண்டிற்கும் ஒரு சிறு வித்தியாசத்தை திருமூலர் குறிப்பிடுவார். உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பு ஆலயம் அதாவது கோவில் என்றால் கடவுள் இருக்கும் இடம். ஆலயம் என்றால் ஆன்மா ஒடுங்கும் இடம். கடவுள் உள்ள இடத்தில் ஆன்மா அவரை நோக்கி ஒடுங்க வேண்டும். ஆன்மா இறைவனை நோக்கி எப்போது ஒடுங்குகிறதோ அங்கு கடவுள் இருப்பார்.


ஆலயங்களில் நடைபெறும் அனைத்து வழிபாடுகளும் உள்ளத்தையும் உடலையும் தூய்மைப் படுத்தும் முறைக்கே அமைந்துள்ளன. ஆலயத்திற்கு செல்வதற்கு முன் குளித்து தூய ஆடை அணிந்து செல்ல வேண்டும்.ஆலயத்தில் நடைபெறும் மந்திர ஓசை, மணி ஓசை. திருமுறைகள், மங்கள வாத்தியங்கள் போன்ற இறையியல் ஒலிகள் எல்லாம் உள்ளத்தை தூய்மைப் படுத்துகின்றன.. மந்திரங்கள் ஞானிகள் வாக்கு என்றால் திருமுறைகள் நாயன்மார்கள் வாக்கு. இவை இரண்டையும் நாம் மாற்றம் செய்யாமல் இன்று வரை செய்து வருவதை பராயணம் அல்லது ஓதல் என்று சொல்லுவோம். வேதம் ஓதல் அல்லது வேத பாராயணம், திருமுறை ஓதல் அல்லது திருமுறை பாராயணம் என்று கூறுவதை காண்கிறோம். இவை எமக்கு உள்ளத்தை தூய்மையாக்கும் மருந்து போன்றவை.. மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி என்பார் அப்பர் சுவாமிகள். இங்கு தந்திரம் என்பது இறைவனுக்காக முறைப்படுத்தப் பட்ட புனித செயல்கள் அதாவது கிரியைகள் ஆகும்..

அங்கு பஞ்ச பூதம் எனப்படும் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்து வாழ்வாதாரங்கள் மூலமாக இறைவனுக்கு நன்றி செய்யும் மரபை ஆகமங்கள் ஏற்படுத்தியுள்ளன. ஐம்பூதங்களை இறைவன் படைத்து அவற்றின் மூலமாக எம்மை வாழ வைத்துள்ளான்.அவருக்கு நாம் பெரும் நன்றி சொல்லும் இடமே ஆலயம் ஆகும்.

நிலத்திற்கு பதிலாக நெய்வேத்தியங்கள் வைத்தல், வஸ்திர உபசாரம் செய்தல்,, நீருக்கு பதிலாக அபிஷேகம் செய்தல், நெருப்பிற்கு பதிலாக தீபம், விளக்கு, யாகம், ஆபரணங்கள் முதலியனவும், காற்றிற்கு உபசாரமாக தூபம், சாமரை, மந்திரம், மங்கள இசை, திருமுறை,சங்கு முதலியனவும், ஆகாயத்திற்குப் பதிலாக பூக்கள், மாலைகள் குடை முதலிய உபசாரங்களும்வழிபாடுகளில் நாம் பயன்படுத்தும் அதி உன்னத முறைகளாகும்.இவை பொதுவாக எல்லா ஆலயங்களிலும் காணும் அடிப்படை பொது முறையாகும்,

இதே போன்றுதான் நாம் ஆலய வழிபாட்டின் நிறைவிலும் பஞ்ச பூத அடையாளமாக பிரசாதங்களைப் பெறுகிறோம். தீயின் வடிவமாக விபூதியையும் நீரின் வடிவமாக தீர்த்தத்தையும் காற்றின் வடிவமாக மந்திரம். அல்லது அர்ச்சனை அல்லது இறைநாம உச்சரிப்பையும், ஆகாயத்தின் அம்சமாக பூவையும் நிலத்தின் அம்சமாக பழம் அல்லது பிரசாதங்களையும் பெற்றுக் கொள்கிறோம். ஆலய வழிபாடுகளில் ஒரு பழமும் பூவும் பெறுவதாலேயே நிலத்தில் இருந்து ஆகாயம் வரைக்கும்உள்ளஅனைத்து பூதங்களாலும் வழிபாடு செய்து பலனைப் பெறுகிறோம் என்பதே பொருள் ஆகும். நாம் பிரதக்ஷிணம் செய்தல், விழுந்து கும்பிடுதல், ஆலயத்தில் ஓரிடத்தில் அமர்ந்திருத்தல் போன்றவையும் நாம் உடலால் செய்யும் புறநிலை வழிபாட்டுக் கடமையாகும்.

எனவே ஆலய வழிபாடு என்பது எமது அன்றாடக் கடமைகளில் ஒன்று. அதேவேளை இறைவனுக்கு நன்றி கூறும் பண்பு. அத்துடன் எமது கன்ம வினைகளை தீர்க்கும் வழியுடன் ஆன்மீக முன்னேற்றத்தையும் தருகிறது, இறையருள் பெருகிட இன்ப ஆலயம் சென்று குறைவறப் பணியாற்றி கூடும் அன்பினால் முறைமரபு மாறாது முதல்வனைப் பூசித்து நிறைவுற வாழ்ந்து நாம் நிம்மதி பெறுவோமே. ●



# லண்டனில் அரங்கேறிய இளம் கலைஞரின் நாட்டிய வைபவம்

சென்ற வாரம் லண்டன் வோட்ட மீட் திரை அரங்கில “நாட்டிய வைபவம்” பரதநாட்டிய நிகழ்வு இடம் பெற்றது. தாயக துயர்துடைப்புக்கான நிதிசேகரிப்பு நிகழ்வான இது முற்றிலும் லண்டனில் பிறந்து வளர்ந்த கலைப்பட்டதாரிகளான இளைஞர் யுவதிகளை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. நடன ஆசிரியை ஸ்ரீமதி பிரேமினி விமலதாசாவின் மாணவி சைலஜா சுரேஷ் ஸ்ரீமதி உஷா இராகவனின் மாணவி பிரியங்கா கேசவன், ஸ்ரீமதி மேனகா ரவிராஜின் மாணவி ஜெயனி ஜெயபாலன் ஆகியோரே நிகழ்வின் நடனதாரகைகள்.

ஒரு மார்க்கத்தின் முழு அம்சங்களையும் பூரணமாக கொண்டு அரங்கேற்ற பாணியில் மூன்று மணி நேரமும் பாரவையாளர்களை நடனங்கள் பரவசப்படுத்தின. மூவரின் உச்சகட்ட பரதநாட்டிய திறமையும் வெளிக்கொணர்வதாக தனித்தனி நடனங்களும் கூட்டு நடனங்களும் அமைக்கப்பட்டிருந்தன. ஆசிரியை பிரேமினி விமலதாசா நட்டுவாங்கத்துடன் நிகழ்வை நெறிப்படுத்தினார். நாட்டிய பாடல்களை அகிலேஷ் சிறீகுமார் விஷ்ணுஜா நித்தியானந்தா ஆகியோர் திறம்பட பாடி சபையின் பாராட்டைப் பெற்றனர்.

பக்கவாத்திய கலைஞர்களாக மிருதங்கத்தை அபிராம் சகாதேவனும், வயலினுடன் நிருஷாந்த் சிவகுமாரனும், மேர்சிங்குடன் அர்ச்சுனா விஜயேந்திராவும், புல்லாங்குழலுடன்





ஹரிசன் மோகனராஜாவும் பங்கு பற்றினர். பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட ஸ்ரீமதி சுஜாதா சதீஷ் இளம் கலைஞர்களின் இந்த அற்ப்புதமான இசை நடன நிகழ்வு லண்டனில் பரதமும் பண்ணும் பரம்பரை பரம்பரையாக தொடரும் என்பதை உறுதிப்படுத்துவதாக தெரிவித்தார். மூத்த கலைஞர் காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி ஒவ்வொரு கலைஞர்களின் திறமைகளையும் குறித்து உரைத்து பாராட்டினார். மண்டபம் நிறைந்த சனத்திரள் கரகோஷங்கள் மூலம் தம்திருப்தியை வெளிப்படுத்தியது. நிகழ்வின் ஏற்பாட்டாளர் சைலஜா சுரேஷ் அனைவராலும் பாராட்டப்பட்டார். மொத்தத்தில் முழுமையான நிறைவை தந்த ஒரு கலை நிகழ்வு. ●

–ப.வை.ஜெ

– புகைப்படங்கள்: ஜானகி ஜெயராமன்

ஜீவாகுமாரன்



# வயலினும் மிருதங்கமும் இணைந்து அசத்திய அரங்கேற்றம்

ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனையும் மகளையும் சான்றோர்கள் எனக் கேட்ட தாயும் தந்தையும் உறவினரும் சபையோரும்!

ஆம் சமீபத்தில் இலண்டனில் உள்ள வாட்டர்மீற் (Watermeet) மண்டபத்தின் பிரகாசமாக ஒளியின் அளவு மெதுமெதுவாக குறைந்து கொண்டு செல்ல அரங்கின் ஒளி பிரகாசமானது. தம்பூராவுடன் ஒரு பிள்ளையார்....மிருதங்கத்துடன் ஒரு பிள்ளையார்...தபேலாவுடன் ஒரு பிள்ளையார் என மூன்று பிள்ளையார்கள் அரங்கத்தின் பின்புறத்தில் வீற்றிருக்க....

முன்னே வலது புறத்தில் முதல் வணக்கத்துக்குரிய தெய்வங்கள் வரிசையில் அரங்கேற்ற நாயகி ஜனுஷாநிரஞ்சன் - நாயகன் அபிஷகன் நிரஞ்சனின் தாத்தா பாட்டிகள் கண்ணாடிச் சட்டத்தினுள் மாலையுடன் வீற்றிருந்து ஆசி வழங்கிக் கொண்டிருந்தது மனதுக்கு நிறைவாய் இருந்தது.

தொலைக்காட்சி வாயிலாக நன்கு அறியப்பட்ட யோகேஸ்தினேஷ், பிரஷாந்தியின் தமிழ் ஆங்கில அறிவிப்புடனும் இறைவணக்கத்துடன் வயலின் மிருதங்க அரங்கேற்றம் ஆரம்பமானது.

கடம் : உலகம் முழுக்க நன்கு அறியப்பட்டவரும் மறைந்த மாமேதை டாக்டர் பாலமுரளி கிருஷ்ணா உட்பட பல பிரபல்ய இசைக்கலைஞர்களுக்கு பக்க வாத்தியக் கலைஞராக திகழ்ந்த டாக்டர் எஸ்.கார்த்திக்.

மோர்சிங்: திரு.என்.சுந்தர் இருவரும் மறைந்த மாமேதை டாக்டர் பாலமுரளி கிருஷ்ணா, குன்னக்குடி வைத்தியநாதன், நித்தியஸ்ரீ, பம்பாய் ஜெயஸ்ரீ, சுதா ரகுநாதன் போன்ற இசை மேதைகளுக்கு பக்க வாத்தியக் கலைஞராக இருந்தவர்... இருந்து கொண்டிருப்பவர்.

கஞ்சீரா டாக்டர் அபிராம் சகாதேவன். இசைக்குடும்பத்தில் பிறந்து இங்கிலாந்தில் டாக்டராக கடமையாற்றிக் கொண்டிருக்கும் இவர் இங்கிலாந்தில் பல கச்சேரிகளில் இசை ராஜாங்கம் நிகழ்த்தியவர்.

வயலின்குரு: ஸ்ரீநாகராஜீ. குருகுலக்கல்வி வழிவந்து கடந்த 31 வருடங்களுக்கு மேலாக பயிற்றுவிக்கும் துறையிலும் பல பிரபல இசைக்கச்சேரிகளிலும் மிளிர்ந்து கொண்டிருப்பவர். இலண்டன் கலைக்கல்லூரியில் கடந்த 13 ஆண்டுகளாக நிரந்தர ஆசிரியராயும் பல இசைப்பரீட்சைகளின் நடுவராயும் தனது இசைப்பயணத்தை நடத்திக் கொண்டிப்பவர்.

மிருதங்ககுரு: ஸ்ரீகலைமாமணி ஜெயராமன் பத்மநாதன் தமிழ்நாட்டு அரசாங்கம் இவருக்கு கலைமாமணி பட்டம் அளித்துக் கௌரவித்ததை விட இவரின் இசைப்பயணத்திற்கு வேறு அறிமுகம் தேவையில்லை தம்பூரா கலைஞர்களாக செல்வி ரிதுனா கலாரஞ்சனும் துஷானி தர்மராசாவும் இத்தனை கலைஞர்களும் சுற்றியிருக்க நடுவே அமர்ந்திருந்த ஜனுஷாவின் வயலினில் இருந்து எழுந்த வயலின் இசையும் அதனுடன் இணைந்த அபிஷேகனின் மிருதங்க ஒலியும் சபையை ஆக்கிரமிக்க ஆரம்பித்தது.

இவர்கள் இடைவேளை வரை எட்டு வகையான இசை வடிவங்களை வழங்கிக் கொண்டிருக்க...ஒவ்வொன்றின் முடிவிலும் அரங்கம் சபையின் கை தட்டலால் நிறைந்தது.

கண்களைத் திறந்து கொண்டு ரசித்தால் தான் அங்கே இரண்டு இளம் இசைக்கலைஞர்கள் இருப்பது தெரிந்தது.

கண்களை மூடிக் கொண்டு ரசித்தால் இரண்டு இசை ஜாம்பவான்களின் திறமை வெளிப்பட்டுக்கொண்டு இருந்தது.

இசைக்கும் வயதில்லை. இசைக்கருவிகளுக்கும் வயதில்லை என எங்கோ படித்தது ஞாபகத்திற்கு வந்தது.

சுமார் ஒன்றே முக்கால் மணி நேரத்தில் எவ்வாறு இடைவேளை வந்தது என்றே தெரியவில்லை.

அதுவரை நடைபெற்ற இசைக்கச்சேரியின் அதி





உச்சக்கட்டமாக அமைந்தது 'வாத்தியக்கலைஞர்களின் தனி ஆவர்த்தனமும்' அதில் அபிஷகன் நடாத்திய மிருதங்கராஜாங்கமும்தான்.

"கலக்கினான் எங்கள் பிள்ளை" என்ற வட்டார வழக்கினால் இதனை வர்ணிப்பதனை தவிர எனக்கு வார்த்தைகள் கிடைக்கவில்லை.

மற்ற மூவரும் இசை ஜாம்பவான்கள் இவனோ அரங்கேற்றம் காணும் சின்னக் குழந்தை. சரிக்கு சரியாக வாசித்தான். எங்கும் எந்தப் பிசிறும் இல்லை.

இவனை மகனாகப் பெறுவதற்கு பெற்றவர்கள் என்ன புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இடைவேளையில் சிற்றுண்டி அருந்த மண்டபத்திற்கு வெளியே சென்ற என்னைப் போலவே மற்றைப் பெற்றோரும் இருந்திருப்பார்கள் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை.

மணிக்கூட்டின் சின்ன முள்ளை கோடை காலத்தில் முன்னே ஒரு மணி நேரமும் குளிர் காலத்தில் பின்னே ஒரு மணி நேரமும் விட்டு விட்டு நாங்களே அதற்குப் பின்னே ஓடிக் கொண்டிருக்கும் ஐரோப்பிய சூழலில் ஒரு இசை அரங்கேற்றத்திற்கு இவ்வளவு கூட்டமா எனப் பிரமித்த பொழுது தான் எனக்கு ஒரு உண்மை தெரிய வந்தது.

இங்கிலாந்தில் தமிழ் கல்வி வளர்ப்பதிலும் இசைக்கல்வி வளர்ப்பதிலும் வெம்பிளி தமிழ் பாடசாலையும் கீழைத்தேய நுண்கலைப்பாடசாலையும் *Oriental Fine Arts Academy of London, Tamil School in Wembley* ஒன்றுடன் ஒன்று கை கோர்த்து செல்கின்றது என்றும்... ஐந்து வயதில் அரிசியில்



'அ' 'ஆ' கற்ற கையுடனே இந்த இரண்டு குழந்தைகளுக்கு இந்தப் பாடசாலை தமிழ் மொழிக்கல்வி - வாய்ப்பாட்டு இசைக்கருவி என்ற நாற்றுகளை நற்றுவிட்டார்கள் என்றும்... அதுவே இந்த 15 ஆண்டுகளில் வளர்ந்து செழித்து மற்றவர்களுக்கு வழிகாட்டி மரமாக நிமிர்ந்து நிற்கின்றது என்றும்... அங்கிருந்த பார்வையாளர்களின் பிள்ளைகளும் பெற்றோர்களம் இவர்களுடனேயே இத்தனை வருடம் கைகோர்த்து நடந்தவர்கள் என்றும் அறிந்த பொழுது வியந்து போனேன். சிற்றுண்டிகள் குளிர்பானங்கள் சகிதம் அறிமுமான பல உறவுகளுடன் சுகவிசாரிப்புகள் என 15-20 நிமிடம் ஓடி விட மீண்டும் சபை கூடியது.

அங்குதான் அதிசயம் காத்திருந்தது.

இரண்டு கதாநாயகர்களின் திரைப்படங்களில் இடைவேளைக்கு முதல் ஒரு கதாநாயகன் பிரகாசித்தால் இடைவேளைக்குப் பின் மற்றக் கதாநாயகன் பிரகாசிப்பது போல படத்தை வடிவமைத்திருப்பார்கள்.

அவ்வாறு இப்போது ஜனுசாவின் ராகம் - தானம் பல்லவி அமைந்திருந்தது. முன் பகுதியில் மற்ற இசைக்கருவிகளுடன் இணைந்து வயலின் வாசித்த ஜனுஷா இப்பொழுது தனியே - தன்னையும் வயலினின் இசையையும் நம்பி சுமார் பதினைந்து நிமிடங்களுக்கு மேல்... சபையை கட்டிப்போட்டு இருந்தாள்.

இடைக்கிடை சபையினர் தம்மையும் மறந்து கரகோஷம் செய்தார்கள்.

இதுதான் இந்த அரங்கேற்றத்தில் ஜனுஷாவின் உச்சக்கட்ட வாசிப்பு எனச் சொல்லலாம்.

தொடர்ந்து இசை ரசிகர்களுக்கு நன்கு அறிமுகமான இசைப்பாடல்கள்... அதிலும் குறிப்பாக இலங்கையைச் சேர்ந்த அதுவும் நான் கற்ற, மானி இந்துவில் எனக்கே சங்கீத ஆசிரியராக விளங்கிய மாமேதை வீரமணி ஐயரின் கற்பகவல்லியின் பொற்பதங்கள் பிடித்தேன். என்பதை வயலின் கச்சேரியில் இணைத்துக் கொண்ட அனைவருக்கும் தனிப்பட்ட முறையில் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


தொடர்ந்து இசைகச்சேரியின் கிளைமாக்ஸான தில்லானா வந்தபோது மீண்டும் இரண்டு சகோதரர்களும் சக இசைக்கலைஞர்களுடன் இணைந்து சபையினரை கைத்தாளம் போடவும் தலையாட்டவும் வைத்தனர்.

தில்லானாவைத் தொடர்ந்து சம்பிரதாயமான கௌரவிப்புகளும் வாழ்த்துகளும் நடந்து கொண்டிருந்த பொழுது பிரதம விருந்தினரின் நடுநிலை விமர்சனம் எவ்வாறு இருக்கப் போகின்றது என்ற சிறிய படபடப்பு என்னுள் இருந்து கொண்டு இருந்தது.

சாதாரண இசை ரசிகனின் இசை ரசிப்புக்கும் இசை ஜாம்பவான்களாக விளங்கும் பிரதம விருந்தினரின் ரசிப்புக்கும் வேறுபாடு வருவதற்கு பல சந்தர்ப்பங்கள் உண்டு. ஆனால், அவரின் நடுநிலையான முடிவும் எனது இசை ரசிப்பும் ஒன்றாகப் பயணப்பட்ட பொழுது மீண்டும் பெற்றோரையும் அந்த இரண்டு இளம் கலைஞர்களையும் மனதார மனத்தினுள் வாழ்த்திக் கொண்டேன்.

மீண்டும் இறுதியாக எஞ்சியிருந்த இரண்டு உருப்படிகளான முத்தித்தரு பக்தித்திரு. திருப்புகழுடனும் மங்களத்துடனும் வயலினும் மிருதங்கமும் இணைந்து அனைவரையும் வழி அனுப்பி வைத்தன.

இந்த அரங்கேற்றம் இவர்களின் இசைப்பயணத்தில் முதல்படியாக அமைய... தொடர்ந்தும் பல வெற்றிகளை இவர்கள் காண வேண்டும் என்று வாழ்த்தி விடை பெற்றேன்.



திருக்குறள் செம்மல் ந.மணிமொழியன்

# திருக்குறளும் கீதையும்



மணிமொழியனுடன் விநாயக மிஷன் சண்முக சுந்தரம் தம்பதி

பொது நூல்களின் வரிசையில் முன்னிடம் பெறுபவை இராமாயணமும் மகாபாரதமும், திருக்குறளும் ஆகும். இராமாயணம்- இனியதொரு நீதிநூல்; மகாபாரதம் விரிந்ததொரு சமூகச்சாத்திரம். திருக்குறள் ஓர் உலகப்பொதுமறை. மகாபாரதத்தை அருளிய வியாசர், ஏறத்தாழ இலட்சம் சுலோகங்களில் எண்ணிலாச் சித்திரங்களையும் வரலாற்று நடப்புகளையும் பேராற்றலுடன் வருணித்துள்ளார்.

மாபெரும் தங்கச் சுரங்கம் போலவும். பரந்துபட்டதொரு கானகம் போலவும் அமைந்துள்ள மகாபாரதத்தின் உயிர்நிலையாக இருப்பது - கீதை பல்வேறு தத்துவக்கடர்களும் உபதேச மணிகளும் இக்கீதையிலிருந்து பிரவகித்துள்ளன. தரும ஞானக் கருவூலமான இக்கீதை, மகாபாரதத்தில் ஒரு சிறு அங்கமே ஆயினும், இந்து சமய சாத்திரத்தின் மணிமுடியாகவே அது திகழுகிறது.

கீதையை- கிருஷ்ண பகவான்- குருசேத்திரப் போர் நடுவே அர்ச்சுனனுக்கு அருளினார். போரில் தன் தாயாதிகளுடன் மோதி நிற்க வேண்டியதொரு இடர்ப்பாட்டிற்கு உள்ளான அர்ச்சுனனின் கலக்கத்தை அகற்றி அவனைப் போரில் மனஉறுதியோடு ஊன்றி நிற்கச் செய்வதற்காகக் கீதை அருளப்பட்டது எனக் கருதப்படுகிறது. என்றாலும், கீதை அருளப்பட்டதன் முழுநோக்கமும் இதில்லை என்பதை அதனை ஆழ்ந்து கற்கும் எவரும் எளிதில் அறிய முடியும். கோழைத்தனத்தை அகற்றுதல் எனும் எளியதொரு நோக்கத்தை விட, வாழ்வுப் பேருண்மைகளை உணர்த்தி, மக்களின் உள்ளத்தை மூடும் மேகப்படலங்களை அகற்றி, மன உறுதியோடும், கடமைப்பற்றோடும் வாழ்ந்திட வழிகாட்டுவதே அதன் விழுமிய நோக்கமாகும்.

**"அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை**
**எண்ணி இடத்தான் செயின் (497)**
**"கடன் என்ப நல்லவை யெல்லாம்"**

ஞான வாழ்வின் கலைக்களஞ்சியமான கீதைக்கு நிகராக, தமிழ் மண்ணில் மலர்ந்த வாழ்க்கை நூல் திருக்குறள். வாழ்க்கைப் போரில் அவரவர் சந்திக்கும் சிக்கல்களுக்கெல்லாம் எக்காலத்திற்கும் பொருந்தும் வகையில் தீர்வு நல்கிக் காலத்தை வென்று நிற்பது திருக்குறளின் பெருஞ்சிறப்பாகும். கீதை- திருக்குறள் எனும் இரண்டிலும் பொதிந்துள்ள சில பொதுக்கூறுகளை மட்டும் சுருக்கமாக நம் நினைவுப் படலத்திற்குக் கொணர்வோம்.

திருக்குறள் நடுநிலைப் பண்போடு உலகிற்கே அறம் உணர்த்திய திருமறையாகவும் பொதுமறையாகவும் திகழ்வது, உலக மக்கள் அனைவரின் நல்வாழ்விற்கும் பெருவாழ்விற்கும் ஒப்பில்லா பொதுமை நலம் தருவது- உயர் நாகரிகமுடையதாய் இனம், நாடு, மொழி, சமயம், காலம் இவையெல்லாம் கடந்த தனக்குவமையில்லா முதல் நூலாக விளங்குவது. வேறுபடும் சமயங்கள் கூட தமதென உரிமை கொண்டாடிப் போற்றிப் பாராட்டிடும் புகழுடன் திகழ்வது.

மகாபாரதத்தில் ஒரு பக்கம் ஆறு பர்வங்களும், மறுபக்கம் பன்னிரண்டு பர்வங்களும் அமைந்திருக்க அவற்றினிடையே நந்தா விளக்கெனக் கீதை இலங்குகிறது.

கீதையின் முதல் அதிகாரம்- அர்ச்சுனனின் மனப்போராட்டத்தைக் குறிக்கின்றது அவனது பரிவுணர்ச்சி இதில் மேலோங்கி நிற்கிறது. இரண்டாம் அதிகாரம்- உடலெடுத்த ஆன்மா அழிவில்லாதது எனும் சாங்கிய யோக அடிப்படையை எடுத்துரைக்கிறது; சுயதர்ம நடபடி இதில் மிகுதியும் வலியுறுத்தப்படுகிறது. மூன்றாம் அதிகாரம்- கர்மயோகத்தைக் கற்பிக்கிறது. நான்காம் அதிகாரம்- நேர்மையான சிந்தையின் அவசியத்தைப் போற்றுகிறது. அதர்மம் ஓங்கித் தர்மம் குன்றும் போதெல்லாம் கடவுள் அவதாரம் எடுப்பார் எனும் 'சம்பவாமி யுகே யுகே' வாசகம் இந்த அதிகாரத்தின் மணிமுடியாக நிற்கிறது. "எந்த வழியில் அனுகினும் அந்த வழியில் நான் அன்பு காட்டுகிறேன்". எனும் தத்துவ தரிசனங்கள் இப்பகுதியின் சிறப்பு அம்சங்கள். ஐந்தாம் அதிகாரம், ஒருவன் ஞானத்தை உணர்ந்து, தன் கர்மங்களைக் கடந்து நிலைபெற வேண்டுமென்ற கர்ம சந்நியாச யோகத்தைக் கற்பிக்கிறது.

ஆறாம் அதிகாரம்- யோகத்தின் குறிக்கோள் பரம்பொருள் அனுபவம் என்பதை எடுத்துரைக்கிறது. எல்லா உயிர்களையும் ஆத்மாவினுள் காணும்- சம தரிசனத்தை, "காக்கைச் சிறகினிலே நந்தலாலா- நின்றன், கரிய நிறம் தோன்றுதையா நந்தலாலா" எனப் பாரதிக் கவிஞன் கண்டுணர்ந்த மெய் அனுபவத்தை நமக்குப் புலப்படுத்துகிறது.

ஏழாம் அதிகாரம்- ஞான யோகத்தையும், எட்டாம் அதிகாரம்- பிரம்ம யோகத்தையும் விளக்குகையில், ஒன்பதாம் அதிகாரம்- 'அனைத்தும் என்னுள் உயிர் பிழைத்திருப்பன' எது செய்தாலும் எனக்காக நல்கிவிடு- எனும் ராஜயோகத்தை விளம்புகிறது. பத்தாம் அதிகாரம்- பரம் பொருளின் புகழையும் மாட்சியையும் விண்டுரைக்கிறது. பதினொன்றாம் அதிகாரம் விசுவதரிசன யோகமாக, அகிலத்துக்கும் நீயே தந்தை எனத்தன்னையே அர்ப்பணித்து வணங்கும் தொழுநிலையைக் காட்டுகிறது.

பன்னிரண்டாம் அதிகாரம்- பக்தியோகத்தையும் பதின்மூன்றாம் அதிகாரம்- அறியப்படும் உண்மைப் பொருள் பற்றியும் பேசுகின்றன பதினான்காம் அதிகாரம்- குணத்திரய விவாகயோகம். பதினைந்து புருஷோத்தம யோகம். "மேலே வேரும் கீழே கிளைகளும் உள்ள நித்திய அரசமரம்" இதில் சுட்டப்படுகிறது. பதினாறாம் அதிகாரம்- விவாகயோகம். பதினேழு "ஓம் தத் சத்" (ஓம்- அது உனது) எனும் பிரம்மனைச் சுட்டும் அடையாள மந்திரத்தைக் காட்டுகிறது. பதினெட்டாம் இறுதி அதிகாரம் - ஒருவன் பிரம நிலைக்கு உயரும் அமர நிலையைச் சுட்டுகிறது.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்"**

அமரநிலை கூட்டிப் பேசும் கீதையைப் போலவே, திருக்குறளும்- வானகம் இங்கு தென்படச் செய்யும் வழிகளை விதந்தோதுகிறது, "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்- வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்" என வையத்து மனிதரெல்லாம் வாழ்வாங்கு வாழ்ந்திட வரம்பு கோலித் தருகிறது. எனவே தான் வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்டதாகத் தமிழ் நாட்டைப் பாரதிப் புலவன் பாடிப் பரவினான். தாம்யாத்த நூலுக்குச் சிறப்பீட்டித் தந்துள்ளார் வள்ளுவர். கீதை போல, உலகிற்கென ஒரு நூலை அளித்த பெருமையை இந்தத் தமிழ் மண்ணுக்கு அவர் அளித்துள்ளார்.

'உலகம் ஒரு குலம்' என்பதே திருக்குறளின் உயிரோட்டம். உலகம் ஒரு குலமாக விளங்க வேண்டுமெனில், அந்த உயிரோட்டத்திற்கு, அன்பு எனும் குருதியோட்டம் நிலையாக இயங்குதல் வேண்டும். "அன்பின் வழியது உயிர்நிலை" என்பதே வள்ளுவத்தின் நிலையான குருதியோட்டம், அன்பினை வளர்த்து வாழ்வதே மக்கட் பிறவியின் நோக்கம்; வாழ்க்கைக் கலையின் ஆக்கம். பண்பும் பயனும் உடைய இல்வாழ்க்கையினைத் தேர்ந்து தெளிந்து நடந்திட வலியுறுத்துவதே வள்ளுவர் நெறி. வள்ளுவர் நெறிக்கு அடிப்படை அறம். மனத்துக்கண் மாசிலனாக வாழ்வதே அனைத்தறன்; அகிலத்து அறன். இன்று உலகில் மண்டியுள்ள அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் என்பன எல்லாம் இழுக்கானவை; அற ஒழுக்கத்திற்குப் புறம்பானவை.

திருவள்ளுவர் ஆட்சி நெறியிலும் பொருளாதார முறையிலும் பொதுமை அறமே பேசுகிறார். மன்னராட்சி விளங்கிய காலத்தே எழுதப்பட்டாலும் மக்களாட்சி துலங்கும் காலங்களுக்கும் பொருந்தும் வகையிலேயே அவர் ஆழ்ந்த தொலைநோக்கோடு எழுதியுள்ளார். பொதுமையும் மனத்தூய்மையும் இரு கண்களாக அமைய வாழ்வரங்கு முழுமைக்கும் அவர் வழிகாட்டியுள்ளார். ஒப்புரவு, ஈகை, புகழ், இன்னா செய்யாமை, நட்பு, குடிமை முதலிய எண்ணற்ற சிந்தனைத் தருக்களை நிறுவி அவ்வரங்கு முழுமைக்கும் நிழல் பரப்பியுள்ளார்.

பலர்க்கும் பல வகையாகப் பயன்படும் சிறப்புடைய திருக்குறளை, இலக்கிய நூலாகவும் அறவழிச் சுரங்கமாகவும் இலங்கும் திருக்குறளை பகவத்கீதையோடு ஒப்பிட்டுச் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

திருக்குறளும், கீதையும் வாழ்வில் முழு நிறைவு நூல்களாகும். மனிதனை நிறை மனிதனாக்குவது இரு நூல்களின் அடிப்படையாகும்.

வாழ்விற்கு வழிகாட்டியும், எக்காலத்திலும், எல்லோருக்கும் முரணின்றி அறிவொளி பரப்பி நன்மையும் பயனும் நல்கியும் பெருமையுற்று நிலைத்து நிற்பவை. உண்மை நிறைந்து, அறிவுக்கு ஏற்புடையதாய் மறைமொழிகளாக மனிதனை நிறைவுபடுத்தும் நிறைமொழிகளாக காலத்தையும் வென்று வாழ்பவை.

**"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து**
**மறைமொழி காட்டி விடும்" (குறள்)**

தூய, அன்பையும், ஞாயிறு போன்ற அறியாமை இருளகற்றி நலம் செய்யும் தெளிந்த செயல் அறிவையும், உறுதியான ஆற்றலையும், ஒருங்கே அமையப் பெற்றவன் நிறை மனிதன் ஆகின்றான் என்று கீதை இயம்புகிறது.

கருணையுடன் பிறர் துன்பம் கண்டு இரங்கி துன்பம் நீக்கி இன்பம் நல்க வேண்டும். அருள் கொண்டு தொண்டு செய்து வாழும் போது தான் நிறை நிலை, முழுநிலை, தெய்வநிலை பெற இயலும். பல வகையால் ஆராய்ந்தாலும், அன்பும் கருணையும் தான் துணை. ஆகவே "நல்லாற்றின் நாடி அருள் ஆள்க பல்லாற்றான் தேரினும் அஃதே துணை" என்பார் வள்ளுவர். அறிவு பெற்றதன் பயனே பிறவுயிர்கள் துன்பம் கண்டு இரங்கி அன்பு கொண்டு நலம் செய்வது தான். அதுவன்றி பெற்ற அறிவால் பயனுண்டோ? என்று வினவுவார் வள்ளுவர்.

**"அறிவினால் ஆகுவதுண்டோ பிறிதின் நோய்**
**தன்நோய் போல் போற்றாக்கடை" - குறள்**

"வலிவு படைத்தோன் வாழ்வுக்குரியவன்" என்று கூறுகிறது கீதை. "உள்ளம் உடைமை உடைமை" "எண்ணிய எண்ணியாங்கு எய்துவர்; எண்ணியா திண்ணியராகப் பெறின்" என்று உள்ள வலிவையும், பேராற்றலையும் வியந்து பேசுவார் வள்ளுவர். "எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத் திட்பம் வேண்டாரை வேண்டாது உலகு" என்பார் வள்ளுவர். பேராற்றல் படைத்த மனிதன் தன் ஆற்றலை உணர வேண்டும் "அரிய என்று ஆகாத இல்லை. ஆதலின் சிறியவராய், புன்மையராய் சீர் குன்றாமல், பெரியோராய் "செயற்கரிய செயல் செய்ய வேண்டும்".

மனித உயிர்களை அன்போடு நேசித்து "அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்?" என்றுணர்ந்து, என்பும் பிறர்க்கு உரியதாக்கி அன்புற்று வாழ்க! கொத்தாக மலர்ந்து மணம் வீசும் மலர்கள் போல, ஒளி வீசும் பகலவன் போல, அறிவு மணம் மலர்க; அறிவாற்றல் நிறைக- நல்லவையெல்லாம் கடனாகக் கொண்டு கடனறிந்து சான்றாண்மை மேற்கொள்க!

கீதையும் திருக்குறளும் வாழ்விற்கு நம்பிக்கை அளிப்பவை, வாழ்க்கையில் நேரிடும் இடர்கள் துன்பங்கள் நீக்குபவை. அச்சம் தவிர்த்து, மோகம் நீக்கி, மயக்கம் தவிர்த்து, மும்மலம் நீக்கி, கடமையை உணர்த்தி, செயலினைப் போற்றி, மனித குலத்தை மாண்புறச் செய்து வானுறையும் தெய்வத்திற்கு இணையாய் அமரர்களாய் வாழ வழி வகுப்பவை.

**கீதை காட்டும் பாதையும்,**
**வள்ளுவர் காட்டும் வழியும்,**
**ஒன்றோடு ஒன்று,**
**இசைந்தவை; இணைந்தவை.**
**கீதையில் குறளையும்**
**குறளில் கீதையும்**
**காண்கின்றோம்.**

23ம் பக்கத் தொடர்ச்சி

சீராகவும், சிறப்பாகவும் சபையோரால் வரவேற்கப்பட்டது. செல்வி. அனனியா ரஜீந்திரகுமாரின் தமிழ்ப்பேச்சு, உச்சரிப்பு, பொருள் உணர்ந்து பேசிய இலாவகம், அனனியாவின் நாவன்மையை வர்ணிக்க தமிழில் வார்த்தைகளைத் தேடித்தான் எழுதவேண்டும்.

நாற்பதாம் ஆண்டிற்கான நினைவலைகள் அத்துடன் ஓயவில்லை. தொடர்ந்து வந்த சாதனைகள் பாராட்டும் நிகழ்வும் பாராட்டத்தக்க விடயமே. துமிழ் மொழி, நுண்கலைகளைப் படித்துப் பரீட்சை எழுதிய பின்னரும் கூட, அதனைத் தொடர்ந்து தம்மால் இயன்றவரை நடைமுறைப்படுத்தி வருவதோடு, தாம் பயின்ற நிலையங்களில் உதவியாளர்களாகவும், தமிழ் மொழியில் பேச்சுத்திறமையுள்ளவர்களாகவும் இருக்கும் இளையோர்களை இனம் கண்டு, அவர்களில் நாற்பது இளையோரைத் தெரிவு செய்து, அவர்களுக்கு வாழ்த்துப் பத்திரமும், கேடயமும் வழங்கிப் பெருமைப்படுத்தியது சங்கம். நம் இளையோர் சிறுவயதில் கற்கும் தாய்மொழி மற்றும் நுண்கலைப் பாடங்களை தேர்வுகள் எழுதியபின்னரோ அல்லது பல்கலைக்கழகம் சென்றபின்னரோ தொடர்ந்து கடைப்பிடிக்கும் நிலை அருகி வருவது கண்கூடு. அவர்களது எதிர்காலப் படிப்பு, கடமை, பொறுப்பு, தொழில் வாய்ப்புக்கள் இப்படியான நடைமுறைச்சிக்கல்களே இதற்கான காரணம். எமது மொழி, மதம், கலை கலாச்சாரப் பண்பாடுகளை எமது இளம் சந்ததியினர் தொடராவிடில், எமது தமிழ்ச் சமூகம் தமது முகவரியைத் தொலைத்துவிடக் கூடிய அபாயகரமான நிலை உருவாகும் என்பதை நாம் அனைவருமே அறிவோம். சைவ முன்னேற்றச் சங்கம் இந்த நாற்பது இளையோர்களை இனம் கண்டு மதிப்பளித்து ஊக்குவித்தமை, இனிவரும் இளையதலைமுறையினருக்கு ஒரு முன்மாதிரியாகவும் இருப்பதோடு, எம் சமூகத்தின் நீடித்த ஆயுளுக்கும் உந்துகோலாக இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்கமுடியாது. நாற்பதாவது ஆண்டின் பதிவுகளில் இடம் பெறக்கூடிய சிறப்பான அம்சம்.

தன்னலமற்ற சேவை மனப்பான்மை, கடின உழைப்பு, தாம் பிறந்த சமூகத்தின் வளர்ச்சி மேல் கொண்ட பற்று, தமிழ் மொழியும், சைவமும் என்றென்றும் தழைத்தோங்கி வளர்பிறையென வளரவேண்டுமென்ற பேரவா, இப்படியான சிறப்பான கொள்கைகளுடன் ஒரே குடும்பமாகத் தொய்வின்றி நாற்பது வருடங்கள் சிறுகச்சிறுக கட்டிய இராஜகோபுரம்தான் இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கம். இச்சங்கத்தின் மாணிக்க விழாவிற்குத் தலைமை அதிதியாக சமுகமளித்துச் சிறப்பித்த பெரியவர், தமிழ் ஈழத்திலிருந்து வருகை தந்த சிவபூமி அறக்கட்டளையின் தாபகர், தலைவர்




டாக்டர் திரு. ஆறுதிருமுருகன் அவர்கள். செஞ்சொற் செல்வர் எனப் போற்றப்படும் டாக்டர் ஆறு திருமுருகன் அவர்கள் சிவபூமி முதியோர் இல்லம் (தொல்புரம்,சுழிபுரம், 81(முதியோர்) சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை (கனகபுரம், கிளிநொச்சி 41 மாணவர்) சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை (கோண்டாவில் 321 மாணவர்) மற்றும் கீரிமலை சிவபூமி மடம், கீரிமலை சிவபூமி யாத்திரிகர் மடம், குப்பிளான் சிவபூமி ஆச்சிரமம், பளை இயக்கச்சி சிவபூமி கோட்டம் ஆகிய நிறுவனங்களை அறநிலை தவறாது நிர்வகித்து வருகின்றார். மனித நேயம் மிக்க இந்த நல்லவர் சைவமுன்னேற்றச் சங்கத்தின் நாற்பதாண்டு விழாவிற்குத் தலைமை அதிதியாக வந்தமை பெருமைக்குரிய விடயம்.


டாக்டர் ஆறு திரு முருகன் அவர்கள் தனது உரையில், குறிப்பாக சங்கத்தினர் ஒருங்கிணைந்து செயல்படும்



முறைபற்றிப் பேசினார். விழா மண்டப வாயிலில் இருந்து மேடை வரை பழைய புதிய சங்கத்தலைவர்கள் மும்முரமாகக் கடமையில் ஈடுபட்டிருந்ததை தான் கண்டு ஆச்சரியப்பட்டதாகக் கூறினார். புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும், எமது மொழி, பண்பாடு, கலை கலாச்சார விழுமியங்களை நடனங்கள், நாடகங்கள் மூலம் வெளிக்கொணர்ந்து, எம் மண்ணின் வாசனையை இங்கும் வீசச் செய்யும் குழந்தைகள், இளையோரையும் அவர்களைப் பயிற்றுவிப்போரையும் பாராட்டி மகிழ்ந்தார். குழந்தை அனினியாவின் பேச்சு அவரைப் பிரமிக்க வைத்ததனை அவரது பேச்சிலிருந்து அறியமுடிந்தது. பொதுவாக மூத்தோர்கள் தமது நலக்குறைவு பற்றிப் பேசுவதையே தான் கேட்டிருப்பதாயும,; இங்கு மூத்தோர்கள் நலமாக நடனமணிகளாக மேடையேறியதை வியந்து வாழ்த்தினார். மூப்புடன் ஆதரவற்று, அனாதைகளாக நின்ற, நிற்கின்ற மூத்தோர்மீது அன்பு காட்டி அரவணைக்கும் நிறுவனராக மட்டுமன்றி, தேவை ஏற்படும்போதெல்லாம் அவர்களுக்குத் தவப்புதல்வனாக முன்வந்து அவர்கட்கான அந்திமக்கிரியைகளையும் செய்து அவர்களை கௌரவமாக வழியனுப்பி வைக்கும் திரு.ஆறு திருமுருகன் அவர்கள், மூத்தோரைப் பொக்கிசமாகப் போற்றுபவர், மூத்தோர் நலன் விரும்புபவர். சைவமுன்னேற்றச் சங்கம் யோகாநிலையத்தினர் நிதியில் கட்டப்பட்ட, சிவபூமி முதியோர் இல்லத்தில் அமைந்துள்ள 'திரை அரங்கு' அங்கு வதியும் மூத்தோர் தமது கவலைகளை மறந்து சந்தோசமாக வாழ பெருமளவில் உதவுவதையும் நன்றியுடன் மொழிந்தார். டாக்டர் ஆறுதிருமுருகன் அவர்களது பேச்சினைச் செவிமடுக்க ஆவலோடு காத்திருந்த சபையோரும், அவரது பேச்சினைத் தமை மறந்து ரசித்து மகிழ்ந்தனர்.

சைவமுன்னேற்றச் சங்கமெனும் பெருந்தேரை தம் கண்முன்னே நிறுத்தி, தாபகர், தலைவர், உபதலைவர், அறங்காவலர், பொறுப்பாளர், பொதுச்செயலாளர், கணக்காளர், அங்கத்தவர் எனப் பல பதவிகளில் மாறிமாறி செயல்பட்டபோதும் 1977இல் தம் நினைவில் கொண்ட கருவை உருவாக்குவதில் ஒரு கணமேனும் தவறாது,நாற்பது வருடங்களாகச் சங்கத்தின் பின்னால் கைகோர்த்து நின்று, சங்கம் முன் நோக்கி நகர உந்துசோலாகச் செயல்படும் அத்தனை சங்க அங்கத்தவர்களும் போற்றப்படவேண்டியவர்களே. நாணலாக வளைந்து இன்று நானிலம் போற்ற வாழும் இலண்டன் சைவமுன்னேற்றச் சங்கம் ஆல் போல் தளைத்து, அறுகு போல் வேரூன்றி, காலமுள்ளவரை விழாக்கோலம் காணத் தமிழர் நாம் இணைந்து வாழ்த்துவோம். ●

# 'ஈழநாடு' கோபு அமரரானார்



தாயகத்தின் தமிழ் பத்திரிகை உலகில், மூத்தவர்களுக்கு மூத்தவராக இருந்த கோபு என்ற எஸ்.எம். கோபாலரத்தினம், மட்டக்களப்பு மண்ணில் அமரரானார். அவருக்கு வயது 87.

இருபது வயதில் 'வீரகேசரி'யில் சேர்ந்து, பின் அங்கு உதவி ஆசிரியராகப் பணியாற்றினார். இவர் காலத்தில், பிரதம ஆசிரியராக இருந்த இந்தியரான கே.பி. ஹரன் அங்கிருந்து விலகி, யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான 'ஈழநாடு' தினசரிக்குப் பிரதம ஆசிரியராக அமர்த்தப்பட்டார். அவரே தனக்குக் கீழ் அங்கு பணியாற்றிய 'கோபு'வையும் 'ஈழநாடு'வில் செய்தி ஆசிரியராக நியமித்தார்.

நீண்ட காலம் 'ஈழநாடு'வில் பணியாற்றிய கோபு யாழ். 'ஈழமுரசு' மட்டக்களப்பு 'தினக்கதிர்' ஆகிய தினசரிகளில் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

'ஜுனியர் விகடன்' இதழில் இவர் தொடராக எழுதிய 'ஈழமண்ணில் ஓர் இந்தியச் சிறை' உலகத் தமிழ் மக்களால் விரும்பி வாசிக்கப்பட்டது. 'ஈழமுரசு' பத்திரிகையில் இருந்த காலத்தில், அமைதி காக்கச் சென்ற இந்திய ராணுவம் இவரைக் கைது செய்து 62 நாட்கள் அடைத்து வைத்த மிகச் சுவையாக 'கோபு' எழுதியுள்ளார்.

2004 ஆம் ஆண்டு, வன்னியில் தலைவர் பிரபாகரன், கோபுவுக்குப் 'புலிச்சின்னம்' பொறித்த விருது வழங்கிக் கௌரவித்தார்.

நம்மவர் என்று பெருமைப்படக் கூடிய சிறந்த ஈழப் பத்திரிகையாளர் கோபு. ❖

## வாசித்துவிட்டீர்களா?



### திருமந்திரம் ஓர் அறிமுகம்

சிவத்தமிழ் வழக்கு
அறிஞரும் இலக்கிய வழக்கு
அறிஞரும் சட்ட வழக்கு
அறிஞரும் ஆன திருவாளர்
செல்லத்தம்பி சிறீக்கந்தராசா அவர்கள் இலகு தமிழிலும் எளிய முறையிலும் விளக்கி எழுதிய **திருமந்திரம் - ஓர் அறிமுகம்** வெளிவந்து விட்டது!

தொடர்புகளுக்கு: **சிறீ அண்ணன்**
வித்துவான் வேலன் இலக்கிய வட்டம்
66, Westrow Gardens, Ilford, Essex, IG3 9NF
Tel : 020 8590 9905

"திருமந்திரத் திருமுகம் காட்டும் அறிமுக ஆடியாக இந்நூல் அமைகிறது. இந்த அழகிய ஏட்டினை இனிய தமிழில் எழுதிய திறம் வியப்பினும் வியப்பிறந்தற்று."

**பத்மசிறீ முனைவர் ஔவை நடராசன், தமிழ்நாடு**

## சென்னை சைவ சித்தாந்த மாநாடு

தருமபுர ஆதீனத்தின் ஏற்பாட்டில், எதிர்வரும் 2018ம் ஆண்டு மார்ச் மாதம் 8ம் 9ம் 10ம், 11ம் திகதிகளில் சென்னை பல்கலைக்கழகத்தில், சைவ சிந்தாந்த மாநாடு நடைபெற விருக்கிறது. சென்னைப் பல்கலைக்கழகம், சைவ சிந்தாந்தப் பெருமன்றம் இணைந்து நடாத்தும் மாநாட்டு விபரங்கள் விரைவில் வெளிவரும். மாநாட்டில் பங்குகொள்ள, கட்டுரைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் தொடர்பு கொள்ள: **நடராசா சச்சிதானந்தன் (வெளிநாட்டு மாநாடு தொடர்பாளர்) 07788196426**

# LycaFly

**CALL 0207 132 32 32**
lines open **24x7**

FLIGHT BEST DEALS

# COLOMBO fr £389

## WORLDWIDE FLIGHT OFFERS

| | | | |
|---|---|---|---|
| CHENNAI | fr £361 | MELBOURNE | fr £542 |
| TRICHY | fr £512 | LOS ANGELES | fr £368 |
| KOCHI | fr £360 | TORONTO | fr £294 |
| MUMBAI | fr £340 | BANGKOK | fr £330 |
| DELHI | fr £328 | SINGAPORE | fr £330 |
| GOA | fr £360 | KUALA LUMPUR | fr £325 |

The fares above include taxes and are subject to availability.

## FREE £20 LYCAMOBILE CREDIT

When you book with us

*T&Cs Apply

Fly Now Pay Later

## FAST, FLEXIBLE, FINANCE FOR TRAVEL

Easy instalments from 3 – 10 months to pay your travel cost.

## SAVE TIME & MONEY. COME TO THE BEST & GET THE BEST

IATA

**WEMBLEY**
14 Ealing Road, Wembley,
London HA0 4TL · 0207 132 0055

**EAST HAM**
180 High Street North,
East Ham E6 2JA · 0207 132 0056

**CANARY WHARF**
Walbrook Building, 195 Marsh Wall
London E14 9SG · 020 7132 0100

9624 ATOL PROTECTED

All fares shown above are subject to availability. The Lycamobile top-up offer applies for fully paid adult return tickets and excludes Jet Airways and Emirates bookings. Top up must be redeemed within 30 days of booking. Not to be used in conjunction with any other offer. Full terms are available on our website. LycaFly reserves the right to withdraw this offer before the expiry date, without notice.



Lycaremit
Send money home for less
£5 FREE
LYCAMOBILE CREDIT
when you transfer over £300*
உலகின் எந்த நாட்டிற்கும்
மிகக் குறைந்த கட்டணத்தில்
மிகக் கூடிய பணமாற்று வீதத்தில்,
அதி விரைவாகப் பணம் அனுப்ப...
Visit www.lycaremit.com
or
one of our branches
Our branches
East Ham (Lycafly)
180 High Street North,
London, E6 2JA,
Mitcham (Food world)
117 - 119 London road,
Mitcham CR4 2JA
East Ham (Shakthi)
245-247 High Street North
London, E12 6SJ
Tooting
198/B Upper Tooting Road,
Tooting SW17 7EW
Gants Hill
639 - 643 Cranbrook Road,
Ilford, IG2 6SX
Wembley
14 Ealing Road,
Wembley HA0 4TL
Visit
lycaremit.com
For more info call
0207 132 0015
Or FREE from your Lycamobile
305
*Free £5 Lycamobile credit is available for customers who send £300 per single transaction or more with Lycaremit during the calendar month. When you register for Lycaremit, you will need to provide us with your Lycamobile number. You will receive the £5 Credit on your Lycamobile number within 3 weeks from the date of your transaction. Offer available until 30/11/2017 and available only once per month per customer. Lycaremit is a trading name of Lycamoney Financial Services Limited, and is authorised and regulated by the Financial Conduct Authority (registration number: 900153). Registered office: Walbrook Building, 195 Marsh Wall, London, E14 9SG. Company Registration number: 08662355.
LMFS
Lycamoney Financial Services Ltd